# காவேரி



427
2-53

8 அணா

நந்தன - பங்குனி

MARCH - 1953



வாயில் அணிவதால் உயரும் தோற்றம் (ந. 8)
கடாவ்
வாயில்
தி கடாவ் மகன்ஜி ஸ்பினிங் & வீவிங் கம்பனி லிமிடெட் மில் : பைகுல்லா
பம்பாய், ஆபீஸ் : லக்ஷ்மி பில்டிங், பல்லார்ட் பியர், பம்பாய். லோகல் ரிடேயில் ஸ்டோர் :
216, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோட், மதருஸ்-1
SISTA'S - KM (S) - 52




பருவங்களுடனும் பகல் - இரவின் குறிப்பிட்ட நாழிகைகளுடனும் இசைந்து வருவது இந்திய ராகங்களின் தனிச் சிறப்பு. ஒவ்வொரு ராகமும் அந்தந்த வேளையின் ரஸம் அல்லது பாவத்தை வெளியிடும் சாதனமாகும்.

தினசரி இரவிலும் பகலிலும் அந்தந்த நாழிகைக்கு ஏற்ப ராகங்கள் உருவகப்படுத்தப்படுகின்றன. அகாலத்தில் பாடும் ராகங்களுக்கு ஜீவன் போய்விடுமாம்.

# தேனீர்

இரவு பகல் எந்த வேளையிலும், எந்த நிலையிலும் தேனீர் உற்சாகம் அளிக்கிறது.

# கேதாரம்

மேலே காணும் படம், மாலை வேளைக்குரியதும், பிரிந்த காதலனை ஒரு ஆண் துறவியின் வேடத்தில் உருவகப்படுத்தும் இன்னிசையான 'கேதார' ராகத்தை காட்டுகிறது. அவள், ராத்திரியில் சந்திரன் கூட கேட்க விரும்பி காத்திருக்கும் இரங்கத்தக்க பாடல்களை அள்ளிக்கொட்டுகிறாள். தெவிட்டாத காதலின் மன நிலையையும் காட்டுகிறது.

ஸென்ட்ரல் 'டீ' போர்டாரால் வெளியிடப்பட்டது

CTB 1/5

# மலேரியா 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளைத் தீவிரமாகத் தாக்குகிறது

இவ்வாறுதான் மலேரியா நம் நாட்டிற்குக் கொடூரமான சேதத்தை நிரந்தரமாக விளைவித்துக் கொண்டிருக்கிறது.

குழந்தைகளின் வருங்கால ஆரோக்கியத்திற்கும் அறிவிற்கும் உறுதியான அஸ்திவாரம் அமைக்கப்படவேண்டிய இளம் பிராயத்தில் மலேரியா அவர்களுடைய ஆரோக்கியத்திற்கும் அறிவிற்கும் தீங்கிழைக்கிறது.

மலேரியாவிலிருந்து குழந்தைகளுக்கு வேண்டிய பாதுகாப்பை அளிக்காமலிருப்பது அவர்களுடைய வருங்கால க்ஷேமத்தையும், குடும்பத்தின் சுகத்தையும் தேசத்தின் நலனையும் புறக்கணிக்கும் பெரிய குற்றமாகும்.

உங்களுடைய குழந்தைகளை மலேரியாவிலிருந்து காப்பாற்ற அவர்களுக்கு 'பாலுட்ரின்' கொடுக்கும்படி வற்புறுத்துகிறோம்—நீங்களும் அப்பாதுகாப்பை அடையும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். 'பாலுட்ரினை' சிறு குழந்தைகளும் கர்பவதியான ஸ்திரீகளும் யாதொரு தீங்குமின்றி ஒழுங்காக உட்கொள்ளலாம். அளவு முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அபாயத்தின் சின்னங்களைக் கவனியுங்கள்:**

முதலில் குளிரால் நடுக்கம் உண்டாகும். ஜுரம் ஆரம்பமாகும். இதனால் உடம்பு முழுவதும் வியர்க்கும். தேகம் முழுவதும் வலி உண்டாகும். இந்த அறிகுறிகளை ஒரு பொழுதும் அலட்சியம் செய்யாதீர்கள்—உடனேயே டாக்டரின் ஆலோசனையைக் கேளுங்கள். மலேரியா கண்டிருந்தால், 'பாலுட்ரின்' எப்படி உங்களுடைய ஜுரத்தை சில நாட்களில் நீக்குகிறது என்பதையும் எதிர்காலத்தில் மலேரியா உங்களை அணுகாமல் எப்படி பாதுகாப்பை அளிக்கிறது என்பதையும் அவர் சொல்லுவார்.

நம்பிக்கைக்குகந்த 'பாலுட்ரின்' மாத்திரைகள் சுத்தமான, தெளிவாகத் தெரியும் காகித உறைகளில் சுற்றப்பட்டு வருகின்றன. ஒரு மாத்திரை விலை ஒரே அணா தான்.



# 'பாலுட்ரின்'

***மலேரியாவை வீழ்த்துகிறது***

## அளவுமுறை

**சிகிச்சைக்கு:** வயதானவர்களுக்கும் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஒரு மாத்திரை. 6லிருந்து 12 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அரை மாத்திரை. 6 வயதிற்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு கால் மாத்திரை விதம் தினந்தோறும் ஜுரம் குணமடையும் வரை கொடுக்கவும்.

**பாதுகாப்பிற்கு:** மேலே குறிக்கப்பட்ட அளவுகளை அனுசரிக்கவும். ஆனால் வாரம் ஒருமுறை அதே தினத்தில் சாப்பிட வேண்டியது.

ICI




எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு அதிக அளவு தண்ணீருடனோ அல்லது பாலுடனோ உட்கொள்ள வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்.

ICP 77

# காவேரி

# பொருள் அடக்கம்

நந்தன மலர் 12 | பங்குனி இதழ் 8


மத்திய ரஸ்தா ஆராய்ச்சிக் கழகம் ... ... ... 5
டில்லிவாசி

தீபாவளி அன்பளிப்பு ... ... ... ... 9
அலமேலு தாத்தம்

டில்லித் தபால் ... ... ... ... 15
கே. ஸ்ரீநிவாஸன்

போகும் பொழுது ... ... ... ... 19
விந்தியா

ஸ்ரீ எம். அனந்தசயனம் அய்யங்கார் ... ... ... 22
கே. ஸ்ரீ.

நீரோட்டம் (தொடர்கதை) ... ... ... 27
தி. சேஷாத்திரி

புத்தக விமர்சனம் ... ... ... ... 37

மனச்சாட்சி ... ... ... ... 39
ஜி. எஸ். மணி

கருணை மலர்ந்தது ... ... ... ... 46
இளம்பாரதி

பட்ணம் பார்! ... ... ... ... 50
ஆர். பி. அய்யங்கார்

சினிமாக் காட்சி ... ... ... ... 54
பெ. தூரன்

மாடிஸன் வாழ்க்கை ... ... ... ... 59
சி. வி. ராமகிருஷ்ணன்

குங்குமம் ... ... ... ... 65
என். சுப்பிரமணியம்

உதவாக்கரை ... ... ... ... 68
ரா. ஸ்ரீ. தேசிகன்

விஞ்ஞானத் துணுக்குகள் ... ... ... 70
நா. கி. நாகராசன்

லக்ஷ்ய புருஷன் (தொடர்கதை) ... ... ... 74
கே. சுந்தரராமன்


**குறிப்பு:**
'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

## முதன்மை ஸ்தானம்—நம் புராதன கௌரவம்



இந்தியா புராதன நாட்களிலே மிகவும் புகழ் பெற்றதற்கு, இந்நாட்டின் திறமையும் கற்பனையும் நிறைந்த தொழிலாளிகளும், தைரியமும் சாமர்த்தியமும் வாய்ந்த மாலுமிகளும், புத்தி கூர்மையான கணித நிபுணர்களும் தத்துவ சாஸ்திரிகளும் முக்கியமான காரணம். உயரிய நாகரீகத்தின் உயிர்ச்சின்னமாக விளங்கின சமுஸ்கிருத இலக்கியமும், விஞ்ஞானமும் இவ் உயரிய கலாசாரப் பண்பாடுகள் சுற்றியுள்ள நாடுகளுக்கெல்லாம் பரவியது இயற்கையே. இந்நாட்டின் தத்துவ ஞானம் கலை, விஞ்ஞானம் இவை யாவும் புத்துயிர் பெற்று உன்னதமாக விளங்கின. இந்தியத் தொழிலாளர்கள், சிற்பிகள் இவர்களின் சக்திக்கும் விசேஷத்திறமைக்கும் பரோபுதூர், பிரபனம். அகர்தாம் முதலிய இடங்களில் எழுப்பப்பட்ட உன்னதமான ஞாபகஸ்தம்பங்களே தக்க சான்றாகும்.

தற்சமயம் நம் நாட்டின் நன் நோக்கங்களும் பண்பாடுகளும் உலகத்தின் பல பாகங்களில் பரவி வருகின்றன. தொழில் துறையில் மிகப் பெரிய திட்டங்கள் உலகத்தின் கவனத்தைப் பெற்று நமக்கு ஏராளமான புகழையும் அளித்து வருகின்றன. இவ்விந்திய மறுமலர்ச்சியில் டாடா எஃகு ஓர் இன்றியமையாத பொருள்.

**தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பனி லிமிடெட்**

TN. 3015




மத்திய போக்கு வரவு சாதன ரஸ்தா ஆராய்ச்சி நிலையம்- டில்லி.

# மத்திய ரஸ்தா ஆராய்ச்சிக் கழகம்

டில்லிவாசி

சென்ற வருஷம் நான் சென்னை மாகாணத்துக்கு வந்திருந்தபொழுது கும்பகோணம் வரவேண்டியிருந்தது. தஞ்சையிலிருந்து கிளம்பும் ரயில் போய்விட்டதால் பஸ் மூலம் சீக்கிரம் போய்விடலாம் என்று என் நண்பர் சொன்னார். சரியென்று நானும் ஒப்புக்கொண்டேன். கும்பகோணம் அடைந்ததும் என் நண்பரிடம் சொன்னேன்: "ஆண்டவனே, நீங்கள் பஸ் மூலம் சீக்கிரம் **போய்விடலாம்** என்று சொன்னீர்கள், உண்மையில் திரும்பி, பஸ் மூலம் தஞ்சைக்குப் போவதாக இருந்தால் கட்டாயம் சொர்க்கம் போய்விடுவேன்" என்றேன்.

அப்பப்பா, என்ன குண்டுகள், என்ன குழிகள், என்ன புழுதி! கப்பி ரோடு என்றால் நான் வேஷ்டியைத் தூக்கி முட்டுவரை கட்டுவது வழக்கம். ஆனால் பஸ் புழுதியைக் கிளப்பி நம் கண் மூக்கு வாய் எல்லாம் அடைக்கும்பொழுது என்ன செய்வது?

அப்பொழுதுதான் டில்லிக்குப் பக்கத்து மாகாணமான பஞ்சாப்பை வாழ்த்தினேன். உண்மையில் டில்லியில் கூட ரோடுகள் மோசம். ஆனால் டில்லியின் எல்லையைத் தாண்டிவிட்டால் பாட்டியாலா வரைக்கும் கண்ணை மூடிக்கொண்டு வண்டியை விடலாம். சமீபத்தில் நான் பாட்டியாலாவுக்குச் செல்ல நேர்ந்தது. காலையில் மூன்று மணிக்குக் கிளம்பினால் சுமார் ஆறரை மணிக்குப் போய்விடலாம் என்று திட்டம் (டில்லிக்கும் பாட்டியாலாவுக்கும் 130-மைல்). வண்டியில் ஏறி, சாய்மானத்தில் சாய்ந்ததும் தூக்கம் வந்துவிட்டது. வண்டி நின்றதும்தான் விழித்துக் கொண்டேன். மணி ஐந்துகூட ஆகவில்லை. "நாம் அம்பாலாவுக்கு வந்துவிட்டோமா?" என்று கேட்டேன். அம்பாலா சுமார் 100 மைல் டில்லியிலிருந்து, "இல்லை, பாட்டியாலாவுக்கு வந்துவிட்டோமே" என்றான் டிரைவர். இதிலிருந்து பார்த்துக்கொள்ளுங்கள் ரோடு எப்படி இருக்கும் என்று. ரஸ்தா சிலேட்டுப் பலகை மாதிரி வழ வழவென்று ஒத்தாற்போல இருக்கும்.

ரோடுகள் ஒரு தேசத்தின் முன்னேற்றத்தைக் காட்டும் குறிக்கோள். இது தெரியாமலா 4000 வருஷங்களுக்குமுன்கூட நமக்கு முன் வாழ்ந்த முன்னோர்கள் நல்ல ரஸ்தாக்களை அமைத்தார்கள். பழைய காலத்தில் ரஸ்

தாக்களும் ராஜபாட்டைகளும் இருந்தன என்பதற்கு ஹரப்பா, மோஹஞ்சதாரோ முதலிய இடங்களில் வெட்டி எடுக்கப் பட்ட சரித்திரச் சின்னங்களே ஆதாரம். சரித்திரத்தில் உள்ள சமீப காலத்தில் அசோகர், ஹர்ஷர், அக்பர் முதலிய சக்கர வர்த்திகள் எப்படி ராஜபாட்டைகள் அமைத்தார்கள் என்பது பிரபலம்.

சரித்திர காலத்திலிருந்து இப்பொழுது வரை எவ்வளவு நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன? ஆனால் அக்பர் காலத்தில் கட்டப்பட்ட ரஸ்தாக்களைவிட ஒன்றும் உயர்வாக இல்லை இன்றுவரை அமைக்கப்படும் ரஸ்தாக்கள்.



ஆராய்ச்சியில் ஆழ்ந்துள்ள பரிசோதகர்கள்

முக்கியமாக, சிறு நகரங்களில் நல்ல ரோடுகள் இல்லாமல் இருக்கின்றன. கிராமங்களைப் பற்றியோ கேட்கவேண்டியதில்லை. உதாரணமாக, என் கிராமம் தஞ்சை ஜில்லாவில் உள்ள கண்டமங்கலம். திருவையாறு (கண்டியூர்) திருக்காட்டுப்பள்ளி ரஸ்தாவின் அருகே உள்ளது. அந்த ரஸ்தாவிலிருந்து கிராமம் சுமார் அரை மைல். ஒற்றை மாட்டு வண்டிக்காரன் நம்மை வைவதற்குப் பதில் மாட்டைப்பற்றி மானாவாரியாகத் திட்டுவான். இந்த அரை மைல் புழுதியுள்ள ரோட்டில் நூறு நொடிகள், மழைக் காலத்தில் ரோட்டை உழுது நெல் விதைக்கலாம். இதற்குக் கப்பி போடவேண்டும் என்று கிராமத்தார்கள் சில தலைமுறைகளாகத் தலைகீழாக நின்று பார்த்துவிட்டார்கள். ஜில்லாபோர்டு அசையவில்லை. ஏன்? பணம் கிடையாதாம்!

இந்த விதமான அழுகையை நிறுத்தத்தான் மத்திய ரோடு ஆராய்ச்சிக் கழகம் அமைக்கப் பட்டிருக்கிறது. இதன் முக்கிய அலுவல்கள் என்னவென்றால், ரோடு போடும் பொருள்கள் குறித்தும் செப்பனீடு குறித்தும் ஆராய்ச்சி, பலவகை ரோடுகள் போடுவதற்கு வேண்டிய பலவித முறைகள் தயாரிப்பு, ரோடுகள் நிலைமையைப் பரிசோதிக்க மலிவான முறை, எல்லாவித சீதோஷ்ண நிலையையும் சமாளிக்கக்கூடிய ரோடுகளைக் கிராமாந்தரங்களில் அமைப்பது பற்றிப் பூமியைக் குறித்துப் பரிசோதனை, தார் ரோடு அமைப்புபற்றிப் பலவித நிலைகளில் ஆராய்ச்சி, **அங்கங்கே கிடைக்கக்கூடிய பொருள்களை வைத்துக்கொண்டு மிகக் குறைந்த செலவில் ரஸ்தாக்கள் அமைப்பது.**

ரஸ்தாக்கள் போடுவதில் மட்டும் நம் தேச நிர்வாகம் சொக்கனுக்குச் சட்டியளவு என்ற குருட்டுக் கொள்கையைக் கைப் பிடித்து வந்திருக்கிறது. டில்லிக்குப்பக்கம் சிகப்புக்கற்கள் மலிவு என்பதனால் செங் கோட்டையைச் சிகப்புக்கற்களால் கட்டினார்கள் என்றால் நம் ஊரில் சிகப்புக்கற்களைக் கொண்டுதான் ஒரு சின்னம் எழுப்புவது என்பது எவ்வளவு முட்டாள்தனம்? ஆகவேதான் ரோடு விஷயத்திலும் அங்கங்குக் கிடைக்கும் வஸ்துக்களைக்கொண்டு ரோடு போடுவதுபற்றி ஆராய்ச்சி நடக்கப் போகிறது.

மத்திய ரோடு ஆராய்ச்சிஸ்தாபனம் டில்லியிலிருந்து ஏழாவது மைலில் டில்லி-மதுரா ரஸ்தாவில் நிறுவப்பட்டிருக்கிறது, இதை இங்கு அமைத்ததற்குக்காரணம் இங்கே சகல விதமான வண்டிகளும், உச்சிவரை நிரப்பப் பட்ட லாரிகள் முதல் சிறிய கார்கள்வரை, இந்த ரஸ்தாவை உபயோகப் படுத்துகின்றன. ஆகவே ஆராய்ச்சிக்கு வேண்டிய வண்டிப்புழக்கம் இங்குஉள்ளது. தவிர டில்லியைச் சுற்றிச் சகலவிதமான ரஸ்தா அமைக்கும் கற்கள் கிடைக்கின்றன.

ஆராய்ச்சி ஸ்தாபனம் 31-ஏக்கர் பரப்பு உள்ள ஜாகாவில் கட்டப்பட்டிருக்கிறது. டாக்டர் பட்நகர் தலைமையில் கட்டிய ஸ்தாபனத்தில் எதிலும் கட்டிடம், மற்ற ஆராய்ச்சி அறைகள் அங்கமாக இருக்கும்.

அதேபோல் பகட்டாக அமைந்த இந்த ஸ்தாபனத்தில் ஓர்க்ஷாப், மியூஸியம், ஆராய்ச்சி அடைப்புகள், லைப்ரரி முதலியன உள்ளன. நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்ட ஆராய்ச்சி விடுதியில் யந்திரங்கள், ஆராய்ச்சிக்குட்பட்ட கற்கள், மண்கள் முதலியன, தார், தாருடன் கலக்கப்பட்ட ஜெல்லி இவைகள் உள்ளன. சீதோஷ்ணம், மழை, போக்கு வரத்தின் தராதரம் முதலியவைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்து இன்ன இடங்களுக்கு இன்னவிதமான ரஸ்தாக்கள் தேவை என்று நிர்ணயிக்கப்படும். அந்தப் பிரகாரம் ஒரு துண்டு ரஸ்தா செய்யப்பட்டு அதன்மேல் பளுவான வண்டிகள் இலேசான வண்டிகள் இவைகளை ஓட்டி அவைகள் போவதால் ரஸ்தா எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்று கண்டு பிடிக்கிறார்கள். இந்தச் சோதனைக்கென்றே மெயின் ரஸ்தாவிலிருந்து ஒரு குட்டி ரோடு ஸ்தாபனத்தின் மூலமாக அமைக்கப்பட்டு மறுபடியும் மெயின் ரஸ்தாவில் ஒட்டிக்கொள்கிறது. ஸ்தாபனத்தின் ஆராய்ச்சிச் சாலைக்குள் உள்ள ஒரு துண்டு ரஸ்தா கிட்டத்தட்ட ஒவ்வொரு வாரமும் புதிது புதிதாக அமைக்கப்பட்டு, அது பொது ஜனங்களின் வண்டிகள் மூலம் "டெஸ்ட் செய்யப்படுகிறது. என்று "டெஸ்ட்" செய்யவேண்டுமோ அன்று வண்டிகள் குட்டி ரஸ்தா மூலம் திருப்பப்படுகின்றன.

ஸ்தாபனத்தின் டைரக்டர் டாக்டர் எர்னஸ்ட் ஸிப்கிஸ், பிரசித்தி பெற்ற ஸ்விட்ஸர்லாந்து தேச ரோடு என்ஜினியர். அவர் உதவி டைரக்டரான டாக்டர் ஆர். கே. எஸ். ஐயங்கார் அவர்களே இந்த ஸ்தாபனம் அமைக்க 1947 முதல் முயற்சிகளில் ஈடுபட்டவர்.

இந்தமாதிரி ஸ்தாபனம் ஒன்று தேவை என்று 1943-இல் நாகபுரியில் கூடிய மாகாண என்ஜினியர்கள் ஒரு திட்டம் தயாரித்தார்கள். 1945-இல் டாக்டர் பட்நகரின் ஊக்கம் காரணமாக டாக்டர் ஐயங்கார் திட்டமிடும் டைரக்டராக நியமனம் செய்யப்பட்டு 1950-இவ் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு, தற்காலிக கட்டிடத்தில் வேலையைத் தொடங்கியது.



Director Dr. Ernst Zipkes-ம் Asst. Director (planning) Dr. R. K. அய்யங்காரும்.

ரோடுகள் எந்தத்தேசத்திற்கும் முன்னேற்றத்தின் அறிகுறி என்றேன் அல்லவா? இந்தியாவில் ஒவ்வொரு சதுர மைல் பிரதேசத்திற்கும் ஒன்றேமுக்கால் பர்லாங் நீள ரோடு தான் உள்ளது. இதில் மூன்றில் ஒன்று தான் மோட்டார் போக லாயக்குள்ளது. மொத்தத்தில் 11லக்ஷம் சதுரமைல் கொண்ட நம் தேசத்தில் $2\frac{1}{2}$ லக்ஷம் மைல் ரோடுகள் தான் உள்ளன.

94,000 சதுர மைல் விஸ்தீரணம் உள்ள பிரிட்டனில் இரண்டு லக்ஷம் மைல் ரோடு

ஆராய்ச்சியை ஒட்டி அதற்குச் சாதகமான புஸ்தகங்களை இந்தப் புஸ்தகாலயம் சேகரிக்கும்



களும், 30 லக்ஷம் சதுரமைல்கொண்ட அமெரிக்காவில் 30 லக்ஷம் மைல் நீளம் ரோடுகளும் இருக்கின்றன.

ஜனத்தொகையைக் குறியாகக் கொண்டு பார்த்தால் ஒவ்வொரு ஆயிரம் பேர்களுக்கு இந்தியாவில் ஆறு பர்லாங்குகள் ரஸ்தாவும், பிரிட்டனில் மூன்றரை மைல்களும், அமெரிக்காவில் 21-மைல்களும் உள்ளன.

நாம் இந்த விகிதாச்சாரம் மாதிரி பேச முடியாவிட்டாலும் குறைந்த பக்ஷம் இந்தியாவில் நான்கு லக்ஷ மைல் ரோடுகளாவது வேண்டும் என்பது ரோடு என்ஜினியர்கள் கனவு. ஸ்தாபனத்தைத் திறந்த பண்டித நேரு சொன்னார்: கிராமங்கள்தான் தேசத்தின் ஜீவநாடி. இவைகளில் உள்ள வாயற்ற ஜீவன்களுக்குப் போக்குவரத்து வசதியளிக்க வேண்டும். மோட்டார் உள்ளவர்கள் எப்பொழுதும் சத்தம்போடக் கூடியவர்கள்.

ரோடு ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் வேலை மூலம் முதல்காரியமாகக் கண்டபடி தார் முதலிய விலை உயர்ந்த வஸ்துக்களின் இறக்குமதி நிறுத்தப்படும். எல்லா இடத்திற்கும் ஒன்று தார் ரோடு அல்லது கான்கிரீட் ரோடு என்ற "மனுநீதி" நீங்கும். அந்தந்த மாகாணத்துக்குகந்த ரோடு, அமைக்கும் விதிகள் ஏற்படும். முடிவில் நானும் கும்பகோணத்திலிருந்து தஞ்சைவரை பயமில்லாமல், எலும்பு ஒடியாமல் பஸ்ஸில் பிரயாணம் செய்யலாம் என்று நம்புகிறேன்.

கான்கரீட்ரோடு செய்வித்து அதன் பலப் பரீக்ஷைக்காக முஸ்தீப்பு நடக்கிறது



மாதம் பணம் வந்தப்புறம் புடவையைப்பற்றிப் பார்த்துக்கொள்ளலாமே', என்ருள் சமாதான மாக.

'நாளும் கிழமையுமாகப் புடவையை வாங்கி உடுத்திக் கொள்ளாமல் வேறு எப்பொழுது உடுத்திக் கொள்வதாம்! நான் சொல்லியதைக் கொஞ்சம் கேட்டுவிட்டால்தான் என்னவாம்?' என்று சீறினன். அப்பொழுதெல்லாம் அவ னுக்கு கினைத்தால் முணுக்கென்ருல் கோபம் வந்துவிடும்.

ஆத்திரத்தில் என்ன சொல்லுகிருேம் என்று அறியாமலே, 'எப்படியாவது அன்று அவளுக்கு ஒரு புதுப்புடவையை வாங்கிக்கொண்டுதான் வீட்டிற்குத் திரும்புவேன்', என்ற சபதத்துடன் வெளியேறினன் இரத்தினம்.





என்ன வேடிக்கையான மனிதன் அவன்! அன்பைக் காண்பிப்பதற்கு என்ன விசித்திரமான வழி!

இரவு வெகுநேரப்வரை அவனுக்காகச் சாப் பாட்டை வைத்துக்கொண்டு காத்திருந்தாள் சாவித்திரி.

'என்ன விசித்திரமான மனுஷ்யராக இருக் கிருர்! இப்பொழுது எனக்குப் புதுப்புடவை இல்லாவிட்டால் என்ன. கோபம் தணிந்து வீட் டிற்கு வர இன்னும் எத்தனை நாழி ஆகுமோ? விடிந்தால் தீபாவளி'', என்று கவலையுடன் யோசித்து உட்கார்ந்திருந்தாள் சாவித்திரி.

கடைசியாக இரத்தினம் வீடுதிரும்பும்பொழுது இரவு மணி பதினென்றிற்கு மேல் ஆகிவிட்டது. வந்ததும் வராததுமாக; 'இதோ பார்' என்று ஒரு காகிதப்பொட்டலத்தைப் பெஞ்சியின்மேல் எறிந் தான்.

அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தாள் சாவித் திரி. அதில் பளபளவென்று மின்னும் புதுப் புடவை ஒன்று இருந்தது. அளவு கடந்த ஆச்சர் யத்துடன்,

"இது ஏது? என்ன விலை?" அதில் இருந்த விலைப் பத்திரத்தைப் பார்த்து, "அடேயப்பா! ஐம்பது ரூபாயா? இதை எப்படி வாங்கினீர்கள்?" என்று கேட்டாள் சாவித்திரி.

* * *

கோபத்துடன் 'படீ'ரென்று கதவை மூடிக் கொண்டு வெளிக் கிளம்பியதிலிருந்து ஆத்திரத்தில் அவன் செய்துகொண்ட சபதத்தை நினைத்தவாறே சற்று நேரம் நடந்து கொண்டிருந்தான் இரத்தினம். குளுமையான, வெட்டவெளிக் காற்று, அவன் முகத்தில் சற்று நேரம் பட்ட பின்புதான், அந்தச் சபதம் நிறைவேற்ற இயலாத சபதம் என்பதை உணர்ந்து கொண்டான்.

பெரிய ஏமாற்றத்துடனும், எரிச்சலுடனும் இன்னும் சற்றுத்தூரம் உலாவிக்கொண்டே சென்றான்.

தெருவிலிருந்த 'பஸ் ஸ்டாப்பில்' ஒரு பஸ் வந்து நின்றது. ஒருவித யோசனையும் இன்றியே எல்லோரும் ஏறிக்கொள்ளும்பொழுது அவனும் பஸ்ஸில் ஏறிக்கொண்டான்.



கடைத்தெருக்களிலும், வீடுகளிலும் வெளிச்சங்களும், விளக்குகளும் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. போய்க் கொண்டிருந்த தெருக்களில் சில இடங்களில் வாண வேடிக்கைகள், பட்டாஸ் வெடிகள் அவைகளையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டே பஸ்ஸில் போய்க் கொண்டிருப்பது, அவன் ஏமாற்றத்தையும், எரிச்சலையும் சற்றுத் தணித்து, மனதிற்குச் சற்று அமைதியைக் கொடுத்தது.

பஸ் கண்டக்டர் டிக்கெட்டிற்கு வந்தபொழுது பஸ் கடைசியாகப் போய் நிற்கும் இறுதி இடத்திற்கு டிக்கெட் வாங்கிக் கொண்டான் இரத்தினம்.

பஸ் டெர்மினஸை (Terminus) அடைவதற்கு இன்னும் இரண்டு ஸ்டாப்புகள் இருந்தன. அதற்குள்ளாகவே, ஆனால், பஸ் காலியாகிவிட்டது, கண்டக்டரையும், இரத்தினத்தையும் தவிர மற்ற எல்லோரும் இறங்கிப் போய்விட்டார்கள். கடைசியாக டெர்மினஸ் வந்தும் இரத்தினம் இறங்காமல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, கண்டக்டர், பஸ்ஸுக்குப் பின் புறத்தில் பெயர் பலகையை மாற்றிக் கொண்டே, "ஸார், டெர்மினஸ் வந்துவிட்டது" என்று நாசூக்காகத் தெரிவித்தான்.

திடுக்கிட்டு விழித்துக்கொண்டு எழுந்தான் இரத்தினம். இறங்குவதற்காக எழுந்து அவன் ஒரு அடிகூட எடுத்து வைத்திருக்கமாட்டான். அவன் காலடியில் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்த, புதிய, பச்சை நிற மணிபர்ஸ் ஒன்று கிடந்தது.

இரத்தினம்குனிந்து அதைஎடுத்துப் பார்த்தான். புதுப் பர்ஸிற்குள், கத்தையாக ஒரு பத்து பதினைந்து நோட்டுக்களும், கொஞ்சம் சில்லறையும் இருந்தன. புதுபர்ஸ் வாங்கிய மவுசு போலிருக்கு. இடதுபக்கம் இருந்த விலாஸ அறைக்குள், மைகா காகிதத்திற்கடியில் அழகான எழுத்துக்களில் எழுதப்பட்ட, பர்ஸின் சொந்தக்காரரின் விலாசக் கார்டு இருந்தது.

சில விநாடிகள் மனச்சாட்சியுடன் போராடிவிட்டு, பஸ்ஸிலிருந்து கீழே இறங்கினான் இரத்தினம். மறுபடி கடைத் தெருப் பக்கம் போகும் பஸ் ஒன்றைப் பிடித்தான், அவன் போகும் பொழுது, கடைத்தெருவில் கடைகளை எல்லாம் மூடிவிட்டார்கள். ஏதாவது ஒரு ஜவுளிக் கடையாவது திறந்து இருக்காதா என்று ஆவலுடன் நிறையச் சுற்றி அலைந்து பார்த்தான். அதிக நேரம் அலைந்த பிறகு அவனைப் போன்ற கடைசி நிமிஷத்தில் வாங்குபவர்களுக்காக வென்றே, அந்தவேளையில் இரகசியமாகத் திறந்துவைத்திருப்பதுபோல், கடையின் ஒற்றைக் கதவை மாத்திரம் திறந்துவைத்துக் கொண்டிருந்தார் ஒரு ஜவுளி வியாபார சேட்.

புடவையை வாங்கிக்கொண்டு அவன் திரும்பும் பொழுது, பஸ்களெல்லாம் நின்றுவிட்டன. பிறகு அவன் அத்தனைதூரம் நடந்துதான் வீடுவந்து சேரவேண்டி இருந்தது.

* * *

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு சாவித்ரி, 'அந்தப் பர்ஸிலிருந்த ரூபாயிலிருந்தா புடவை வாங்கினீர்கள்?' என்று கலக்கத்துடன் விசாரித்தாள்.

'அதனால் என்ன? நான் எப்படியும் கடனாகத்தானே வாங்கி இருக்கிறேன். எனக்கோ அவனுடைய விலாசம் தெரியும். அப்புறம் பணம் வந்தவுடன் அவன் கடனைத் தீர்த்துக்கொண்டால் போச்சு', என்று பதிலளித்தான்.

‘இருந்தாலும்……………’

‘கவலைப்படாதே. எனக்கு வேலை கிடைத்தவுடன் முதலில் இந்தக் கடனைத்தான் நான் தீர்ப்பேன். என் மனைவிக்கு நான் அருமையாக வாங்கிக் கொடுத்த ‘தீபாவளிப் பரிசு,’ வேறு ஒருவன் பணத்தைக்கொண்டு என்பதை நான் அதிகநாள் நினைத்துப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அதோடு இந்தப் பர்ஸ் என்கையில் சிக்கி இருக்காவிட்டால் வேறு யார் கையிலாவது நிச்சயம் சிக்கி இருக்கும். நானாவது இந்தப் பணத்தை இன்றைக்கில்லாவிட்டாலும் என்றைக்காவது திருப்பிக் கொடுத்துவிடுவேன். ஒரு விதத்தில் பர்ஸைத் தொலைத்தவனுக்கு அதிர்ஷ்டம்தான்’, என்று சமாதானம் கூறினான்.

அந்தப் புடவையின் அழகும், அதன் ஜரிகையின் பளபளப்பும் அவள் மனச் சாட்சியைச் சுலபமாக வென்றுவிட்டன. அவனும் விவாதம், நம்பிக்கை, முகஸ்துதி இவைகளினால், அவன் மனதைச் சமாதானம் அடையச்செய்து கொண்டான்.

அவன் நம்பி இருந்தபடியே, அவனுக்குச் சீக்கிரத்தில் ஒரு நல்ல உத்தியோகம் கிடைத்தது. இரத்தினம் இப்பொழுது பெரிய பதவியிலிருக்கும் அதே கம்பெனியில்தான். அந்த வேலை கிடைத்தது பற்றி ‘அதிர்ஷ்டம், அதிர்ஷ்டம்,’ என்று சொல்லாத தெரிந்தவர்கள் பாக்கி கிடையாது.

முதல் சம்பளம் வாங்கிய அன்றைக்கே,

"சாவித்ரி, நான் இன்றைக்கு உன் தீபாவளிப் புடவைக்காக வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்போகிறேன். நான் பர்ஸின் சொந்தக்காரருக்கு இப்பொழுது ஒரு கடிதம் எழுதிப்போடப்போகிறேன்", என்று அறிவித்தான்.

சற்று நேரம் கழித்துக் கடிதத்தை முடித்தவுடன் சாவித்ரியைக் கூப்பிட்டு, அவளிடம் அதைக்கொடுத்து, சரிதானா என்று கேட்டான்.

சாவித்ரி கடிதத்தை வாங்கிப் படிக்கலானாள்.
அன்புள்ள ஐயா,

நான் முன்பு ஒரு சமயம் உங்களிடமிருந்து ஒரு ஐம்பது ரூபாய் கடன் வாங்கி இருந்தேன். நீங்கள் அன்றைக்கு எனக்கு அந்தத் தொகையைக் கொடுத்து உதவியது, நான் என்றென்றைக்கும் மறக்கமுடியாத ஒரு பேருதவி. சௌகரியப்பட்ட என்றைக்கு வந்தாலும், நான் அந்தத் தொகையை மகிழ்ச்சியுடன் திருப்பித் தந்து விடுகிறேன்.

முன்பின் தெரியாத இவனுக்கு எப்பொழுதடா கடன் கொடுத்தோம் என்று யோசிக்கிறீர்களா? உங்களுக்கு அதைப்பற்றித் தெரிந்திருக்காது. தீபாவளிக்கு முதல்நாள் இரவு நீங்கள் பஸ்ஸில்



அஜந்தா
சித்திரங்கள்

அஜந்தா ஓவியங்களில் காணப்படும் வனிதாமணிகளின் வனப்பும் தேக அமைப்பும் இன்றைய ஸ்த்ரீகள் பலரிடத்தில் காண்பதரிதாயிருக்கிறது; வீறு பெற்ற தாய்மைக்கு லாயக்கற்றவர்களாயுள்ளனர் பலர்.

அருணாவை அனுதினமும் உபயோகித்தால் ஸ்த்ரீகளின் கர்ப்பாசய கோளாறுகளனைத்தும் தீர்ந்துதிடகாத்திரமும் தூய்மையான தாய்மையும் ஸித்திக்கும்.

அருணா

கர்பாசயரோக நிவாரணி

கர்பாசய ரோகங்களை நிவர்த்தித்து, பெண்மைக்குப் பெருமையளிக்கும் ஔடதம்.

ஆயுர்வேதாச்ரமம் லிமிடெட்.
சென்னை 17.

போட்டு விட்டுப் போன பர்ஸை நான் கண்டு எடுத்தேன்.

நீங்கள் அன்று எனக்கு உதவிய பணத்தைக் கொண்டுதான், நான் என் மனைவிக்குத் தீபாவளிப் புடவை வாங்கிக்கொடுத்தேன். அந்தப் புடவை அவளுக்கு ரொம்ப பொருத்தமாக இருந்தது. ஆனால் அவளுக்குப் பொருந்தாத புடவைதான் எது?

அவளைப்பற்றி இன்னொரு விஷயம். எல்லோரையும்போல், நாளுக்குநாள் அவளுக்கு வயது அதிகம் ஆகிக்கொண்டு போவதற்குப் பதிலாகக் குறைந்து கொண்டுதான் போகிறது. வருஷங்கள் அவளுடைய இளமையைத்தான் அதிகரிக்கின்றன. அவளைப்பார்த்தால், அவள் மூன்று குழந்தைகளுக்குத் தாயார் என்று சொல்லவே முடியாது. அதனால்தான் அவளுக்குப் புதுப் புடவை வாங்கிக் கொடுக்காமல் என்னால் இருக்க முடியவில்லை. அவளால் எப்படி அவ்வாறு நித்திய சுந்தரியாக இருக்க முடிகிறது, அவள் என்ன செய்கிறாள்? என்று என்னைக் கேட்காதீர்கள். அது தான் எனக்கும் தெரியாது; அது அவள் இரகசியம்.

இப்படிக்குத் தங்கள் நன்றியுள்ள,

இரத்தினம்.

கடிதத்தின் கடைசிப் பகுதியைப் படித்துவிட்டு,

"நன்றாக இருக்கு. யாரோ ஒரு முன் பின் தெரியாதவனுக்கு இப்படியா எழுதுவது?" என்று கடிந்துகொண்டாள் சாவித்திரி.

"ஏன் எழுதினால் என்னவாம். உண்மையைத் தானே எழுதி இருக்கிறேன்", என்று அவளை இன்னும் சீண்டினான்.

'போதுமே', என்று அவள் அதைக் கசக்கி எறிவதற்குப் போகுமுன் அவள் கையிலிருந்து கடிதத்தைப் பிடுங்கிக்கொண்டுவிட்டான் இரத்தினம்.

'அதைக் கசக்காதே. இந்தக் கடிதம் பத்திரமாக வைத்துக் காப்பாற்றுவதற்காக, என் மனைவிக்கென்று நான் பிரத்யேகமாகத் தயாரித்த 'காபி'. நான் ஆபீஸிலிருந்தே அந்தப் பர்ஸ் ஆளுக்கு எழுதிப் போட்டுவிட்டேன். இந்தக் கடிதம் உனக்கு. நீ பத்திரமாக வைத்துக் கொள்ளுவதற்கு", என்று விவரித்து அவளிடம் மறுபடி கடிதத்தைத் திருப்பிக் கொடுத்தான்.

இரண்டு நாட்கள் கழித்துப் பர்ஸுக்குச் சொந்தக்காரன் வந்து பணத்தை வாங்கிக்கொண்டு போனான். அவன் ஒரு இருபத்து ஐந்து வயது இளைஞன்; ஆகையால் அவன் இரத்தினத்தைத் தவறாகப் புரிந்து கொள்ளாமல், நிறைய வந்தனங்களுடன் பர்ஸைத் திரும்பப் பெற்றுக்கொண்டு அவனுடைய நீடித்த சிநேகத்தையும், நன்றியையும் வாக்களித்துவிட்டுப் பிரிந்தான்.''

* * *

அந்தப் பழைய சம்பவங்களெல்லாம் நேற்று நடந்தவை போல் அவ்வளவு தெளிவாக ஞாபகம் வந்தன சாவித்திரிக்கு.

மாடியில் போய், தன் 'கோத்ரேஜ்' பீரோவைத் திறந்தாள். அதில் அவள் கணவன் அந்தத் தீபாவளிக்கு வாங்கிக் கொடுத்த வெங்காயக்கலர் புடவை இருந்தது அந்த வெங்காயக் கலர் புடவையை உடுத்திக் கொள்ளுவதிலிருந்த மகிழ்ச்சி அவளுக்கு வேறு எதிலும் இருந்ததில்லை. அது இப்பொழுது சல்லடைக் கண்களாகக் கிழிந்து போய்விட்டது. இருந்தும் அந்தப் புடவையை அவள் பீரோவில் பத்திரப் படுத்தி வைத்திருந்தாள். பிறகு பீரோவின் பந்தோபஸ்து அறைக்குள் ஒரு தந்தப் பெட்டியிலிருந்த அந்த அதிசயக் கடிதத்தை எடுத்தாள். அந்தப் பழுப்பு அடைந்த கடிதத்தை மறுபடி ஒருமுறை படித்துப் பார்த்தாள்.

சற்று நேரம் கழித்து மீராவின் சிநேகிதி போய்விட்டாள் என்று தெரிந்தது. மீராவிடம் போய் அந்தச் சம்பவத்தைச் சொல்லி,

"எங்கள் வாழ்க்கை ஒரே மாதிரியாக, சம்பவமற்று, சாரமற்றதாக இருக்கும் என்று என்னமோ சொன்னாயே. கல்யாணமாகி எட்டு வருஷங்கள் கழித்து இந்த மாதிரி எங்களைப் போல் உங்களால் ஒரு தீபாவளி கொண்டாட முடியுமா?" என்று கேட்கவேண்டும் என்று நினைத்தாள். சாவித்திரி மீராவைப் பார்க்கக் கீழே இறங்கி வந்தாள்.

ஹாலில் மீரா ரேடியோவைத் திருப்புவதில் முனைந்திருந்தாள்.

''மீரா''

"என்னம்மா" என்று கேட்டுக் கொண்டு அவளைப் பார்த்துத் திரும்பினாள் மீரா.

மீரா அவளை அப்படி நேராக நோக்கியதும், அவளுடைய எண்ணமெல்லாம் பறந்து விட்டன. அந்த ஒரு க்ஷணத்தில், தன்னைப்பற்றிய அந்த விஷயங்களை யெல்லாம், தன் பெண்ணிடம், கூச்சமில்லாமல் ஒரு நாளும் பேச முடியாது என்பதை உணர்ந்து கொண்டாள். அதோடு பக்கத்து அறையில் நரைத்த தலையும், வெள்ளெழுத்துக் கண்ணாடியுமாக, கௌரவமே உருவெடுத்து வந்தாற்போல் உட்கார்ந்து பேப்பர் வாசித்துக்கொண்டிருந்த அந்த மனிதரும் ஒரு காலத்தில் இளமைக்குரித்தான படபடப்பும், அசட்டுத்தனங்களும் நிறைந்த இளைஞராக இருந்தார் என்று சொல்லி, அவரை எப்படிக் காண்பித்துக்கொடுப்பது? அவர் இரகசியத்தை எப்படி வெளியிடுவது?

"ஒன்றுமில்லை... உங்காத்துக்காரருக்குப் பர்பி பிடிக்குமா? இல்லாவிட்டால் மைசூர்பாகு பண்ணலாமா? என்று கேட்டுவிட்டுப் போகலாம் என்று தான் வந்தேன்." என்றாள் சாவித்திரி.

# டில்லித் தபால்

**கே. ஸ்ரீநிவாஸன்**

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். மத்திய சர்க்கார் அடி வாங்காமலே நகர்ந்தால் மதிப்பு உண்டு. ஆனல் கட்டுப் பெட்டிகளும் நெல்லிக்காய்களும் நிறைந்த காங்கிரஸ்கக்ஷியைக் கட்டி மேய்க்கும் பண்டிதநேரு கக்ஷி அடி வாங்கும் நிலைமைவரையில் காத்திருப்பது நியாயமே.

சென்ற ஓரிரண்டு இதழ்களுக்கு முன்பு குறிப்பிட்டிருந்தேன், காங்கிரஸ் — சோஷலிஸ்ட்களுக்கு இடையே ஒத்துழைப்பு சர்க்கார் நிலை வரையில் ஏற்படலாம் என்று. அந்த ஜோஸ்யம்—கிட்டத்தட்டப் பலிக்கும் நிலைமை வந்திருக்கிறது.

சென்ற தேர்தல்கள் பண்டித நேருவின் கண்களைத் திறந்துவிட்டிருந்தன. முதலாவதாக, காங்கிரஸ்காரர்கள் நடத்தை முதலியன காரணமாகத் தேசத்தில் பல பாகங்களில் காங்கிரஸின் செல்வாக்குக் குன்றிவிட்டது என்பதை அவர் அறிந்திருந்தார். இரண்டாவதாக, காங்கிரஸுக்கு அடுத்தபடியாக அதிகப்படியான ஓட்டுக்கள் வாங்கியவர்கள் ஸோஷலிஸ்ட்கள். என்பது.

காஷ்மீரத்தைப் பற்றிய ஐ. நா. குழப்பம் ஒருபுறம் இருக்க, சிலகாலமாக வகுப்பு வாதிகள் ஷேக் அப்துல்லாவுக்கு எதிராகக் கலகம் செய்து வருகிறார்கள் அல்லவா? காஷ்மீரம் நம் கையைவிட்டுப் போகாமல் இருக்கவேண்டுமானல் வகுப்புவாதக் கக்ஷிகளின் பிரசாரத்தை எதிர்த்து ஒடுக்க வேண்டும். இதை இந்தப் பக்கங்களில் காங்கிரஸால் மட்டும் முடியாது என்று பண்டிதநேருவுக்குப் பட்டிருக்கிறது.

ஆகவே நேருஜி சென்ற சில மாதங்களாக ஸோஷலிஸ்ட் தலைவர்களான ஸ்ரீ ஜெயப்பிரகாச நாராயணர், ஆசார்ய நரேந்திர தேவா, ஸ்ரீ கிருபளானி முதலியவர்களுடன் வார்த்தைகள் நடத்திவருகிறார். ஜெ. பி. யைப் பொறுத்தவரையில் தம் கக்ஷி வகுப்பு வாதத்தை எதிர்க்கப் பின்வாங்காது என்று நேருவுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். இதற்குப் பிறகு நேருஜி ஸோஷலிஸ்ட்கள் சர்க்காரில் சேர்ந்து ராஜ்யபாரம் செய்வது சம்பந்தமாக வார்த்தைகள் நடத்தியதற்கு நல்ல பலன் கிடைத்திருப்பதாக அறிகிறேன். இந்தியாவுக்குச் சமீப காலத்தில் வந்துபோன ஸோஷலிஸ்ட் தலைவர்களான ஸ்ரீ அட்லியும் ஸ்ரீ அனூரின் பெவனும் ஸோஷலிஸ்ட் தலைவர்களைக் காங்கிரஸுடன் சேர்ந்து, சர்க்காரில் ஒத்துழைக்கும்படி புத்திமதி கூறினர்கள்.

ஸோஷலிஸ்ட் தலைவர்கள் காங்கிரஸுடன் கூட்டுச்சர்க்கார் நடத்தச் சில நிபந்தனைகள் விதிக்கிறார்கள். அவைகளுள் சில நிலச்சீர்திருத்தம், ஆகாயத்திலும் அதபாதாளத்திலும் இருக்கும் ஊழியர்கள் சம்பளங்களை ஒரு நல்ல தராதரம் உள்ள நிலைக்குக் கொண்டு வருவது, ராஜப்பிரமுகர்களுக்கு வருஷா வருஷம் கிடைக்கும் பல சுன்னங்கள் கொண்ட படியை ஒரே யடியாகக் குறைப்பது முதலியன, பண்டிதர் இவைகளுக்கு இணங்குவதால் ராஜப்பிரமுகர்களுக்குச் சர்க்கார் இது விஷயம் எழுதியிருப்பதாக வதந்தி,

நேருவின் பேச்சுவார்த்தைகள் பலிதமாகக் காங்கிரஸ் கக்ஷியின் காரியக்கமிட்டி இணங்கவேண்டும் அல்லவா? அதற்குப் பண்டிதர் சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் கூட்டுச் சர்க்கார் சமாசாரத்தை அங்குரார்ப்பணம் செய்து பேச்சுவார்த்தைகள் எந்த நிலையில் இருக்கின்றன என்று சாங்கோபாங்கமாக எடுத்துச் சொன்னார்,

உண்மைக் காங்கிரஸ்காரர்கள் சம்பந்தப்பட்டவரை அவர்களுக்கு இது விஷயமாக மிகவும் திருப்தி. காங்கிரஸ் தன் கொள்கைகளைமாற்றி அடுத்த ஐந்து வருஷங்களுக்குள் சில தீவிர சமுதாய மாறுதல்களைக் கொண்டு வந்தால் ஒழிய, தேசமும் சரி, காங்கிரஸும் சரி ஆற்றுடன் அடித்துக்கொண்டு போகப்படும் என்பதை இவர்கள் அறிவார்கள். தவிர, தமக்குப் பிறகு தேசத்தை நிர்வகிக்கக் கூடியவர் ஸ்ரீ. ஜே. பி. நாராயணனே என்று பண்டித

நேரு கருதுகிறாராம். ஆனால் இந்த அரிய தேசோத்தாரணத் திட்டத்துக்குக் கட்டை போடுபவர்கள் சுயநலம் கொண்ட காங்கிரஸ்காரர்களும் ஸ்தாபனத்துக்குள் உள்ள பண மூட்டைகளின் அனுதாபிகளுமே. தங்களுடைய சகாப்தம் முடிந்து விடுமே என்று இவர்கள் அஞ்சுவதுடன் தங்கள் நண்பர்களான முதலாளிகளும் காலி ஆகி விடுவார்களே என்று பயப்படுகிறார்களாம்.

இந்த அல்ப சொல்ப பூச்சாண்டிகளுக்கு நேரு பயப்படப்போவதில்லை. வேறு எதிர்பாராத பெரிய முட்டுக்கட்டை ஒன்றும் எதிர்வராத பக்ஷத்தில் மத்திய சர்க்காரில் குறைந்தது மூன்று ஸோஷலிஸ்ட் மந்திரிகள் கூடிய சீக்கிரம் நிர்வாகம் பார்ப்பார்கள் என்று தெரிகிறது.

* * *

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து அம்மையார் பாட்டியையும் கடித்ததாம் என்பது பழமொழி. காஷ்மீரத்தில் உள்ள பிரஜா பரிஷத் இயக்கம், இந்திய ஜன சங்கம் மூலம் அனுதாப இயக்கமாக மாறி, டில்லியில் "சத்தியாக்கிரஹமாக" முடிந்திருக்கிறது. டாக்டர் சியாமப் பிரஸாத் முகர்ஜியின் அந்தரங்கத்தை ஷேக் அப்துல்லா பிய்த்து வாங்கியதைப் பற்றி சென்ற இதழில் குறிப்பிட்டேன். அப்பொழுது டாக்டர் முகர்ஜி சொன்னார்: "நான் பண்டித நேருவுக்கு ஜம்மு இயக்கத்தை முடிப்பதுபற்றி எழுதப் போகிறேன். ஒரு மாதத்தில் ஏதும் முடிவு வராவிட்டால் சத்தியாக்கிரஹமும் சட்ட மறுப்பும் ஏற்படும்" என்று.

சமீபத்தில் டில்லியில் நான்கு உபதேர்தல்கள் டில்லி அசெம்பிளிக்கு நடந்தன. அவைகளுள் மூன்று ஸ்தானத்தை ஜன சங்க அபேக்ஷகர்கள் கைப்பற்றினார்கள். அவைகளுள் ஒன்று காங்கிரஸ் வசம் இருந்த ஸ்தானம். இந்த முடிவு ஏன் ஏற்பட்டதென்று சொல்லத் தேவையில்லை. காஷ்மீரத்தைப் பற்றிய பொய்யை ஜனங்கள் நம்பியது ஒருபுறம் இருக்க, பிரதேச காங்கிரஸூம் கொஞ்சம் திமிராகவே, "நம்மை விட்டால் யாருக்கு ஜனங்கள் ஓட்டு போடப் போகிறார்கள்?" என்று அசட்டையாக இருந்துவிட்டார்கள்.

இந்தச் சமயத்தில்தான் ஜன சங்கத்தின் கதை மறுபடியும் தொடங்குகிறது. ஊரில் அழகனைத் தேடுகிறார்கள் என்றதும் ஆந்தையும் குரங்கும் அபேக்ஷகர்களாக முன் வந்ததைப்போல ஜன சங்கமும், ஹிந்து மகா சபையும் இந்தச் சமயத்தை நாம் பயன்படுத்திக் கொண்டால்தான் அதிகாரத்தைக் கைப்பற்றச் சான்ஸ் என்று நினைத்துவிட்டார்கள்.

அவர்கள் திட்டம் தாங்கள் பஞ்சாபிலும் டில்லியிலும் தங்கள் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தால் ஜனங்கள் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டது போலப் பல்லாயிரக்கணக்கில் ஈடுபடுவார்கள். இதுவும் இதற்குக் காஷ்மீரில் ஏற்படும் எதிரொலியும் சேர்ந்து நேரு சர்க்காரைக் குழி பாய்ச்சும். இதுதான் நம் சந்தர்ப்பம் என்று இந்த அஜங்கள் எண்ணின.

ஆனால் நடந்தது வேறு விஷயம். அதை டாக்டர் முகர்ஜியும் நன்கு அறிந்திருந்தார். இப்பொழுது மிகவும் வழக்கமாகி விட்டதே ஒரு பழக்கம், அஸ்திகரைத் தலைத்தான் சொல்லுகிறேன். அதையொட்டி, காஷ்மீரில் சுடப்பட்ட "தியாகி"களின் அஸ்தியை டில்லிக்குக் கொண்டு வந்து, ஊர்வலம் நடத்தி, அதை யமுனையில் கரைப்பது ஜனங்களுக்குக் காஷ்மீரத்தைப் பற்றிய போதையைத் தூக்கிவிடும். அந்தச் சந்தர்ப்பத்தில் சிலர் சிறைப்பட்டால் இன்னும் ஜோர் என்று ஜன சங்கத்தார் எண்ணினார்கள். ஆனால் டாக்டர் முகர்ஜிக்கு மாத்திரம் ஒரு உண்மை தெரியும். பொது ஜனங்களில் 100-க்கு 95 பேர் முற்போக்குள்ளவர்கள். இவர்கள் ஜன சங்கத்தின் புரட்டுகளில் சிலவற்றை நம்பி நாசமாய்ப் போகலாம், ஆனால் இவர்கள் "சத்தியாக்கிரகம்" செய்வதில் ஈடுபடமாட்டார்கள். அருமையாக அல்லும் பகலும் அதிமதுர உண்டிகளை அருந்திவிட்டு அபர வயதில் ஜெயிலுக்குப் போக டாக்டருக்கு இஷ்டமில்லை. ஆனால் எந்தக் கக்ஷியிலும் அதித வாதிகள் உண்டல்லவா? அவர்கள் டாக்டரின் மனோ நிலையை மாற்றி அவரை 144 தடையுத்தரவை மீறச்செய்து அவரையும், டாக்டர் சட்டர்ஜி முதலியவர்களையும் சிறைக்கு அனுப்பிவிட்டார்கள்.

சர்க்காரைப் பிடித்த நல்ல காலம் ஜன சங்கத்தார் கூட்டிய ஹர்த்தாலால் அன்று திறக்காத கடை கூடத் திறக்கப்பட்டது. ஜன சங்க ஊழியர்கள் கல்லடி மங்கன் முறையைப் பின்பற்றியிருப்பதுடன் வர்த்தகர்களையும் மற்றவர்களையும் இம்சிக்க

ஆரம்பித்திருக்கிறார்கள். சர்க்கார் சாதுர்யமாகக் கொழிக்குஞ்சை அமுக்குவதுபோலத் தலைவர்கள் எல்லோரையும் சிறிது காலம் தங்கள் அதிதிகளாகச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிச் செய்யாவிடில் "இந்தியாவில் இவ்வளவு ஆதரவா வகுப்புவாதிகளுக்கு?" என்று முஸ்லீம்கள் பயந்து காஷ்மீரம் இந்தியாவின் கையை விட்டுப் போனாலும் போய்விடலாம்.

*   *   *   *

அரசியலில் நாலு மூலைத் தாய்ச்சிகள் அதிகம். எந்தப் பிரச்னையும் இதன் பிரகாரம் நான்கு மூலைகளுள் ஒன்றில் இருக்குமே ஒழிய அதற்கு ஒரு முடிவு ஏற்படாது. இந்த ரகத்தில் சேர்ந்தது ஆந்திரமாகாணப் பிரச்னை.

சென்ற நான்கு வருஷங்களாகச் சந்தி சிரிக்கும் இந்தப் பிரச்னையில் இரண்டே இரண்டு புதிய காரணங்கள் உண்டாயிருக்கின்றன. ஒன்று பொட்டி ஸ்ரீ ராமுலுவின் சாவு, இரண்டு ஜஸ்டிஸ் வாஞ்சுவின் நியமனம். இவைகளைத் தவிர ஆந்திரமாகாண காங்கிரஸ், தமிழ்மாகாண காங்கிரஸ், கேரள காங்கிரஸ் இவைகளின் தலைவர்கள், மற்ற நபர்களின் அபிப்பிராயம் மாறவில்லை.

சென்ற சில வாரங்களாக அடிபடுவது ஸ்ரீ வாஞ்சுவின் ரிபோர்ட். இந்திய சர்க்கார் இவரைக் கூட்டு மதராஸ் மாகாணத்தின் வருவாய், செலவு, சிப்பந்திகள் நிலை, பிரிவினையில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் இவைகளைக் குறித்து யாதாஸ்து தயார்செய்யச் சொல்லியிருந்தார்களே ஒழிய, தலைநகரம் விஷயமாக இவரைத் தீர்ப்புக்கூறச் சொல்லவில்லை.

ஆனால் மாகாணப் பிரிவினை சம்பந்தமாக மற்ற விஷயங்களை ஆலோசனை செய்பவர் ஒரு முக்கிய விஷயத்தைத் தனியே விடுவது அசாத்தியமானதால் தலைநகரைப் பற்றி அவருக்குத் தோன்றியதையும் அவர்முன் சமர்ப்பிக்கப்பட்ட சாக்ஷிய சாராம்சத்தையும் எத்தரப்பிற்கும் சாதகபாதகமின்றி தம் யாதாஸ்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பத்திரிகைகளில் ஸ்ரீ வாஞ்சு சென்னை நகரத்தைச் சிறிது காலத்துக்குக் கூட்டுத் தலைநகராகச் செய்யவேண்டும் என்று ஆலோசனை கூறியதாகச் சொல்லியிருப்பது தவறு. ஸ்ரீ வாஞ்சுவின் யாதாஸ்து மிகவும் ரகசியம் என்றாலும் அந்த ரிப்போர்ட் தலைநகரைப்பற்றி என்ன சொல்கிறது என்பதை அறிவேன்.

ஸ்ரீ வாஞ்சு சொல்வதாவது: தலைநகர விஷயமாக ஆந்திரத் தலைவர்கள் யாவரும் சென்னை குறைந்தது கூட்டுத் தலைநகரமாகவாவது சிலகாலம் இருக்கவேண்டும் என்கிறார்கள். ஒரு சாரார் (இவர்கள் சிறுபான்மையினர்.) சென்னை நகரத்துக்குத் தாங்கள் உரிமை கொண்டாடவில்லை என்றும் ஆனால் திடீரென்று மூட்டை கட்டிப்போவது நடக்காத காரியமானதால் தற்காலிகமாக அதாவது மூன்று வருஷங்களுக்குத் தங்க வசதி சென்னையில் வேண்டும் என்கிறார்கள்,

ஆந்திரத்தில் உள்ள பட்டணங்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். எந்தப் பட்டணமும் தலைநகராக உடனடியாக ஆவதற்கு வேண்டிய கட்டிடங்களோ மற்ற வசதிகளோ கிடையா. கடப்பை மிகவும் தண்ணீர் கஷ்டம் உள்ள இடம். விஜயவாடா, விசாகப்பட்டினம், வால்டேர் முதலியவைகளில் உள்ளதில் விசாகப்பட்டினம் தான் சிலாக்கியம். ஆனால் முன் குறிப்பிட்டதுபோல் இந்த இடங்களில் எதுவும் தலைநகருக்கு உடனடியாக லாயக்கில்லை.

ஆகவே, பிரிவினை என்று ஏற்படும்பொழுது ஆந்திரத் தலைநகரின் சில காரியாலயங்கள் சென்னையில் சிறிது காலம் இருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. ஆனால், சென்னை, பிரிவினைக்குப்பிறகு. ஒரு நாள் கூட ஆந்திரமாகாணத்தின் சார்பாகத் தலைநகராக இருக்கக்கூடாதென்று தமிழ் நாட்டுத் தலைவர்கள் ஒரு முகமாகச் சொல்லுகிறார்கள். இந்த எதிர்ப்பை ஒரு பெரிய காரணியாக எடுத்துச் சொல்லவேண்டியது தான்.

இதுதான் ஸ்ரீ வாஞ்சுவின் அபிப்பிராயங்கள். அவர் சிபாரிசோ அல்லது தீர்ப்போ கொடுக்கவில்லை என்பது இதிலிருந்து தெரியும்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள், ராஜாஜி உள்பட, சென்னை கூட்டுத் தலைநகரமாக மூன்று வருஷங்கள், இல்லை மூன்று நிமிஷங்களுக்குக்கூட இருக்கக் கூடாது என்று இந்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் எதிர்புக்கு இரு சிறந்த காரணங்கள்: தாற்

காலிகத் தலை நகரம் என்று கொடுத்தால் குறிப்பிட்ட காலவரையின் முடிவில் அவர்கள் காலி செய்யாவிட்டால் அவர்களைக் காலி செய்யச்சொல்லப் போலீஸ் நடவடிக்கை எடுக்கமுடியுமா? அடுத்தபடியாக, சென்னையில் இருக்கும் காலம் ஆந்திரர்கள் சும்மா இருக்கமாட்டார்கள், சென்னையை 'ஸி' வகுப்பு மாகாணமாக்க வேண்டும் என்று கரடியாய்க் கத்திப் பிரசாரம் செய்வார்கள்.

இந்த ஆக்ஷேபனை வாபஸ் வாங்கக் கூடாதது என்பதை ராஜாஜியும் சரி, ஸ்ரீ காமராஜும் சரி காரியக்கமிட்டியின் கூட்டத்தில் வற்புறுத்தினார்கள். வெறும் பொட்டி ஸ்ரீ ராமுலுவின் மரணத்திற்குப் பின் நடந்த கலாட்டாவைக் கண்டு பயந்தீர்களே, சென்னையைத் தாற்காலிக ஆந்திரத் தலைநகரம் என்றுமட்டும் வாய்விட்டுச் சொல்லட்டும் என்ன ரகளை நடக்கிறது என்று தமிழ் நாட்டுத் தலைவர்கள் வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

காங்கிரஸ் காரியக்கமிட்டி சம்பந்தப்பட்டவரை ஆந்திரமாகாணம் சென்னையுடன் எந்தச் சம்பந்தமும் இல்லாமல் ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்துவிட்டதாக அறிகிறேன். இனி நடக்கப்போவது இந்திய சர்க்கார் கட்டாயமாக இதுதான் தலைநகரம் என்று நிர்ணயித்து, அது சம்பந்தமான நடவடிக்கை அடுத்த இரண்டு மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்படும்.

* * * *

இந்தியப் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டு அதன்மேல் வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன. பட்ஜெட்டைப் பொறுத்தவரை அது கிட்டத்தட்டச் சென்ற வருஷ பட்ஜெட் மாதிரிதான். ஆனால் ஒரு வித்தியாசம். இந்திய கஜானாவுக்கு அடிக்கும் யோகம் ரயில்வே வருமானத்தில் மீ ரு ம் பணம் தான். இது அதிகரிக்கும். சென்ற வருஷம் எதிர்பார்த்ததற்குப் பதில் அதில் 10 கோடிக்குமேல் குறைவு ஏற்பட்டுவ் ாது. இது சர்க்கார் வட்டாரங்களில் கி 'யை உண்டுபண்ணியிருக்கிறது.

ரயில்வேயை அபிவிருத்திசெய்து, ஊழல்களை நீக்கி. வருமானத்தை விருத்திசெய்தது ஸ்ரீ என். ஜி. அய்யங்கார். வகுப்புமாற்றம் என்ற பேரில் வண்டியின் பெஞ்சுகளையும் மெத்தைகளையும் ரம்பம் கொண்டு அறுத்தாலும் ஸ்ரீ சந்தானம் உண்மையில் பல பொதுஜன வசதிகளைச் செய்துவைத்தார். அவர்களின் கெடுபிடி நிர்வாகம் போய் அப்பச்சி லால்பகதூர் கையில் இந்தப் பூமாலை சிக்கியிருக்கிறது. இவருக்குத் தோன்றுவதெல்லாம் எப்படி ஹிந்தியை ரயிலில் நுழைக்கலாம் என்பது. நண்பர் கட்டுப்பெட்டி டண்டன் யோசனைப் பிரகாரம் ஹிந்தி ரயில் அட்டவணை பிரசுரிக்கலாம். அல்லது வகுப்புக்களைக் குறிக்கும் எண்களை ஹிந்தியில் எழுதுவிக்கலாம். ஆனால் முடக்கம் காரணமாகவும், அதிகப்படி கட்டணத்தாலும் குறைந்த பிரயாணத்தையும் இவர் "இஷ்டம் போல் பிரயாணம்" முதலிய நவீன முறைகளால் சரிசெய்ய முடியாது.

ரயில்வே வருமானம் மண் என்றால் ஐந்து வருஷத் திட்டத்தைக் குறிக்கோளாகக் கொண்ட பட்ஜெட் என்ன ஆவது?

அதற்குத்தான் (deficit financing) சரிக்கட்டாத நாணயச் செலவாணி முறைகைக் கொள்ளப்படும். பொருளாதாரக் குட்டைக் குழப்ப வார்த்தைகளைவிட்டு அப்பட்டமாகச் சொன்னால் காகித நோட்டுப் புழக்கம் அதிகரிக்கப்படும், பொருள் உற்பத்தி இல்லாது காகிதப்பணம் அதிகரித்தால் விலை வாசிகள் உயரும். இதைத்தான் பணவீக்கம் என்பார்கள். நிதிமந்திரி என்னவோ இதனால் பாதகமில்லை என்றாலும் இரண்டாவது யுத்தத்தை நினைத்தால் "ஐயோ கடுதாசே" என்று அலறத்தான் வேண்டியிருக்கிறது.

# போகும் பொழுது

**விந்தியா**

இனந் தெரியாத வேதனை வாசுதேவனை ஆட்கொண்டது. பித்தம்பிடித்தாற்போல இருந்தான். காலையிலிருந்தே அவனுடைய அன்னையின் உடல்நிலை கவலைக்கு இடமாகிவிட்டது. காவேரியம்மாள் படுத்த படுக்கையாகிப் பல நாளாகிவிட்டது. அவளுக்கு வந்துவிட்ட வியாதி அவளுக்குக் காலபாசம்தான் என்பது ஒருவாறு தெரிந்த விஷயம்தான். அவன் நினைக்காவிட்டாலும் பிறருடைய அனுபவப் பேச்சு சொல்லாதா? மீண்டும் தாயார் படுக்கைவிட்டு எழுந்து நடமாடுவாள் என்று வாசுதேவன் நினைக்கவில்லை, நம்பவில்லை, உண்மைதான். ஆனால் அந்த முடிவு நெருங்கியே விட்டதோ என்ற மன உளைச்சலை அந்தப் பிள்ளை எப்படித் தாங்குவான்? 'இன்றைக்கோ, நாளைக்கோ?' என்று பேச்சுப் போக்கில் சொல்லும்போது, 'சமீபத்தில்தான்' என்று சற்று 'சாவகாசம்' தொனிக்கிறது. 'இன்றைக்குத்தானா?' என்று நிலைமை ஏற்பட்டுவிட்டதே, வாசு எப்படி வேதனை தாங்குவான்? காவேரியம்மாள் உயிருக்கு மன்றாடவில்லை. அவளுடைய மைந்தன் வாசுதான் அன்னையின் உயிருக்காக மன்றாடிக் கொண்டிருந்தான்.

எழுபத்திரண்டு வயதைத் தாண்டிவிட்டாள் காவேரியம்மாள். உயிர்மேல் ஆசை அவளுக்கு இல்லை. வயசுக்காலத்தில் சுகமாகப் போய்ச்சேர வேண்டும் என்பது அவள் அவா. இன்னும் பிழைத்திருந்தால், நடைதளர, தேகமொடுங்க, நாவுகுழற, கண்கள் மங்க, என்னென்ன அவதிப்பட நேருமோ, யாருக்குக் கஷ்டங்கள் கொடுக்க நேரிடுமோ என்பது அவள் அச்சம். வந்திருக்கும் நோய் தீரப்போவதில்லை. இந்த நோயோடு விரைவிலேயே இறைவனடி போய்ச்சேருவதுதான் அவள் விருப்பம். இறக்கக் கூசவில்லை அவள்.

ஆனால் வாசு அன்னையின் வைராக்கியத்தையோ விருப்பத்தையோ ஒவ்வவில்லை. கண்கண்ட தெய்வமாக விளங்கிய அன்னையைப் பிரியும் நினைப்பே அவனை எரித்தது. அவனுக்குப் பணம் உண்டு, பதவியுண்டு, உற்றார் உறவினர் உண்டு; அழகியான இல்லாளும் உண்டு. ஆனால் அன்னைதான் அனைத்துமாக விளங்கினாள் வாசுவுக்கு. தாயின் உயிர் ஒடுங்கிக் கொண்டிருந்ததை நினைக்க, அவன் உடலும் உள்ளமும் நடுங்கின. அன்னை படுத்திருக்கும் கட்டிலுக்கருகில் நிலையாக உட்கார்ந்திருக்க இயலாமல் அறைக்கு வெளியில் உலாவினான்.

காலை வேளையாதலால், வீட்டிலே எல்லோரும் தத்தம் அலுவல்களிலே இருந்தனர், சந்தடி இருந்த சூழ்நிலையில்; ஆனால் வீட்டிலே பயங்கரமான அமைதி நிலவுவது போலவும், பதுங்கிப் பதுங்கி மரணதேவதை ஒளிந்து நெளிந்து திரிவதுபோலவும் ஒரு திகில் அவனைப் பற்றியது. குற்றுயிராக இருந்த தன் நைப்பாசை போயே போய்விட்டதாகப் பீதி கவ்வியது அவனை. ஆம், நைப்பாசை கூட, தாயின் முடிவு சற்றுத் தாமதமாகி வரும் என்ற சிறு நம்பிக்கைகூட, போய்விட்டது.

'போய்விட்டாளா?' என்று அறிகிற துடிப்புடன், தயக்கமுடன் மீண்டும் மீண்டும் அன்னையின் படுக்கையின் மீதே கவனம் சென்றது. அப்பொழுது அன்னை அழைத்தாள்.

'வாசு!'

ஓடினான் உள்ளே.

'அப்பா வாசு, எனக்குப் பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறதப்பா! ஏற்பாடு செய்துவிடுகிறாயா?' என்று கேட்டாள் அன்னை.

'பிராயச்சித்தமா? எதற்கு அம்மா உனக்கு? புண்ணியமூர்த்தியன்றோ நீ!' என்று கேட்டது வாசுவின் அந்தரங்கம். ஆனால் நா எழும்பவில்லை. உயிரைப் பலிகொடுக்கவிருக்கும் நோயாளியின் முகம்போல அவனுடைய முகம்தான் விகாரங் கொண்டது.

'வாசு, நீ வீண் கவலை படக்கூடாது. எனக்கு என்னமோ நான் நாள் தங்கப்போவதில்லை என்றுதான் தோன்றிவிட்டது. பிராயச்சித்தம் பண்ணிக்கொண்டுவிடணும் என்று தோன்றுகிறது. நாம் செய்திருக்கிற தப்புகளுக்கெல்லாம் கடைசிக் காலத்திலே மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போகிறதற்கும் பாக்கியம் வேணும்பா! உனக்குத் தெரியுமோ என்னமோ......பிராமணர்களை அழைத்து, பிராயச்சித்தம்னு பண்ணிக் கொள்கிறதுண்டு. எனக்கு என்றைக்குமே ஒரு குறைவுமில்லை—மஞ்சள் குங்குமத்தோடு போகாத குறை ஒன்றேதான்; அது கடவுள் சித்தம். இப்பொழுது எனக்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ளக் கடவுள் சாவகாசம் கொடுத்திருக்கிறார்........' என்று தாயார் பேசி முடித்தபோது பொலபொலவெனக் கண்ணீர் வாசுவின் முகத்திலே பெருகியோடியது.

காவேரியம்மாள் பிள்ளையின் மனத்துயரத்தை. அவனுடைய கருகிய முகத்தினூடே அறிந்து தான இருந்தாள். நெஞ்சு குமுற, மறுபேச்சுப் பேசாமல் அவன் எழுந்தபோது, அந்த மூதாட்டியின் கண்கள் கலங்கின.

* * *

“பிராயச்சித்தம் நடக்கப்போகிறது!”

எல்லோருக்கும் ஒரு பதற்றம்; ஆனால் மரண பயம் இறக்கங்கண்டது—தெய்விக உணர்ச்சி மேலோங்கி விட்டது, சூழ்நிலையிலே. ‘தைரிய மாகச் சாவை எதிர்நோக்கியிருக்கிறது ஓர் உயிர்!’ என்னும் எண்ணம் பக்தியைப் புகுத்தாவிட்டால், பின் வேறு எந்த எண்ணம்தான் பக்தி புகட்ட வல்லது?

‘பிராயச்சித்தம்’ என்னும் சடங்கு ஒழுங்காக நடந்தேறியது.

ஆனால் — ஆனால்? —

அப்புறம் நிகழுமென்று அனைவரும் எதிர்பார்த்தது நிகழவில்லை. முன்னிலவு போய்விட்டது. பின்னிருள் வரவில்லை அடுத்து. தன்னை எதிர்கொண்டழைக்கக் காத்திருந்த காவேரியம்மாளைக் கண்டு காலன் கை கூப்பி வணங்கினன் போலும்! பாசக்கயிற்றினை வீச அஞ்சினன் போலும்! ஆசைக்குகந்தவர்களைப் பிரிந்தேக வேண்டிய சமயத்திலும் காவேரியம்மாள் மனந்தளராதது கண்டு மறலியே அரண்டனன் போலும்! உண்மையான நலனைப் பிள்ளை நாட்டுப்பெண் இருவருக்கும் நாடுகிறவளாகத் தன்னலமற்று வாழ்ந்த அந்தப் பெருமாட்டியைக் கண்டு அந்தகன் அதிசயங்கொண்டு விழித்துத் திணறினான் போலும்! காவேரியம்மாள் பிழைத்துவிட்டாள்.

“பயமில்லை!” என்று சொல்லிப் போனார் டாக்டர். ஆனால் மற்றவர்கள் அப்படி நினைக்கவில்லை. நோயாளியின் அந்திய காலத்திலே வைத்தியர் பேச்சுக்கு மதிப்பு இல்லை என்றும், படுத்திருப்பவரின் அந்தரங்கம் கூறுவது தான் உண்மை என்றும் எண்ணினார்கள். அணையுமுன் சுடர்தெறிக்க எரியும் விளக்குப் போலத்தான் இந்த நல்ல மாறுதலும் சிறிது பொழுது இருக்கும் என்று தான் பேசிக்கொண்டார்கள். டாக்டர் கூறுவதையும், பிறர் முரணாகப் பேசிக்கொள்வதையும் கேட்டு வாசு பிரண்டான். சாவைப்பற்றி இவ்வளவெல்லாம் பேச்சு இருக்கக் கூடும் என்று அவனுக்குத் தெரியாது.

ஒரு நாள்...... இரண்டு நாள்...... மூன்று நாள் ...... டாக்டர் வந்து போனார். ‘அபாயமில்லை! குணந்தான்!’ என்று சொன்னார். காவேரியம்மாளும் அப்படித்தான் காணப்பட்டாள்.

‘சுவாமீ! நின் அருள்!’ என்று உள்ளமாரத் துதித்து மகிழ்ந்தான் வாசு.

அன்னையின் மெல்லிய அழைப்புக் கேட்டு ஓடோடிப் போய், குனிந்தான் அருகில்.

‘என்னடப்பா, வாசு! எனக்குக் குணமாகிக் கொண்டு வருகிறதென்று டாக்டர் சொன்னார்?’ என வாசுவைக் கவலையுடன் கேட்டாள் காவேரியம்மாள். சாகுமுன் பிராயச்சித்தம் செய்து கொள்ளும் விஷயம் தெரிந்திருந்ததே, அதையொட்டிய இன்னொரு விஷயம் தெரிந்திராதா? ஒரு விந்தையான விஷயத்தைக் கேட்டான் வாசு, அன்னையிடமிருந்து!

புது விஷயம் என்ன? ‘பிராயச்சித்தம் செய்து கொண்டவர்கள் அப்புறம் பிழைத்துக் கொண்டால், அவர்களுக்குப் பதில் வீட்டில் வேறு யாரையாவது அடித்துவிடுமாம்!’ இதை அச்சத்துடன் தாய் கூற, ஆச்சரியத்துடன் மைந்தன் கேட்டான்.

‘வா! காலனே வா!’ என்று அழைப்பு விடுத்து விட்டு, காலன் வந்துவிட்டால், வெற்றுக் கயிறுடன் போகமாட்டானே? இது தானே தாயின் கவலை? தாய் சொல்லும் பேச்சுக்குப் பொருள்?

‘அதெல்லாம் சுத்த அபத்தம் அம்மா! உனக்குக் குணமாகிறதே என்று நான் சந்தோஷப்பட்டுக்கொண்டு இருக்கிறேனே— அதைக் கெடுக்காதே! நீயும் மனசை அலட்டாதே!’ என்று கண்டிப்புத் தொனிக்க ஆறுதல் மொழிந்தான் வாசு.

‘என்னவோப்பா, தெய்வம் சோதிக்கிறது!’ என்று நெட்டுயிர்த்தாள் தாய்.

‘என்னைச் சோதனை பண்ணாமல் விட்டதே!’ என்று சொல்லி. பலநாள மறந்திருந்த புன்னகை பூத்தான் புதல்வன்.

* * * *

சோதனை யாருக்கு? வாசுவுக்குத்தான். நாலு நாட்களிலே வாசு மீண்டும் கலக்கத்திலாழ்ந்து போகும்படி நேர்ந்தது. காவேரியம்மாள் குணங்காட்டி வந்தாள்; என்ன மாயமோ‘ வாசுவின் மனைவி மீனாக்ஷிக்குச் சுரம் கண்டது! ‘அது’ தான் காரணமோ? வாசு பயந்தான்.

‘இல்லைன்னா! அப்படியொன்றும் நேர்ந்துவிடாது! கொஞ்சநாட்களாக வீட்டில் நடமாட்டம் அதிகமாகியிருந்ததோல்லியோ? அதுதான் கொஞ்சம் ஒத்துக் கொள்ளலை போலிருக்கு! எல்லாம் குணமாகிவிடும் எனக்கு!’ என்று மீனாக்ஷி கணவனுக்குத் தைரியம் புகட்டினாள்.

‘அப்படியுமிருக்கலாம்! சுவாமி! இவளையும் காப்பாற்றிக்கொடு!’ என்று இறைஞ்சினான் வாசு.

ஆனால் காவேரியம்மாள் அரற்றத் தொடங்கிவிட்டாள். பிராயச்சித்தம் செய்து கொண்டதற்காக அங்கலாய்த்துப் புலம்பினாள்.

'வயதானவள் நான் போகிறது நியாயம்! எனக்கும் சிரேயஸ்! இப்போ சிறிசு அவளுக்கு மோசம் வந்து விடும் போலிருக்கே என்றாலே! ஏன் தான் எனக்கு அந்த ஆசை வந்ததோ! மீனாவுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், அப்புறம் சாகிற மட்டும் எனக்கும் வேதனை தானே மிஞ்சும்! சின்னவளை முழுங்கினபின் போனாள் என்ற பழிச் சொல்லும் நிலைக்குமேடாப்பா!' என்று கேட்டாள், வருந்தினாள். மனம் உளைந்தாள்.

'அம்மா! இதில் தவறு ஒருத்தருடையதும் அன்று! எப்படியெல்லாம் நடக்கக் கடவுள் ஏற்பாடோ அப்படித்தானே நடக்கும்?' என்று வாசு தாய்க்குத் தெம்பு கூட்ட முயன்றான். ஆனால் அவனுடைய உள்ளமும், நிழலில் வளரும் செடிபோலத்தான் இருந்தது. பின்னிருள் இப்படியா வரவேண்டும்?

மீனாக்ஷிக்குத் தணியாத காய்ச்சல் அடித்துக் கொண்டே இருந்தது. வாசுவின் பீதி வளர்ந்தது. மனைவிக்கும் தாய்க்கும் போட்டியா இதிலே? அவனுடைய அன்னைக்குப் பழிச் சொல் நின்று விடும் — பழிச் சொல் இல்லாவிட்டாலும் தாய்க்கு ஆயுசுவரை நிம்மதி இருக்குமா, மீனா முந்திக் கொண்டு போய் விட்டால்? வேதனை அவனைத் தூண்டிலில் போட்டுக் கொண்டது, கொழுவிக்கொழுவி எடுத்தது.

தாயார் கூப்பிட்ட மாதிரி இருந்தது. ஓடோடி வந்தான் அருகு! பிதற்றலும் முனகலும் குறையவேயில்லை தாயாருக்கு, நினைவிருக்கிறதா, நினைவில்லாமலேதான் பேசுகிறாளா என்றுகூடக் கண்டறிய முடியாதபடி காவேரியம்மாள் அந்த ஒரே அங்கலாய்ப்புப் பல்லவியையே அப்போதும் பிதற்றினாள்.

'வாசு! நான் போகமாட்டேனா? அவளுக்கும் உனக்கும் அநியாயம் பண்ணிவிட்டேனே! பகவானே! என்னை அழைச்சிண்டு போயேன்!' என்று அம்மா அரற்றும்பொழுது, அவன் நெஞ்சு குமுறியது. 'ஏனம்மா இப்படியே கலவரப்படுகிறே!' என்று சொன்னவாறே தாயை மெதுவாக அசைத்தான்.

பளிச்சென்று கண்களைத் திறந்து சுய உணர்வு பெற்றவளாய் மைந்தனைப் பார்த்தாள் காவேரியம்மாள்.

'வாசு நானே போகிறேன். நீயும் குழந்தைகளும் மீனாவும் தீர்க்காயுசாய் இருக்கணும்.' என்று ஆசிபுகன்றுவிட்டு ராமநாமம் ஜபிக்கத் தொடங்கிவிட்டாள்.

கண்ணுக்கெதிரே காணப்பட்ட புதல்வன், மனக்கண்ணிலே தென்பட்ட நாட்டுப்பெண், அந்தரங்கத்திலே தோன்றிய இறைவன் ஜோதி, இம்மூன்றும் சாந்தி கூற, பூதவுடலை நீத்து, காந்திபோலப் பிரிந்தாள் வாசுவின் தாய். முட்படுக்கையிலே படுத்திருந்து உத்தராயண புண்ணிய காலம் தொடங்குவதற்காகக் காத்திருந்து உயிர் துறந்த பீஷ்மாச்சாரியார் போன்று காவேரி அம்மாளும், மைந்தனின் மனத் துன்பம் தணிந்திருக்க எந்தத் தருணம் ஏற்றதாகுமோ அப்போது தான் உயிர் துறந்தாள்.

'என் மனச்சாந்தியை விரும்புகிறாயா வாசு! சரி, என் சாவுக்காகக் கலங்காதே! தென்பாயிரு!' என்று எத்தனை தேற்றினாலும் வாசுவுக்குப் பதியுமா மனதிலே!

செயலில் அறிவுறுத்தி அவனைச் சமாதானப் படுத்துவதற்கே பிராயச்சித்தம் என்னும் சடங்கை நடத்திக் கலங்கடித்துவிட்டாள் தாய்!

வேண்டுமென்றே விரும்பி அவனுடைய அன்னை நடித்தாளா? இல்லை.

வாழ்நாள் முழுவதும் மைந்தனுக்காகவும் அவனுடைய நலனுக்காகவும் செயலாற்றிய அவளுடைய தாய்த்தன்மை, போகும்பொழுதும் ஒளி வீசியது.

(அட்டைப் படம்)

பார்லிமெண்ட் உப சபாநாயகர்

# ஸ்ரீ எம். அனந்தசயனம் அய்யங்கார்

கே. ஸ்ரீ.

வெகு சிலரைக் கண்டால்தான் எனக்கு 'பழுத்த அறிஞர்' என்ற உணர்ச்சி உண்டாவதுண்டு. அந்த வெகு சிலரில் ஒருவர் பார்லிமெண்ட் சபாநாயகர். (ஸ்ரீ மவ்லங்கர்தான் சபாநாயகர் என்றாலும் அவர் உடல் சுகக் குறைவு காரணமாக ஸ்ரீ. அனந்தசயனம் அவர்களே பார்லிமெண்ட் அலுவல்களைச் சென்ற சில கூட்டங்களாக நடத்திவருகிறார்.)

பார்லிமெண்ட்டைப் பார்த்தவர்களுக்கே பார்லிமெண்ட் தலைமை என்பது எவ்வளவு கடினமான விஷயம் என்பது தெரியும். இந்தச் சபை அகில இந்தியாவுக்கும் சட்டம் இயற்றும் ஸ்தாபனம் என்ற ஹோதாவில் இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலிருந்தும் அங்கத்தினர்கள் இதற்கு உண்டு. பல மாகாணங்கள் என்பதால் பல பாஷைகள், பலவிதக் கக்ஷிகள் என்பதால் பலவித அபிப்பிராயக் கோணல்கள், தவிர தானே தான் மகா பெரியவர் என்று எண்ணும் பிரகிருதிகள் இவர்கள் எல்லாரையும் கட்டி மேய்க்கவேண்டிய பொறுப்பு சபாநாயகருடையது.

ஜன நாயகத்தில் பார்லிமெண்ட்தான் சர்வ வல்லமையுள்ள ஸ்தாபனம். ஜனங்களின் பிரதிநிதிகள் மூலமாக எந்தவிதமான சர்க்காருடைய அலுவல்களும் இதன் மூலம் மேற்பார்வை செய்யப் படுகிறது. ஜனங்களின் பிரதிநிதிகளுக்குத் தங்கள் அபிப்பிராயங்களையும், கஷ்ட நிஷ்டுரங்களையும் தெரிவிக்க வசதிசெய்துகொடுப்பவர் சபாநாயகர். சர்க்கார் (காங்கிரஸ்) அங்கத்தினர்கள் மண்டிக்கிடக்கும் சபையில் எதிர்ப்புக் கக்ஷியினருக்கும் நியாயம் வழங்குபவர் இவர்.

ஆகவேதான் சர்வ வல்லமை உள்ள பிரதம மந்திரியும்கூட, சபாநாயகருடைய கட்டுப்பாட்டுக் குள்பட்டவர். ஆனால் தாம் எல்லாம் வல்லவர் என்ற நினைப்பில் தாம் போனபோக்கே போக்கு என்று நினைத்தால் அந்தச் சபாநாயகருக்கு நல்லபெயர் கிடைக்காது.

இந்தப் பதவியை வகிப்பது, அதுவும் தற்சமயம் உள்ள பார்லிமெண்டில், மிகவும் கடினம். இதை ஸ்ரீ அனந்தசயனம் நன்கு வகிக்கிறார் என்பதுடன் இவரைக் கண்டால் எதிர்ப்புத் தரப்பில் உள்ளவர்களுக்கும் நல்ல மரியாதை உண்டு. 'ஓ, ஆனந்தசயனமா, அவர் மிகவும் நேர்மை வாய்ந்தவராயிற்றே' என்று சொல்வது சகஜமாகி விட்டது.

ஜனங்களுக்கோ அல்லது அவர்கள் பிரதிநிதிகளுக்கோ எதாவது அநீதி இழைக்கப் பட்டது என்றால் அதற்குப் பரிகாரம் தேட மார்க்கம் உண்டு. எங்காவது ஆபீஸர்களின் அதிக்கிரமம் காரணமாக ஜனங்கள் சிறையிடப்பட்டார்கள் என்றாலோ அல்லது போலீஸார்கள் கூட்டத்தைச் சுட்டார்கள் என்றாலோ அல்லது அரசியல் சாஸனத்தில் கண்டுள்ள தனி நபர்கள் சுதந்திரம் பறி போயிற்று என்றாலோ அந்த அநீதச் செய்கைகளைக் கண்டிக்க அங்கத்தினர்கள் பார்லிமெண்டில் பிரேரணை கொண்டு வரலாம். இதற்கு ஒத்தி வைப்புப் பிரேரணை என்று பெயர்.

சாதாரணமாக இந்தப் பிரேரணையைச் சபாநாயகர் அனுமதிப்பதுபற்றித் தான் மண்டை உடைவது வழக்கம். ஏனென்றால் பிரேரணையை அனுமதிப்பதில், அதில் பொது ஜனங்கள் சம்பந்தப்பட்ட மிக முக்கிய விஷயம் எழுப்பப்படுகிறது என்று சபாநாயகர் தம்மைத்தாமே திருப்தி செய்து கொள்ளவேண்டும். இதில் சபாநாயகர் 'பக்ஷபாதமாக' நடந்து கொண்டார் என்ற மனத் தாங்கல் சில சமயங்களில் ஏற்படுவதுண்டு. ஆனால் அந்த விஷயம் சம்பந்தப்பட்ட நபருடைய மனதுக்குள்ளேயே இருக்கவேண்டுமே அன்றி, சபாநாயகர் ஒரு பக்ஷமான அபிப்பிராயம் தெரிவித்தார் என்று வெளிப்படையாக எந்த நபரும் சொல்லக்கூடாது.

இதுபோன்ற நிபந்தனைகளைச் சென்ற சில ஆண்டுகளில் தோன்றி மறைந்த சட்ட சபை அங்கத்தினர்கள் ஏற்று மதித்து வந்ததன்மூலம் சபாநாயகருடைய பதவியும் மதிப்பும் எடைபோட்டுச் சொல்லமுடியாத அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ஆனால் சென்ற தேர்தல்களுக்குப்பிறகு ஒரு சாரார் பார்லிமெண்டுக்குள் திடும் பிரவேசம் செய்தார்கள். இவர்கள்தான் கம்யூனிஸ்டுகள்.

ஜனநாயக முறைகளில் நம்பிக்கை இல்லாத இவர்கள் பொது மக்களின் வாக்குகளைப் பெற்று பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பார்லிமெண்டுக்குள் நுழைந்த இவர்கள் அதில் ஸ்தம்பகம் உண்டாக்குவது என்ற ஒரே எண்ணத்துடன் வேலை செய்து வருகிறார்கள். பார்லிமெண்டில் ஒரு சமயத்தில் ஒருவரே தான் பேசலாம். அவரும் சபாநாயகர் பேச எழுந்தால் உட்கார்ந்துவிட வேண்டும். இதையெல்லாம் சிறிதும் சட்டை செய்யாதவர்கள் கம்யூனிஸ்டுகள். இவர்கள் பேசினால் ஏக காலத்தில் கத்துவார்கள். திட்ட ஆரம்பித்தால் சபாநாயகரின் மூதாதையர்கள்வரை பிடித்து விளாசி விடுவார்கள். ஆனால் இந்தியாவைக் கண்யமான நிர்வாகம் செய்யும் நோக்கத்துடன் கூடியிருக்கும் அங்கத்தினர்களிடத்தில் இவர்கள் கை வரிசைகள் பலிக்கவில்லை. இவர்கள் ஸ்ரீ மவ்லங்கர் சபாநாயகராக இருக்கும்பொழுது தங்கள் ராமாயணத்தைப் பூராவாகப் படித்தார்கள்.

ஸ்ரீ அனந்தசயனத்தின் அரிய குணங்களுள் ஒன்று அவர் எந்தக் காரணத்தைக்கொண்டும் தம்பொறுமையைஇழக்கமாட்டார். ஆகவே இவர் கம்யூனிஸ்டுகளை அடக்குவதில் எவ்வளவு விட்டுக்கொடுக்க முடியுமோ அவ்வளவு விட்டுக்கொடுத்துச் சபையைச் சுமுகமாக நடத்துவதற்கு அஸ்திவாரம் கோலினார். ஆனால் தேனைப் பிரியமாக நடத்துவதற்கு எவ்வளவு தான் ஒருவருக்கு மனம் இருந்தாலும் தேள் கொட்டத்தானே கொட்டுகிறது, அதே போல "சிகப்பு" அங்கத்தினர்களுக்குத் திடீர் திடீரென்று வக்கிரம் பிடித்துவிடும். நம் ஜில்லாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ அனந்தன் நம்பியாருக்கு அர்த்த சந்திரப் பிரயோகம் சென்ற பார்லிமெண்ட் கூட்டத்தில் கிடைத்ததற்குப் பிறகு, மாஸ்கோவின் தோழர்களுக்கு நல்ல புத்தி பிறந்தது. ஆனால் சமீபத்தில் ஒரு அங்கத்தினரை அவர் இருக்கும் விடுதியைக் காலி செய்யும்படி நோட்டீஸ் கொடுத்தும் கூட அவர் நகராததால் அவரைப் பலாத்காரமாக அப்புறப்படுத்த நேர்ந்தது. இதைப் பார்லிமெண்டில் பிரஸ்தாபித்தால் என்ன செய்ய முடியும்? இதை ஸ்ரீ அனந்தசயனம் சொல்லி இதில் பொதுஜன சம்பந்தம் ஏதும் இல்லை என்று விளக்கிய பொழுது புரொபஸர் ஹிரேன் முகர்ஜி உள்படப் பல கம்யூனிஸ்டுகள் சபையிலிருந்து வெளியேறி, சபாநாயகரையும் வெளியேறுமுன் அவமதித்தார்கள். அங்கிலையிலும் ஸ்ரீ அனந்தசயனம் சொன்னார்: "இவர்கள் நடத்தை ஆக்ஷேபகரமானது. இருந்தாலும் அவர்களை மன்னித்துவிடுகிறேன்."

"இந்தக்கழைக்கூத்தன் வேலையைச் செய்யும் ஸ்ரீ அனந்த சயனத்திற்குச் சட்டசபை வேலை புதிதல்ல. 1934-ஆம் வருஷம் இவர் பழைய சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீ புலாபாயுடன் சேர்ந்து காங்கிரஸ் அரசியல் சாஸனக் கமிட்டியுடன் வேலைசெய்த இவருக்குச் சட்ட சபை வேலையில் ஆர்வம் உண்டாக்க இவருக்குச் சகாக்களாக ஸ்ரீ சத்திய மூர்த்தி, ஸ்ரீ ஆஸப் ஆலி, ஸ்ரீ பந்த், ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா, ஸ்ரீ கயூம் போன்றவர்கள் இருந்தார்கள்.

ஸ்ரீ அனந்த சயனத்தைச் சந்திப்பது என்றால் அதி காலையில் இவரைப் பிடிக்க வேண்டும்; அல்லது சாயந்திரம் வெகு நேரம் கழித்துச் சந்திக்க வேண்டும். யார் இவரை எந்த ஸ்தாபனத்தின் விழாவுக்கும் தலைமை வகிக்க வேண்டும் என்றாலும் "பிகு" பண்ணிக்கொள்ளமாட்டார். மிகவும் டாம்பீகமற்ற வெகுளி. ஆகையால் அவரை அவர் அறையில் சந்தித்து 15 நிமிஷங்கள் மாத்திரம் பேச ஏற்பாடு செய்திருந்தேன். ஆனால் பேட்டியின் முடிவில் நான் அவருடைய நேரத்தில் ஒரு மணிக்கு மேல் எடுத்துக்கொண்டுவிட்டேன் என்பது தெரிந்தது. இடையே பல நிகழ்ச்சிகளுக்கு நேரமாகிவிட்டது. "சும்மா உட்காருங்கள் இதனால் பரவாயில்லை" என்று சிரித்தார் ஸ்ரீ அனந்த சயனம்.

"நீங்களும் இடைவிடாது சுமார் 20 வருஷங்களுக்குச் சட்டசபை அங்கத்தினராக இருந்திருக்கிறீர்களே, தற்போது உள்ள பார்லிமெண்டுக்கும் அப்பொழுது இருந்த சட்ட சபைக்கும் என்ன வித்தியாசம் காண்கிறீர்கள்?" என்று கேட்டேன். என்ன தான் தம் அபிப்பிராயத்தை அப்பட்டமாகத் தெரிவிப்பவர் என்றாலும் இந்தக் கேள்விக்கு அவர் நேரடியாகப் பதில் சொல்லவில்லை.

'நாங்கள் அங்கத்தினர்களாக இருந்த பொழுது கதையே வேறு. சர்க்காரிடமிருந்து தகவல் வாங்குவது மிகக் கஷ்டம். ஒரு விஷயத்தைக் குறித்துப் பேசவேண்டும் என்றால் புள்ளி விவரங்கள் கிடைக்கமாட்டா. ஆகவே நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் விஷயதானம் செய்வது வழக்கம்.

'தவிர, அப்பொழுது இருந்த அங்கத்தினர்கள் சட்டசபை லைப்ரரிக்குத் தினந்தோறும் சென்று படிப்பது அதிகம். நாங்கள்

எந்த விஷயத்தைக் குறித்துப் பேசினாலும் அதைச் சர்க்கார் தரப்பில் மறுக்கமுடியாது.'

இதைத் தற்காலப் பார்லிமெண்டில் உள்ள நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் வித்தியாசம் தெரியும். தற்காலத்து அங்கத்தினர்கள் பெரும்பாலும் பார்லிமெண்ட் ஒரு பொதுக்கூட்ட அரங்கு என்று நினைக்கிறார்களே தவிர, அதன் நடவடிக்கைகளில் தங்களுக்குப் பெரும் பங்கு உண்டு என்று நினைப்பதில்லை.

ஸ்ரீ அனந்தசயனம் பார்லிமெண்ட் விவாதத்தில் நல்ல நிபுணர். இருந்தாலும் அவர் தாம் ஸ்ரீ சத்தியமூர்த்தியைப் போலவோ அல்லது ஸ்ரீ புலாபாயைப் போலவோ அவ்வளவு வாக்குவன்மை படைத்தவர் இல்லை என்று தன்னடக்கமாகச் சொல்லுகிறார்.

ஸ்ரீ அனந்தசயனம் ஸம்ஸ்கிருதத்தில் மகாமேதை. அவர் தம் அறையில் தம் அலுவல்களைக் கவனிக்கும்பொழுது சுலோகங்களை அனுபவித்துச் சொல்லிக்கொண்டிருப்பார். அவர் ஸம்ஸ்கிருத அன்பினுக்கும் பண்டித விலாஸத்திற்கும் காரணம் அவர் தகப்பனார் ஸம்ஸ்கிருத பண்டிதர். திருப்பதிக்குப் பக்கத்தில் உள்ள திருச்சானூர் இவர் பிறந்த ஊர். பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பாஸ்செய்து பிறகு வக்கீலுக்குப்படித்து, சித்தூரில் தொழில்புரியலானார்.

இவர் வக்கீல் தொழில் ஆரம்பித்ததைப்பற்றி ருசிகரமான குறிப்பு ஒன்று சொன்னார். பிற்காலத்தில் இவருடைய ஸீனியரான ஸ்ரீ. துரைசாமி அய்யங்கார் இவரை, 'எங்கே தொழில் ஆரம்பிப்பதாக உத்தேசம்' என்று கேட்டாராம். பளிச் சென்று ஸ்ரீ அனந்தசயனம் சொன்னார்: 'கடப்பையிலோ அல்லது பெல்லாரியிலோ ஆரம்பிக்கலாம்'

'ஏன் சித்தூரில் ஆரம்பித்தாலோ?'

'இல்லை, சித்தூரில் போட்டி (Competition) அதிகம் இருக்கும்'

'ஓ! அப்படியென்றால் சகாராபாலைவனத்துக்குப் போனால் அங்கு ஆளே இருக்காதே' என்று ஸ்ரீ துரைசாமி ஐயங்கார் சொன்னது ஸ்ரீ அனந்தசயனத்துக்குக் குத்தலாகப் படவே அவர் சித்தூருக்குச் சென்றார்.

ஸ்ரீ அனந்தசயனம் 1916-ல் காங்கிரஸில் சேர்ந்து, காந்திஜி ஒத்துழையாமை ஆரம்பித்தபொழுது தம் தொழிலை நிறுத்தி, 1921-ல் பிரிட்டிஷ் இளவரசர் வரவைப் பகிஷ்காரம் செய்யச் சொன்னதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். ஆந்திர காங்கிரஸிலும் பிறகு அகில இந்திய காங்கிரஸிலும் காரியக் கமிட்டிகளில் பெரும் பங்கெடுத்துக்கொண்டு தனிப்பட்ட நபர் சத்தியாக்கிரகத்தின் போதும் பிறகு 1942-லும் சிறைப்பட்டார். இவர் முதல் முதல் சிறைப்பட்டதைப்பற்றி இவருக்கு ஒரு ரஸமான சம்பவம் ஞாபகம் இருக்கிறது. இளவரசர் விஜயத்தைப் பகிஷ்காரம் செய்ய அறை கூவி இவர் சுவர் நோட்டீஸ்கள் ஒட்டினார். ஜில்லா மாஜிஸ்டிரேட் 144 இ. பி. கோவின் கீழ் உத்தரவு பிறப்பித்து இவரை ஒட்டிய நோட்டீஸ்களை அப்புறப்படுத்தச் சொன்னாராம். '144ஆம் பிரிவு தடை உத்தரவு. அதன் கீழ் நீங்கள் என்னைத் தடை செய்யலாமே ஒழிய வேறு எதையும் செய்யச் சொல்லமுடியாது' என்று சட்டவாதம்செய்து ஜயித்தார்.

நல்ல வக்கீல் தொழில் செய்து புகழ் எய்திய ஸ்ரீ அனந்தசயனம் கலையிலும் சங்கீதத்திலும் அளவில்லா ஆர்வம் உள்ளவர். பல ரயில் தொழிலாளர்கள் சங்கங்களுக்குத் தலைவராக இருப்பதுடன் இவர் பல கலை வளர்ச்சிக் கழகங்களுக்கும் தலைவர். டில்லியில் வட இந்தியர்கள் கூட்டத்தில் பயமில்லாமல் ஹிந்தியில் பேசும் இவர் உண்மையில் தீரரே.

ஸ்ரீ அனந்தசயனத்துக்கு எட்டுப் பெண்களும் நான்கு பிள்ளைகளும் இருக்கிறார்கள், இவருடைய குடும்பம் சித்தூரில்தான் இருக்கிறது. ஆனால் ஒரு பெண் டில்லியில்தன் கணவருடன் இருக்கிறாள். அவர்கள் ஸ்ரீ அனந்தசயனத்தின் வீட்டில்தான் இருக்கிறார்கள்.

உண்மையில் இவருக்குப் பேரக்குழந்தைகளுடன் விளையாடிப் பொழுது போக்குவது மிகவும் பிடித்த விஷயம், ஆனால் அதற்குப் போதிய அவகாசம் கிடைப்பதில்லை.

எல்லாவற்றையும்விட எனக்கு இவரைப் பற்றிப் பிடித்த விஷயம் இவர் 1934இல் எப்படி ஒரு எளிய காங்கிரஸ் தொண்டராக இருந்தாரோ அதேபோல இன்றும் டாம்பீகம் இல்லாமல் இருக்கிறார்.

வெகு பலருக்குப் பதவிக்குப் போய்விட்டால் தென்னிந்தியர் என்று சொல்லிக்கொள்வதே பிடிக்காத விஷயம். ஸ்ரீ அனந்தசயனம் இதற்கு விதிவிலக்கு. தாம் பேசும் கூட்டங்களில்கூடத் தென்னிந்திய இட்டலியையும் மிளகாய்ப் பொடியையும்பற்றிச் சொல்லி, இவைதான் தென்னிந்தியனின் மூளையைக் கூர்மையாக்குகின்றன என்பார் தவிர, தென்னிந்திய எளியவர்கள் பலரைக் கை தூக்கியும் விட்டிருக்கிறார். விஷயங்களை நன்கு சீர்தூக்கி, சட்டபூர்வமாகப் பளிச்பளிச்சென்று உடனுக்குடன் தீர்ப்புச்சொல்லக்கூடிய இவரே பார்லிமெண்டின் நாயகராக இருக்க முழுத்தகுதி உள்ளவர்.



நா.................. ளுக்கு நாள் அதிக தெளிவான,
எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனாவிலுள்ள **கேடில்** இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்

ரெக்ஸோனாவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் நன்றாகத்தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும், தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள்.




# ரெக்ஸோனா

## கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக்கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 100-50 TM

ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.


வெண்மையாக
சலவை செய்யப் பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப் பட்டுள்ளன
ஸன்லைட் சோப்பினால் தான்
துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!
SUNLIGHT SOAP
Rs.10000 Reward!
GUARANTEED
SUNLIGHT SOAP

S. 202-50 TM




## சூடுகொண்ட மனதும் வாது செய்யும் தூக்கமும்

அன்று இரவு ரெங்கநாதனால் தூங்க முடியவேயில்லை. கவலைகளுக்கும் இரவுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. ரெங்கநாதன் வெளித் தோற்றத்தில் கவலைப்பட வேண்டிய நிலையிலில்லை. பள்ளிக்கூடத்தில் அவனுக்கு ரூ. 150 சம்பளம் வந்து கொண்டிருந்தது. சிரௌதிகள் அதிகம் சேர்க்காது போனாலும் குடியிருக்க ஒரு வீடும், அவர்கள் குடும்பத்துக்கு வேண்டிய நெல்லைத் தரக்கூடிய நிலமும் அவனுக்கு உண்டு. அவன் இரு தமக்கைமார்களும் நல்ல நிலைமையிலிருந்தபடியால் அவர்களுக்காகவும் அவன் கவலைப்பட வேண்டிய நிலைமையில் இல்லை. ஆனால் கவலை என்பது நாம் நினைக்கக்கூடிய அவ்வளவு சுலபமான இலக்ஷணங்களையும் பிறர் அறியக் கூடிய பிறப்பிடத்தையும் வளர்ச்சியையும் கொண்டதன்று.

ரெங்கநாதன் காலை முதலே மனம் குழம்பியிருந்தான். ஏன் அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதலே சங்கடம் தான். புத்தனையும் பிறரையும் முனி யோகிகளையும் எந்தக் குழப்பம் வாட்டி விரட்டிற்றோ அந்தக் குழப்பம் அவனுக்கு உண்டு.

முதன் முதலாக அவன் அடுத்த வீட்டிற்குச் சென்று ஒரு வயிற்றுவலிக்காரன் துடித்ததைப் பார்த்த அன்று இரவு அவன் தூங்கவில்லை. அம்மாவை நச்சரித்துவிட்டான்.

'அம்மா......'

'என்னடா கண்ணு.'

'வயிற்றுவலி என்றால் ரொம்ப தொந்தரவா அம்மா?'

'ஆமாம் அப்பா...... வலிக்கும்'

'தூக்கம் வராதா?'

'வராது?'

'சாப்பிட முடியாதா?'

'முடியாது.'

'எழுந்திருந்து நடக்கமுடியாதா?'

'நடக்கமுடியாது.'

'பாவம் அம்மா.'

'..............'

'வயிற்றுவலி ஏனம்மா வருகிறது?'

'வயிற்றுவலி சாதாரணமாக வரும்...'

'எனக்குக்கூட வருமா? அம்மா. உங்களுக்கு வந்திருக்கிறதா?'

'வந்திருக்கிறது.'

'ரொம்ப கஷ்டமாயிருந்ததோ?'

'ஆனால், அது இந்தமாதிரி வலியில்லை.'

'இது ரொம்ப கஷ்டம். இல்லையா அம்மா.,

'ஆமாம். நீ கவலைப்படாதே தூங்கு.'

'ஏன் அம்மா இது வலித்துக்கொண்டேயிருக்குமா?'

'இல்லை, சிலசமயம் விட்டுவிடும்; டாக்டர் மருந்து கொடுத்தால் நின்றுவிடும்.'

ரெங்கநாதன் அதற்குப் பிறகுதான் விச்ராந்தியாகப் பெருமூச்சு விட்டான்.

மற்ருெரு முறை ஒரு கன்றுக்குட்டி கால் முறிந்துவிட்டது. அவன் அதன் பக்கத்தில் நின்று தவித்த தவிப்பைப் அன்று பார்த்தவர்கள் இன்றும் மறக்கவில்லை. அப்பொழுது அவனுக்கு வயது ஏழு.

பன்னிரண்டு வயது ஆனபோது ஒரு சிறு சாதாரண சம்பவம் அவன் உள்ளத்தையே கலக்கி விட்டது.

அவன் வாசலில் நின்றுகொண்டிருந்தான். ரோடில் ஒரு கார் போய்க்கொண்டிருந்தது. அடுத்தவீடு தாண்டும்வரை அவன் காரைப்பார்த்துக்கொண்டே நின்ருன். பிறகு கார் திடீரென்று கிறீச் சத்தத்துடன் பிரேக் போட்டு நின்றது. டிரைவர் இறங்கிஞன். கண்மூடிக் கண் திறப்பதற்குள் கூட்டம் கூடிவிட்டது. அழுகைக்குரல், சத்தம், போலீஸ்காரர் வருகை, இள உள்ளம் தவித்தது. மணி அழகான குழந்தை, குறுகுறுத்த குழந்தை, எதிரே ஓடிக் காரில் மாட்டிக்கொண்டான்.ரெங்கநாதனும் மணிவீட்டிற்குச் சென்ருன். மணியைப் போட்டுக்கொண்டு அழுது கொண்டிருந்தனர்.

அன்று இரவும் அவன் தூங்கவில்லை.

"அம்மா, மணி ஏன் அம்மா சாகணும்!"

"டிரைவர் அஜாக்கிரதை..."

"அவன் என்ன அம்மா பண்ணுவான்...',

"பார்த்து ஓட்டி வரவேண்டாமா?"

"ஏனம்மா தெரியாமல் சொல்லுகிறீர்கள்..."

"குழந்தை என்னப்பா கண்டது?"

"மணி நல்ல குழந்தை இல்லையா அம்மா?"

"ஆமாம்..."

"அவஅம்மா ரொம்பவும் அழுவாள் இல்லையா?"

* * *

மறு நாளும் ரெங்கநாதன் மணியின் வீட்டிற்குப் போஞன், மணியின் தாயாருக்கு ரெங்கநாதனிடம் மிகுந்த பிரியம். அவன் தயங்கி நிற்பதைப் பார்த்த மணியின் தாயார் மதுரம் கூப்பிட்டாள்.

'வாடா கண்ணு! ஏன் அழறேன் என்று பயப்படுகிருயா?'

'இல்லை மாமி. மணி செத்தால் அழறது பிரமாதமா?'

'இல்லேடா கண்ணு, மணிக்கு உன்னிடம் உயிரப்பா'

'ஆமாம், அம்மாமி...,

'ஏன் ஏதாவது கேட்கவேண்டுமா?'

'நீங்கள் டிரைவரை ஜெயிலில் வைக்கப் போகிறீர்களாமே...!'

'இல்லேடா கண்ணு. அது வேறே பாபமா? என்ன பாவம் பண்ணேமோ?'

அதற்குள் மதுரத்தின் கணவனும் பக்கத்தில் வந்தார்.

'அவன் யாரோ, நாம் யாரோ என்ருகிவிட்டது. போகிருன் கடன்காரன்...'

ரெங்கநாதன் கேட்டான், அவன் யாரோ, நாம் யாரோ, கடன்காரன்...இதற்கெல்லாம் என்ன பொருள்?

இப்படிப்பட்ட பல சம்பவங்கள், பாவனை நிறைந்த அவன் உள்ளத்தை ஒருவாறு தாக்கி, அவன் மனத்துள் ஒரு விசித்திரமான பண்பாட்டை ஏற்படுத்தியிருந்தன.

உலகம் கஷ்டப்பட எனவே ஏற்பட்டது போலும். அதில் தப்ப ஒரே வழி சலனமற்ற வாழ்வு தான். கூடிய வரை அதிக பந்தங்களை ஏற்றுக் கொள்ளாமல் பிறருக்கு உபகாரமாக வாழ்வது தான் நமக்கேற்ற வாழ்வு என்று அவன் நிச்சயம் செய்திருந்தான்.

அதனுல் அவன் தன் நடத்தையைத் தூய்மையானதாயும் அன்பால் விரவப்பட்டதாயும் ஆக்கிக் கொண்டே வந்தான். ஆகவே தன் மதிப்புக்கு உரித்தானவர்கள் தன் நடத்தையை மிதமாகப் புகழ்ந்தால் ஒரு பெருமையை அடைவதுடன் அவன் இதற்குத் தகுதியை நீடிப்பதுடன் இன்னம் முன்னேற வேண்டும் என்று நிச்சயம் செய்து கொள்வான். அதற்காக அவன் ஆசைகளைக் குறைக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டது.

அதுபோலச் சேவைக்குப் பந்தங்கள் விரோதம் என்று கண்டான். தாயிடத்திலுள்ள பாசமே சில சேவைகளுக்குக் குறுக்கே நிற்பதை அவன் கண்டான். ஆனுலும் தாய்க்கு முதல் கடமையானபடியால் அதைக் கடமை என ஏற்றுக் கொண்டான்.

இந்த மனப்பாங்குடைய அவன் உள்ளத்தை இன்று நடந்த மூன்று சம்பவங்கள் அலைத்திருந்தன.

முதல் சம்பவம் இவன் தடுக்க ஒண்ணுதது. ரெங்கப்ப உடையார் செத்தார் என்ருல் யார் தான் என்ன செய்ய முடியும்? ஆனுல் அவர் செத்

தது ஒரு எடுத்துக்காட்டு. யாரும் திடீர் என்று சாகலாம். சாவு தெய்வத்தின் வெற்றி; இயற்கையின் வெற்றி. மனிதன் இது வரை அதற்கு மாற்றுக் கண்டு பிடிக்கவில்லை. நாஸ்திகம் பேசும் மக்கள் தோல்வியின் நிழலைக் காண உதவுவது இந்தச் சாவு தான். பிறவியும் சாவும் சேர்ந்து மனிதனுக்குக் கையறு நிலையைத் தந்துவிடுகின்றன.

அதனால் சாவுக்கு யாரும் தயாராயிருக்கலாம். வேண்டாம் வேண்டாம் என்று ஓடி ஒளிந்து, பிரம்படிபட்டு, கண்ணீர்விட்டு, மூக்கைச் சிந்திப் பள்ளிக்கூடம் போகும் பழங்காலத்துப் பையன் போல அசட்டுத்தனம் செய்யவேண்டாம். கைது செய்யவரும் போலீஸ்காரரை மகாத்துமாஜீ வரவேற்றதுபோல் வீடு தேடிவரும் மிருத்துயுவை இதோ நான் தயார் என்று வரவேற்று அவனுடன் வண்டி ஏறிவிடலாம், அல்லது நாமே தேடி அவனைப் புகழுடன் அடையலாம்.

இரண்டாவது சம்பவம் அவன் மனதை அதிகம் அலையவைத்தது. அதில் அவன் போற்றிப் பேணி வரும் அவன் குணத்தின்மேல் பட்ட அடி பிரதிபலித்தது. என்ன நடந்தது?

சந்திரா...... மனது கொஞ்சம் நிறுத்தி அவள் அழகை மீண்டும் ஒரு தடவை சுவைக்கச் சதி செய்தது. ரெங்கநாதன் அவளை, இவ்வளவு அழகாய் வளர்ந்த பிறகு இன்றுதான் நன்றாய்ப் பார்த்திருக்கிறான். அசடன், அப்பொழுது குரு சிஷ்யை என்ற பாவத்தில்தான் அவன் பார்த்தான். அவளைப் பெண் என்ற முறையில், ஆண்களைச் சிதறவைக்கச் சிருஷ்டிக்கப்படும் மாயை என்ற முறையில் பார்க்கவில்லை. என்றாலும் என்ன?

அவன் அவளை, அவளுடைய புத்திசாலித்தனத்தை, மாணவி என்ற முறையில் நோக்கினானே தவிர, யுவ உள்ளத்தைப் புயலெழுப்பி, மதியை மயக்கி வெள்ளத்தில் பாயவைக்கும், நெருப்பில் குதிக்கவைக்கும் பெண் சக்தியாகப் பார்க்கவில்லை. என்றாலும் என்ன?

சந்திரா அழகி; நல்ல தாழம்பூ மேனியுடையவள். புது மோஸ்தரில் அரக்கு நிறத்தில் புதையப் புதையப் போட்டிருக்கும் பட்டுச் சட்டை அதன் இடதுபக்கம் முழுவதும் மறைத்து, கீழேயும் பச்சைப் பட்டுப் பாவாடையின் இடது பாதியை மறைக்கும் சிவப்பு மேலாக்கு. குலுங்கும் கண்ணாடி வளையல்களுக்கிடையே பவுன் வளையல்கள் அணிந்த நீண்ட அழகிய கடைந்தெடுத்த கைகள். பிர்ம்மா ஜாதியையா பார்க்கிறான்? பார்த்திருந்தால் இந்தப் பெண் தேவ ஜாதியிலல்லவா பிறந்திருக்கவேண்டும்? மயிர், தலை, மூக்கு நுனி, கண்புருவம், முதுகு, தோள்கள் கைகள், குதிகால் உள்படச் சிறந்த சித்திரக்காரன் வரிவரியாக, அணு அணுவாகப் பார்த்துத் திருத்தித் திருத்தி எழுதுவதுபோல் அல்லவா சிருஷ்டித்திருக்கிறான் அந்தக் கிழக் கலைஞன்! முதல்தடவையிலேயே இந்த உருவம் அமைந்திருக்குமா? அல்லது பல தடவைகளில் அழித்து அழித்து எழுதியிருப்பானா? என்று ஐயமுறும் வண்ணம் அமைந்திருந்தது அவள் தோற்றம்.

அவள் அவனை வாசல் ஹாலில் வரவேற்றாள். அங்கே மெர்குரி லைட் போடப்பட்டிருந்தது. அந்த நிழலில் அவள் ஏதோ ஒரு மாயாலோகக் கன்னிகையாக விளங்கி நின்றாள்.

சரி போகட்டும், அவள் அழகுக்கும் ரெங்கநாதனுக்கும் என்ன சம்பந்தம்?'

அவள் குணம்?

என்ன மரியாதை?

இந்த அவள் தோற்றமும் அவள் குணமும் தான் அவன் குழப்பத்தை இன்னும் கலக்கின, அவனைக் கொத்தித் தின்றன.

அவள் படிக்கிறேன் என்றாள்? பிறகு ஏன் படிக்கவில்லை என்றாள்? கடைசியில் 'ஸார்' என்று கூப்பிட்டவள் 'அவர்' என்று வேறு சொன்னாளே!

நான் நடந்தவிதம் சரியில்லையா?

ஆனால் பிறகு, மாம்பழத்தையும் அனுப்பச் சொன்னாளே? கடிகாரம் மூன்று அடித்தது.

போர்வையை உதறித் தள்ளினான், எழுந்து உட்கார்ந்தான், தலை கனத்தது. மீண்டும் படுத்துக்கொண்டான். உடலில் குளிரும் உஷ்ணமும் கலந்த நிலை ஏற்பட்டது. வியர்வையும் வியர்த்தது, போர்வைக்கும் ஆவல் ஏற்பட்டது.

இது என்ன சங்கடம்?

கண்ணை மூடியதும் மீண்டும் தாயாரின் உருவம் எதிரே தோன்றிற்று.

பார்த்துக்கொண்டே யிருக்கும்போதே கண்கள் குழிந்தன! முகம் பிரேதக் களை அடைந்தது. அவள் இறந்துவிடுவாள்.

ஆசையுடன் வளர்த்த பையன் தன் கிரமமான ஒரு விருப்பத்தை நிறைவேற்றாத ஒரு துயரைத் தாங்கிச் சென்று விடுவாளோ?

ரெங்கநாதன் தங்கத்தை ஒரு முறை நினைத்தான். நல்ல பெண். குலம் கோத்திரம் குணம் எல்லாம் மிகவும் மேல். ஆனால்...

அவன் எப்பொழுது தூங்கினான் என்று தெரியாது.

## ஆண்—பெண் உறவு

மறு நாள் காலையில் எழுந்திருக்கும் பொழுது ரெங்கநாதன் சில முடிவுகளுடன் எழுந்

தான். சந்திராவின் நடத்தைக்குக் காரணத்தைக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். சின்ன விஷயம் தான், பெரிதானாலும் ஆகலாம். யார் கண்டது? பெண் தானே. தந்தையிடம் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி வீண் மனக் கசப்பு ஏற்படுத்திவிட்டால்? ஏனோ இந்தச் சிறிய விஷயம் அவனைப் பெரிய கற்பனை, பயத்துக்குள்ளாகிவிட்டது. இரண்டாவது தீர்மானம் இந்த மணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்று ஆராய்ந்து மாலைக்குள் முடிவு கட்டிவிட வேண்டியது.

எழுந்திருந்து ஸ்நாநம் முதலிய நித்தியக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே தன் அறைக்கு வந்ததும் முதலியார் வீட்டு ஆள் வந்திருப்பதைப் பார்த்தான்.

'என்ன பொன்னு?'

'சந்திரா அம்மா அனுப்பினுங்க?'

'எதற்கு?'

'நேற்று இரவு நீங்கள் வந்த பிறகு கிராமத்திலிருந்து சாத்துக்குடியும் கொடிமுந்திரியும் வந்தன. அதை விடாமல் கொடுத்துவிட்டு வரச் சொன்னுர்கள். உங்களுக்கு நம் கொடி முந்திரியைப் பிடிக்குமாம்.'

'முதலியார் இல்லை?'

'ஐயா இன்னம் எழுந்திருக்கவில்லை. நேற்று மயானத்துக்கு வெயிலில் நடந்த அசதி......'

'நடந்தா போனுர்கள்?'

அதற்குள் பார்வதி அம்மாள் கூடையைத் திருப்பிக் கொண்டு வந்தாள். கூடையை வாங்கிக் கொண்டு பொன்னன் திரும்பிப் போனுன்.

மீண்டும் ஒரு முறை ரெங்கநாதனுக்குச் சந்திராவைப் பற்றி எண்ண வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எனக்குப் பிடிக்கும் என்றல்லவா அனுப்பியுளாம்? இந்தப் பக்தி எதற்கு? படிக்கத்தான் மறுத்துவிட்டாளே!

சரி போகட்டும். ரொம்ப நாளாகப் பழகிவரும் குடும்பம். இந்த வீட்டில் கொடிமுந்திரிப்பழம் சுவைத்துத் தின்ன நான்தானே இருக்கிறேன்....

பிறகு ரெங்கநாதன் எதையோ வாசித்துப் பொழுது போக்கலாம் என்று எண்ணினுன். எதை எடுத்துப் பார்ப்பது என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதே 'On Marriage' என்ற ஒரு கட்டுரைப் புத்தகம் கண்ணில் பட்டது. அதை எடுத்துப் பிரித்தான்.

சிருஷ்டிக்கு இயற்கை துடிக்கிறது. எல்லாம் அதன் ஆணைக்குக் கட்டுப்பட்டவர்களே?'

அவன் புத்தகத்தை மூடினுன். கண்களையும் மூடினுன்.

வாசலில் 'ரெங்கநாதா!' என்ற குரல் கிளம்பிற்று, கூடவே பாஸ்கரனும் வந்து விட்டான்.

பாஸ்கரன் ரெங்கநாதனிடம் நெருங்கிய நண்பன். வந்தவுடனேயே, 'வா ரெங்கநாதா. கடைத் தெருவுக்குப் போய்விட்டு வரலாம்.'



'கடைத்தெருவுக்கா?' என்று ரெங்கநாதன் கண்கள் கடிகாரத்தைச் சென்று நோக்கின.

'மணி எட்டரை ஆகிறது. ஒன்பதரைக்குள் வந்துவிடலாம். இன்றுதான் முதல் மணி உனக்கு வேலை இல்லையே, வா போகலாம்.'

'சரி வா,' என்றுன் ரெங்கநாதன். மனதின் இந்தப் பேயாட்டத்திலிருந்து விடுதலை அடையலாம் என்ற எண்ணத்தால் ரெங்கநாதன் எழுந்தான். தாயாரைக் கூப்பிட்டுவிட்டு, சட்டை போட்டுக்கொள்ள உள்ளே சென்றுன்.

பாஸ்கரனைப் பார்த்த பார்வதி அம்மாள், 'என்ன பாஸ்கரா, என்ன விசேஷம்!' என்றுள்.

'ஒன்றுமில்லை, கடைத்தெருவுக்குப்போகிறேன். ரெங்கநாதனைக் கூப்பிடவந்தேன்' என்றுன்.

பாஸ்கரனிடம் பார்வதி அம்மாளுக்கு அன்பு உண்டு. அவள் அன்பு காரணமாகத்தான் அவனுடைய பல கெட்ட வழக்கங்கள் நின்றிருந்தன. பார்வதியம்மாள் கண்டித்து விரட்டுவதில் நம்பிக்கைக் கொண்டவள் இல்லை. பாக்கி வீட்டில் எல்லாம் 'பாஸ்கரா நீ இங்கே வராதே' என்று விரட்டுவார்கள். தங்கள் குழந்தைகளிடம் பாஸ்கரனுடன் சேராதே என்பார்கள். பார்வதி அம்மாள் மட்டும் அப்படிச் சொன்னதே இல்லை. 'பாபம் தாயில்லாக் குழந்தை. தந்தையும் வளர்க்கத் தெரியாமல் வளர்த்துவிட்டார்!' என்று சொல்லி அவனை அரவணைப்பாய் அழைப்பாள். 'தன் குழந்தை இப்படி இருந்தால் ஒரு தாய் சகிப்பாளா? என்று சொல்லிக் கொள்வாள். அவனும் இந்த அன்புக்கு ஈடுபட்டான். சிகரெட் முதலிய கெட்ட பொருள்களைத் தொடுவதை விட்டுவிட்டான். அவன் தந்தை இறந்து சொத்து அவன் கையில் வந்துவிட்டது. சிறிய தாயாரின் குழந்தைகளை அவனே பராமரித்தான். ஊரே அவன் குணத்தைக் கண்டு வியந்தது. மணமும் ஆகியிருந்தது.

'ஏண்டாப்பா, ரெங்கநாதனுக்கு நீயாவது சொல்லக்கூடாதோ?' என்றாள் பார்வதியம்மாள்.

எதை என்று புரிந்துகொண்டான் பாஸ்கரன்.

'அவன்தான் பிடிவாதம் செய்கிறானே அம்மா!' என்றான்.

அதற்குள் ரெங்கநாதன் சட்டைபோட்டுக் கொண்டு வந்துவிட்டான், தாயார் அந்தப் பேச்சைப் பையன்முன் தொடர விரும்பவில்லை என்று கண்டுகொண்ட பாஸ்கரன், 'வருகிறேன் அம்மா' என்றான்.

'அப்பா சீக்கிரம் வந்துவிடு.'

'நானே அழைத்துக்கொண்டுவந்துவிடுகிறேன்!' என்று சொல்லி, பாஸ்கரன் ரெங்கநாதன் தோளில் கைபோட்டுக்கொண்டு சென்றான்.

இருவரும் பாஸ்கரன் கொண்டுவந்திருந்த சொந்தக் குதிரை வண்டியில் ஏறிக்கொண்டனர்.

வண்டிக்காரன் 'எங்கே?' 'என்றான்.'

'ஓட்டு மேல வீதிக்கு முதலில்' என்றான்.

மேல வீதியில் பாஸ்கரனுக்கு என்ன வேலை? ரெங்கநாதன் கேட்க ஆசைப்பட்டான்.

பாஸ்கரன், 'என்னடா முழிக்கிறே. நீ உலகமே அறியாத பிள்ளையடா. உலகம் பூராவுக்குமே நான் மேலத்தெருவுக்கு ஏன் போகிறேன் என்று தெரியும். நீ மட்டும் முழிக்கிறாய்!'

ரெங்கநாதன் யோசித்தான். மேலத்தெருவில் பாஸ்கரனுக்கு இளம் வயதிலிருந்தே சிநேகமான ஒரு பெண் உண்டு என்று தெரியும். ஆனால் இந்த விஷயம் பாஸ்கரன் அவ்வளவு துணிவாக வெட்கமில்லாமல் சொல்லக்கூடியது ஒப்புக்கொள்ளக் கூடியது என்பது அவனுக்கு மிக ஆச்சரியத்தை அளித்தது.

ரெங்கநாதன் மனைவியே வேண்டாம் என்று நினைக்கும் மனப்பாங்கில் இதை ஒரு பாபம் என்றே எண்ணினான்.

'இன்னுமா அங்கே போய் வந்துகொண்டிருக்கிறாய்?' என்று கேட்டான் துணிந்து.

'அசடே, பெண்களின் உண்மைக் குணம் தெரிந்தால் நீ இவ்விதம் பேசமாட்டாய்?'

மேலே எவ்வளவோ கேட்க ஆசையாயிருந்தது ரெங்கநாதனுக்கு. பெண்ணுக்கும் ஆணுக்கும் உடல் நீதியில் ஏற்படவேண்டிய உறவின் அவசியத்தையே மறுக்கும் ரெங்கநாதனுக்கு இந்த விசித்திர உறவும் ஒரு புதிராக இருந்தது. ஒருகால் இதைப்பற்றிய ஆராய்ச்சி அவனுக்கு ஒரு பதிலைத் தரலாம். ஆனால் வண்டிக்காரன் இருக்கும்போது பேசுவது விரஸமாகப் படவே அவன் சும்மா இருந்தான்.

விஷயத்தை ஊஹித்த பாஸ்கரன் வரும் தீபாவளியைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

வண்டி ஒரு பெரிய வீட்டின் வாசலில் நின்றது. பாஸ்கரன் இறங்கித் தயங்கி நின்ற ரெங்கநாதனையும் உள்ளே இழுத்துக்கொண்டு சென்றான்.

அங்கே ஒரு இருபத்தைந்து வயது உள்ள ஒரு மங்கை—யுவதியா, பெண்ணா? என்று சொல்லக் கூடத் தெரியாமல் விழித்தான் ரெங்கநாதன்-வரவேற்றாள்.

நேரே சென்ற பாஸ்கரன் ஒரு கட்டிலில் அமர்ந்தான். ரெங்கநாதன் நின்றான்.

'இவர் யார் தெரியுமா?'

'தெரியும். உபாத்தியாயர் ரெங்கநாதன்?'

'ஏது. எப்படித் தெரிந்தது?'

'இவரைத் தெரியாமல் இந்த ஊரில் யாராவது இருப்பார்களா?.........'

ரெங்கநாதனைப் பாஸ்கரன் உட்காரச் சொன்னான்.

ரெங்கநாதன் ஒரு 'தேவடியாள்' வீட்டில் கிடைக்கும் இந்தப் புகழ்ச்சியை வேண்டா வெறுப்பாய்க் கேட்க ஆரம்பித்தான்.

அவள் அவனுடைய நல்ல குணத்தை அவளுடைய மாமன் மகள் புகழ்ந்தபடி சொல்லிக்கொண்டு வந்தாள். இவளுக்கு மாமன் வேறு மகள் வேறா? என்ன தேவடியாள்களுக்கும் உறவு முறை என்றெல்லாம் உண்டா? என்று நினைத்தான் அவன்.

சமூகத்தால் பஹிஷ்கரிக்கப்பட்டு,காமுகர்களின் பலஹீனத்தைக் காசாகமாற்றி ஒதுங்கி வாழும் அநாதைகள் என்று எண்ணி வந்திருந்தான் ரெங்கநாதன். இது எல்லாம் அவனுக்குப் புதுமை யாகப்பட்டது.

'எங்கே வந்திங்க?' என்ருள் விலாசினி.

'ஒன்றுமில்லே கிளம்பு?' என்ருன் பாஸ்கரன்.

'எங்கே?'

'என் மனைவி புடவை வேண்டும் என்ருள்...!'

'அதற்கு அவுங்களை அல்ல அழைத்து வர வேண்டும்?'

'அவள் வந்தால் தானே?'

'சரி பணம் வேண்டுமா?'



'வேண்டாம், நீ இது வரை எனக்குச் செய்தது போதும், இந்த வருஷம்தான் என் குடுத்தனம் நிலைக்கு வந்தது. குறுவையும் நல்ல விளைச்சல், நீ இதுவரை செய்த உதவிக்கு இனி நான்கடனைத் திருப்பித்தர வேண்டாமா?'

'ஆமாம், அதெல்லாம் சொல்லி என் மானத்தை வாங்குங்க. நீங்க கேளுங்க சார். அம்மா செத்து, அப்பாவும் விரட்டி விட்ட ஒரு நல்ல பிள்ளை வீணுகக் கெட்டுப்போறதை யார்தான் பாத்துக் கிட்டு சும்மா இருக்கமுடியும்? என்கிட்டையும் அம்மா சம்பாதித்த சொத்து நிறைய இருந்திச்சு. அதையும் நல்லவழியில்செலவழிக்கவேண்டாமா?

'அதற்கு நான் தானே சத்பாத்திரன்?'

ரெங்கநாதன் இந்த மத்யஸ்த வேலையை ஒரு ஆச்சரியத்துடன் பார்க்க ஆரம்பித்தான்.

'நீங்க செய்த உபகாரத்தை மட்டும் சொல்ல வேண்டாமா? எனக்கு மறுபடியும் அந்தத் தொழிலுக்குப் போகாமல் இருக்க உற்ற துணை வராக வந்தீர்களே, அதற்கு நான் கடமைப் பட்டவளில்லையா?'

'அதுசரி, பரஸ்பரம் பிறகு புகழலாம். நீ வருகிருயா இல்லையா?'

மன்னிச்சுக்குங்க. நான் ஸ்நானம் செய்யல்லே. பூஜை புனஸ்காரம் எல்லாம் இருக்கிறது; நீங் கள் போங்க. இந்தாங்க இந்த இருநூறு ரூபா யையும் எடுத்துக்கிட்டுப் போங்க......!'

எனக்குத்தான் பணம் வேண்டாம் என் றேனே?'

'சரிதாங்கி றேன். ரொம் ப பிசுக்காரம் செய்துக்கா தீங்க. எனக்கு வாங்கற புட வை உங்க சில விலேயே இரு க்கட்டும். நீங்க என் சிலவிலே யேஒருபுடவை வாங்கி அம்ம ணிக்கும் ஒரு புடவை, இந்த ஐயா சம்சாரத் துக்கும்......,

பாஸ்கரன் சிரித்தான்.

'என்னவோ இந்த ஐயரைப் பற்றிஎல்லாம் தெரியும் என் ருயே?'

'ஏன் இன்னம் கலியாணம் ஆகவில்லையா?'

'ஆமாம்.'

'நான் கண்டபடி, பிராமண ஜாதியில் கூட இந்தப்படி இருக்குமா? என்ன?'

'சரி தான். அவர் இன்னம் பிர்ம்மசாரி. உன் வார்த்தை பலிக்கட்டும்.'

அதென்ன அப்படிச் சொல்றீங்க. பண்ணி வைக்க வேண்டியது உங்கள், ஏன் நம், கடமை அல்லவா?...... அது போகட்டும். இந்த முறை ஐயாவுக்கு ஜரிகைச் சோமன் எடுத்துக் கொடுங்கள். அடுத்த தீபாவளிக்குள் சேலையும் எடுத்துக் கொடுக்கும்படியான நிலைமை ஏற்படட்டும்.'

பிறகு விடை பெற்றுக் கொண்டு இருவரும் வண்டியில் அமர்ந்தனர்.

ரெங்கநாதன் கேட்டான்; இவள் இந்த ஊர் இல்லையா?

'இல்லை. ஐந்து வருஷத்துக்கு முன்புதான் வந்தாள். நான் நடுவில் ஒரு ஆறு வருஷம் வரை தொலைந்து போயிருந்தேன் அல்லவா?'

'ஆமாம். எல்லோரும் கூடக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்......!"

'ஆம், என் அப்பா அம்மாவைத் தவிர எல்லோரும். அந்த 5, 6 வருஷமும் எனக்கு உணவு, உடை அளித்தவள் இவளே தான். கிராதகியான இவள் தாயாரைக்கூட மனது மாறச் செய்து எனக்குச் சிச்ருஷை செய்தாள்.

'ஒரு தடவை நான் ஜ்வரமாய்க் கிடந்தேன். அப்பொழுது இவள் செய்த சுச்ருஷை சொல்ல முடியாது......'

ரெங்கநாதன் கேட்டுக் கொண்டே வந்தான்.

'நீ விடச் சொன்னுயே, கடைசியில் அவள் தாய் சாகும் போது அவளை என்னிடம் ஒப்புவித்து விட்டுப் போனுள். அவள் என்ன சொன்னுள் தெரியுமா?:

'தம்பி, எங்கள் குலத்துக்குத் திடீரென்று மனைவி உரிமை கிடைக்காது. ஆனால் காலம் மாறி வருகிறது. இவளுக்கு என்னவோ உன்னிடம் அபார ஆசையாயிருக்கிறது. ஆகவே நீ இவளை ஏற்றுக் கொள். முடிந்தால் கலியாணமே செய்து கொள். குழந்தைகள் பிறந்தால் எப்படியாவது அவர்களுக்கு நல்ல நிலைமை ஏற்படுத்தி விடு. பணத்துக்குக் கவலைப்படாதே' என்று சொல்லிச் சென்றுள். முழுச் சொத்தும் இவள் பேரில் தான் இருக்கிறது. இவள் என் பேரில் எழுதி வைக்கத் துடிக்கிருள். நான் தான் வேண்டாம் என்கிறேன். இந்த என் வைராக்யத்துக்குக் காரணம் யார் தெரியுமா?'

ரெங்கநாதன் விழித்தான்.

'எல்லாம் உங்கள் சிநேகிதம் தான்...... அதுகிடக்கு இவளை விட்டுவிட முடியுமா, நீ சொல்......'

ரெங்கநாதன் பதில் சொல்லும் நிலைமையில் இல்லை.

அன்று M. S. M. கனி ராவுத்தர் அண்டு R. பாலுசாமி கடையில் ஐயாயிரத்து ஐந்நூறு சொச்சத்துக்கு வேஷ்டியும் புடவையும் வியாபாரம். அதில் ஐந்நூறு ரூபாய் பாஸ்கரன் கொடுத்தது.

ரெங்கநாதன் வண்டியை விட்டிறங்கி உள்ளே வந்தபோது வண்டிக்காரனும் உள்ளே வந்து மேஜைமேல் வேஷ்டிப் பொட்டணத்தை வைத்துச் சென்றுன்.

மணி ஒன்பதரை.

ரெங்கநாதன் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் கிளம்பினுன்.

அவன் மனம் அதிகம் குழம்பியிருந்தது.

## பெண்ணும் தலைவலியும்

ரெங்கநாதன் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்த போது மணி பத்தடித்து நாற்பது நிமிஷங்கள், ஆகியிருந்தன. இன்னும் இருபது நிமிஷங்கள் கழித்துத்தான் அவனுடைய வேலை ஆரம்பம். ஆருவது பாரத்தில் கணக்குச்சொல்லிக் கொடுக்கவேண்டும். அன்று சொல்லிக்கொடுக்க வேண்டிய பாடத்தை அவன் ஒருவாறு யோசித்து வைத்தான். மிச்சம் பதினைந்து நிமிஷங்களிருந்தன.

உபாத்தியாயர் அறையில் வேறு ஒருவருமில்லை. ஆகவே அவன் மனம் மீண்டும் அந்தத் தலைவலி வேலையைச் செய்ய ஆரம்பித்தது.

அவனுக்குப் பெண்ணுலகத்தில் சந்திப்பு, தாய் மூலமாக ஏற்பட்டது. ஆகவே அவன் முதலில் தாய்மையை அறிந்தவன், பெண்களைத் தாயாக எண்ணிப் பூசித்து வந்தான். பிறகு ஏற்பட்டது கற்பனையுலகத்தில் பெண்களுடன் சம்பந்தம். பெரிய முனிவர்கள், யோகிகள் இவர்களின் வாழ்க்கையைப் படித்த அவனுக்குப் பெண்கள் மாயை உருவமாகவும் பேய்க்குணம் படைத்தவர்களாகவும் தோற்றம் எடுத்தனர்.

ஒரு சமயம் இடுப்பில் பெண் குழந்தையுடன் வரும் தாய்மார்களைக் கண்டால் வெறுப்பான். இவர்களால் உலகத்துக்கு என்ன ஆகும்?

ஓடும் ஆற்றைத் தடுத்து நிறுத்தித் தண்ணீரை வீண்வழியில் செலுத்த முயலும் அணைகளைப் போல் அவன் உள்ளம் பெண்களைச் சித்திரிக்கும்.

பெருங்காரியம் செய்யப் பிறந்திருக்கும் ஆண்களை இந்தப் பெண்கள் மயக்கித் தம் வழி இழுத்து அவன் வலிவு, தேஜஸ் எல்லாவற்றையும் விழுங்கிக் கொண்டு வெறும் பிள்ளை வளர்க்கும் யந்திரங்களாக ஆக்கி விடுகிறார்கள் என்று எண்ணினான். பட்டுப்புடவை கட்டி, பௌடர்பூசி, சாயம் தடவி வெளியேறும் பெண்களை எங்காவது கண்டால் அவன் உள்ளம் பற்றி எரியும். கணவன் இந்தப் பண்டங்களை இவளுக்குச் சம்பாதித்துக்கொடுக்க எவ்வளவு நேரம் உழைக்கவேண்டும்? அவசியமான சாப்பாடும் உடையும் சம்பாதிக்கவே மனத்துக்கு வலிவுபோதாமல் இருக்கும்பொழுது இந்தப் பெண்கள் இப்படித்திரிகிறார்களே என்று எண்ணுவான். அது அவன் மனவாழ்வின் வளர்ச்சியில் ஒரு நிலை.

பிறகு அவன் நிலையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவன் பெண்களை வெறுப்பதை நிறுத்தினான். அவர்களிடம் ஒரு பரிதாபம்கொண்டான்.

பெண்களின் இந்த நிலைக்கு அவர்கள் காரணமில்லை; இந்த ஆண்கள்தான் அவளுடைய தாய்மையை மறந்து பெண்ணைபபொம்மையாக்கி வைத்திருக்கின்றனர். அவளிடமும் ஒருசக்தி இருக்கிறது. அது மனிதனை ஊக்கும் வல்லமை கொண்டதுதான். ஆனால் அது மனிதனைக் கெட்டவழியில் ஊக்கிவிட்டால் அதற்குப் பெண்கள் எவ்வளவு தூரம் பொறுப்பாளியாவர் என்று அவன் அவர்களிடம் பரிதாபம் கொள்ள ஆரம்பித்தான்.

அடுத்தபடியாக அவன் உள்ளத்தில் இந்தப் பெண்களுக்கும் தனக்கும் என்ன வகையில் உறவு ஏற்படும் என்று எண்ணத் தொடங்கினான். பெண்களிடம் பரிதாபம் பிறந்தாலும் அவர்களிடம் அவனுக்குப் பயம் குறையவில்லை. ஒதுங்கியே இருந்தான். தொட்டால் உடலுக்கு வலிவும் அளிக்கலாம், வாழ்வையும் குலைக்கலாம் என்ற மனோநிலையில் அவன் அவர்களை நெருங்காமல் இருப்பதே நல்லது என்று முடிவு செய்தான்.

அனுபவம் வலுத்தது. அறிவு விசாலமடைந்தது. மீண்டும் அவன் மனோநிலை மாறிற்று. மனைவியாயில்லாமல் தாயாகமுடியாது என்று உணர்ந்தான். அழகு இல்லாமல் இழுப்புச் சக்தி இல்லாமல் பெண் மனைவியாக முடியாது என்று தெரிந்துகொண்டான். பெண் இல்லையேல் உலகமில்லை, சக்தியில்லை, வாழ்வில்லை என்ற பேருண்மைகளை எல்லாம் தெரிந்துகொண்டபிறகு அவன் மீண்டும் யோசிக்கத் தொடங்கினான்.

ரிஷிகள் வாழ்வு மீண்டும் மீண்டும் அவனை ஆகர்ஷித்தது. அவன் இந்தமாதிரி எல்லாம் தவித்தபிறகுதான் அரசியல் அரங்கில் காந்தி வந்திருந்தார். ஆனால் அவன் ஒரு முடிவு காணு முன்னமே அவர் இறந்துவிட்டார். ஆகவே அவர் இலக்கியங்களையெல்லாம் வாசித்தான்.

பிறகு ஒரு முடிவுக்கு வந்தான்.

எல்லாம் உண்மையானாலும் பெண்களை எல்லோருமே மனைவியாகக் கொள்ளவேண்டும் என்பதில்லை, இந்தச் சம்பந்தம் தவிர மற்றச் சம்பந்தத்திலும் பெண்களால் கிடைக்கும் நன்மைகள் எல்லாம் கிடைக்கலாம்; தீமையையும் தவிர்க்கலாம் என்ற முடிவுதான் அவன் தீர்மானமாயிருந்தது.

பெண்ணைத் தாயாகவோ, சகோதரியாகவோ, எஜமனியாகவோ, சிஷ்யையாகவோ கொள்வதில் ஒன்றும் நஷ்டமில்லை. அப்படியிருந்தால் கண்டிப்பாய் லாபம் ஏற்படும். அந்த நிலையில் இரு சாராரும் பிர்மசாரியாகவே இருந்து தொண்டாற்றலாம்.

அந்த முடிவுக்கு வந்தபிறகுதான் அவன் பெண்களைச் சந்திக்கவே தைரியம் கொண்டான்.

அந்த முடிவு வந்தபிறகு முதன் முதலாக அவன் உள்ளத்தில் இடம் பெற்றவள் சந்திராதான். பெண் மனைவியாகி ஆணுக்குச் சக்தியாக வேண்டிய எல்லாக் குணங்களும் அவளிடமிருந்தன. அழகு, ஆகர்ஷணம், அன்பு கெட்டிக்காரத்தனம் எல்லாம் அவளிடமிருந்தன. அவள் மனைவியாகாமல் மற்றப்படி அவனை ஊக்குவிக்க வேண்டிய யோக்யதைகளும் இருந்தன. ஜாதியும், பணமும் அந்த நிலை ஏற்படாமல் தடுத்துவிடலாம். ஆனால் இவை இரண்டும் மாறிவிடக்கூடியவை. அதனால்தான் நிரந்தரமான ஒரு கட்டுப்பாட்டை அவன் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருந்தான். அது அவளைச் சிஷ்யையாக ஏற்றுக்கொள்வதுதான்.

சிஷ்யையாக ஏற்றுக்கொண்டால் வாழ்நாள் முழுவதும் அந்த மனோநிலை மாறவேண்டாம். பெண்ணால் கிடைக்கும் தீமை தவிர்த்து நன்மைகள் முழுவதும் கிடைத்துவிடும். ஆகவே அவன் இந்த எண்ணத்துக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்திருந்தான்.

இந்த மனோ நிலைமையை உணர்ந்தால்தான் ரெங்கநாதனுடைய காரியங்களுக்கு ஒரு சரியான பதில் கிடைக்கும். அதனால்தான் இந்த விஷயத்தைக் கொஞ்சம் விரிவாகச் சொல்லவேண்டிய அவசியமாயிற்று.

ரெங்கநாதன் பதினைந்து நிமிஷங்களும் ஒரே கேள்வியைத்தான் கேட்டுக்கொண்டான். 'சந்திரா வாசிக்க ஏன் மறுத்தாள்? முதலில் சரி என்றவள் ஏன் மறுத்தாள்? ஏன் மறுத்தாள்? காரணம் என்ன?

அவன் புத்தி கலங்கிற்று, படுத்தது, நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டது; தலையைப் பிய்த்துக் கொண்டது. முடிந்த வேலையா?

சந்தேகம் எழுந்த இடம் அல்லாமல் பதில் எங்கே கிடைக்கும்? சாகாமல் சுவர்க்கம் பார்க்க முடியுமா? சரி, சந்திராவையே கேட்டுவிடுவோம்.

என்றாலும் நாம் எப்படிக் கேட்பது? தாயார் மூலம் கூப்பிட்டுக் கேட்கச் சொல்லலாமா? அவள் தந்தையைக் கேட்கலாமா? என்ன விரஸம்?

ஒருகால் இன்று அவர் தந்தையே ஏற்பாடு செய்வாரோ? இன்றும் வராவிட்டால்? அதற்கு என்ன பொருள் கொள்வது?

அவன் சங்கடப்பட்டான். இடையிடையே தாயாரின் கலியாண வேண்டுகோளும் விலாஸினியின் அன்பும் குறுக்கிட்டு அவன் மண்டையை இன்னும் குழப்பின.

'சார் தபால்!' என்ற சத்தம்கேட்டு நிமிர்ந்தான். பள்ளிக்கூடத்துப் பியூன் ஒரு கடிதத்தை நீட்டினான்.

'பெல் அடிக்க எவ்வளவு நேரமிருக்கிறது?'

'ஆச்சு, அடிக்கவேண்டியதுதான்!'

ரெங்கநாதன் கடிதத்தைப் பிரித்தான். அது 'டீசர்ஸ் கில்ட்' தலைவர் எழுதியிருந்த கடிதம்.

'சர்க்கார் நியமித்திருக்கும் கமிஷன் அவசரமாக நம்மைச் சந்திக்க விரும்புவதால் உடனே வாருங்கள். இந்தக் கடிதம் உங்களுக்கு வெள்ளிக்கிழமை கிடைக்கும். சனிக்கிழமை வாருங்கள். திங்கட்கிழமை பேசிவிட்டு அன்று இரவே திரும்பிவிடலாம். இவர்களைச் சந்திப்பதற்குமுன் சில விஷயங்கள் தயார் செய்துகொள்ளவேண்டும்.'

ரெங்கநாதன் கில்ட் ஸெக்ரட்டரி. சரி, மதராஸ் போகவேண்டியதுதான்.

அவனுக்கு இன்னம் ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. செவ்வாய் இரவு ரேடியோவில் பேசவேண்டும். இரண்டும் ஒரே தடவையில் ஒத்துக்கொண்டது என்று எண்ணி நேரே ஹெட்மாஸ்டர் அறைக்குச் சென்றான்.

ஹெட்மாஸ்டர் முதலில் முகத்தைச் சுளித்துக்கொண்டார். என்றாலும் ரெங்கநாதன் விஷயத்தில் அவர் ஒன்றும் வாய்திறக்கமுடியாது, அவருக்கு. ரெங்கநாதன் பொறுப்புணர்ச்சியை எல்லோரும் அறிவார்கள். தவிர, வேண்டாம் என்றபோது அவரேதான் ரெங்கநாதனை ஸெக்ரட்டரி ஆகச் சொன்னதும், அவர் சரி என்றார்.

மணி அடித்ததும் ரெங்கநாதன் வகுப்புக்குச் சென்றான், அன்று எப்படிப் பாடம் சொல்லிக்கொடுத்தான் என்று அவனுக்கே அதிசயம். அங்கே சென்றதும் அவன் எல்லாவற்றையும் மறந்துவிட்டான்.

மணி அடித்ததும் வெளியே வந்த அவன் சுந்தரேசனைக் கூப்பிட்டு, 'இன்று நான் மதராஸ் போகிறேன். புதன்கிழமை காலையில்தான் வருவேன். 'அப்பாவிடம் சொல்லிவிடு' என்றான்.

(தொடரும்)




*Retail Branches:*

285, China Bazaar Road,
MADRAS.

71, Pondy Bazaar, T. NAGAR.



# “இது சுலபம்...

## லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகுடன் விளங்குங்கள்”

என்று கூறுகிறார்

# ராகினி

ராகினி கூறுவதாவது: “நான் வழக்கமாக லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்துபெறும் சரும பாதுகாப்பை ஒருபொழுதும் தவற விடமாட்டேன். லக்ஸ் டாய்லட் சோப்பின் சருமத்திற்கு ஊட்டமளிக்கும் சக்தி என் சருமத்தில் அற்புதமாறுதலை ஏற்படுத்தியிருப்பதைக் காண்கிறேன் . . . சருமத்திற்கு புது சோபையும், மகிழ்ச்சிதரும் வழவழப்பும் அளித்திருக்கிறது.”




வெண்மையானது, சுத்தமானது, நறுமணம் கொண்டது

# லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 369-X52 TM

# புத்தக விமர்சனம்

## அனுபவ வைத்ய முறை

நமது சென்னை அரசாங்கத்தார் பணச் செலவைப் பார்க்காமல் பழைய கையெழுத்துச் சுவடிகளைச் சோதித்து, அவைகளுள் அறிவும் அனுபவமும் வாய்ந்த பெருமக்கள் பொறுக்கிக்கொடுத்த பிரதிகளைப் பிரசுரம் செய்து வருகின்றனர். அரும் பெரும் நூல்கள் பல பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். எட்டயபுரம் மஹாராஜாவிடமிருந்த ஒரு கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுத்து எழுதப்பெற்று, சென்னைப்புத்தகாலயத்தில் இருந்து வந்த அனுபவ வைத்ய முறை என்னும் ஒரே பிரதியை, சர்க்கார் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். அரசாங்க இந்திய மருத்துவக் கல்லூரியில் சித்த வகுப்புப் பேராசிரியர்களான ஸ்ரீ கோ. துரைராஜன், ஸ்ரீ க. சு. உத்தமராயன் இவர்கள் பரிசோதித்த பின்னரே இது பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்நூலில் காணப்படும் வைத்ய முறைகளில் நமக்குச் சிறிது நம்பிக்கை ஏற்படலாம். இதில் கூறப்படும் மந்திரங்களிலும் நம்பிக்கை உண்டாகுமா என்பதுதான் சந்தேகம். கர்ப்பம் தரிக்க மருந்து, பாம்பு நாய் கடியாமல் இருக்க மருந்து, வசியத்துக்கு மருந்து, வாழாத பெண்ணுக்கு மருந்து, வெள்ளெழுத்துக்கு மருந்து என்பவைகளை நாம் நம்பாமல் அலக்ஷ்யம் செய்வோம். விக்கலுக்கு இருமலுக்குச் செல்லும் சிகிச்சைகளில் சற்றுக் கவனம் செலுத்தத் தோன்றுகிறது. அவ்வாறே பெண்களுக்குள்ள பிரத்யேக வியாதிகள் விஷயத்திலும் நமது கவனம் செல்கிறது. முயற்சி போற்றத்தக்கதே—முடிவை இரு வைத்ய முறைகளும் அறிந்த அரசாங்க வைத்யர்கள் பரிசீலனை செய்து தெரிவிக்க வேண்டும்.

Vol. I பக்கங்கள் 176
விலை ரூ. 3—14—0

சென்னைக் கீழ்த்திசை நூல்நிலயப் பிரசுரம் (Government Oriental Manuscripts Library Madras)

2ஆவது பாகம், பக்கம் 218—விலை, ரூ. 4–8–0

இது பெரும்பாலும் செய்யுள். எண்ணெய், நெய் கிருதம், தைலம், சூர்ணம், லேகியம் தயாரிக்கும் முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

புளியம்பட்டி ஸ்ரீ பழனிச்சாமி கவுண்டர் கொடுத்த ஒரு கையெழுத்துப் பிரதியையும் சர்க்கார் வெளியிட்டிருக்கின்றனர். ஏழை மக்களுக்கு எளிதில் வைத்ய வசதி கிடைப்பதற்காக இது வெளியிடப்படுவதாக இந்நூலைப் பரிசோதித்து வெளியிடும் வைத்ய இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீ C. N. குப்புஸ்வாமியும் ஸ்ரீமதி V. S. பார்வதியும் கருதுகிறார்கள். ஸித்தவைத்யம் கையாண்டு அனுபவத்தில் பலனும் கண்டபின்பே அவைகளைக் கையேடுகளில் அம்மருத்துவர்கள் எழுதி வைத்தனர் என்றும் ஆகவே இம்முறைகளைப் பயமின்றி வீட்டில் பாட்டி வைத்யம்போல் வைத்துக் கொள்ளலாம் என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். பரு, அக்கி, கரப்பான், கணச்சூடு, கற்றாழை நாற்றத்துக்கு எவ்வளவு எளிதாக வைத்ய முறை கூறப்படுகிறதோ அவ்வளவு எளிதாகவே ஊமையைப் பேச வைக்கவும், பேய்க்கும், பைத்திய சன்னிக்கும் பெருவியாதிக்கும் கண்ணில் பூவுக்கும் கூறப்பட்டிருக்கிறது!

Vol. III பக்கங்கள் 232
விலை ரூ. 5—0—0

இதுவுமதே. புளியம்பட்டி ஸ்ரீ பழனிச்சாமி கவுண்டர் கொடுத்த மற்றொரு பிரதி. சித்தவைத்ய போதனாசிரியர் டாக்டர் C. N. குப்புஸ்வாமி முதலியார் பரிசோதித்துப் பதிப்பித்திருக்கிறார். பதிப்பு அழகாக அமைந்திருக்கிறது. மேற்சொன்ன மற்றவைகளுடன் ஜால வித்தை செய்யவும் வழி சொல்லப்பட்டிருக்கிறது. காயம் கற்பம் மந்திரம் தந்திரம் அவிழ்தம் எனும் சொற்களைத் தனித்தமிழாக்கி முதலியார் அவர்கள் புதுப்பொருள்கள் கூறியிருப்பதுதான் விசேஷம்.

''உடம்பினை முன்னமிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள்
கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயிற்
கொண்டானென்
உடம்பினையானிருந் தோம்புகின்றேனே'

எனும் திருமூலர் வாக்கை முன்னுரையில் எடுத்தாண்டிருக்கிறார்.

Vol. VI பக்கம் 112
விலை ரூ. 2—14—0

வைத்ய சாஸ்திரத்தின் அஷ்டாங்கங்களில் ஒன்றான பால சிகித்ஸை விஷயமாகக்

கௌமார பிருத்யம் எனும் குழந்தைகளின் பராமரிப்பைப்பற்றி வடமொழி நூல்கள் போலவே தமிழிலும் அனேக நூல்களில் இருந்து வருகின்றன. தந்வந்தரி, புலிப் பாணி, தேரையர், பிரமமுனி, போகர் முதலிய பண்டை நூல்களையும் அகத்திய மாமுனிவர் இயற்றிய பாலவாகட சாஸ்தி ரத்தையும் ஆதாரமாகக்கொண்டு 'பாலவா கடத் திரட்டு' என்று ஓர் நூல் இருப்பினும் சென்னை சர்க்கார் உத்தம பாளையம் கோம்பை ஸ்ரீ சங்கரநாராயண வாத்யார் அளித்த பிரதியையும் பாலக்காடு மிருதங்கம் ஸ்ரீ சுப்பய்யர் கொடுத்த பிரதியையும் சேர்த்து. 'பிள்ளைப்பிணிவா கடம்' எனும் இந் நூலை வெளியிட்டிருக்கி றார்கள். குழந்தைகளின் வியாதிகள் அவற் றிற்குரிய பரிகார முறைகளைப் பற்றிய ஒரு குறிப்புநூல் இது. மணிமந்திர ஔஷதங் கள் மூலம் சிகித்சை சொல்லப்பட்டிருக் கிறது. மந்திரங்கள் யந்திரங்கள் பலி என்று ஒவ்வொரு குழந்தை தோஷத்திற் கும் மாற்றுச்சொல்லி மருந்தும் சொல்லப் பட்டிருக்கிறது. வசனமாகவும் செய்யுளா கவும் அமைந்திருக்கும் இந் நூலின் பிழை களைச் சோதித்து, பண்டை நூல்களின் போக்கையும் ஏற்றத்தையும் அறிந்த ஆயுர் வேத பூஷணம் பண்டிதர் துரைஸ்வாமி ஐயங்கார்தம் முகவுரையுடன் இந் நூலைப் பதிப்பித்திருப்பதுதான் இந் நூலுக்கு விசேஷம்.

## ஆதித்ய ஹ்ருதயம்

விலை 0—4—0 சுகுண பப்ளிஷிங் ஹவுஸ்

60, ஈசுவரன் கோயில் தெரு, மாம்பலம். சென்னை 17.

ஆக்கூர் K. S. ஸ்ரீநிவாஸன் தொகுத்தது.

ஸங்கல்பம் அங்கந்யாஸம், ஸ்தோத்ரம், அதற்குத் தாத்பர்யம், சூரிய மங்கள ஸ்தோத்ரம் எல்லாம் தமிழ் எழுத்தில் நாலணாவில் நமக்குக் கிடைத்திருக்கின்றன. எல்லோருக்கும் உபயோக மாயிருக்கும்.

## ஸ்ரீ ராமாயண ஸாராம்ருதம்

பிரசுரித்தது. திருமஞ்ஜனம் ராகவ அய்யங் கார் B.A. 35. வடக்குச் சித்திர வீதி ஸ்ரீரங்கம்.

விலை 0—4—0

நாகரலிபியில் அச்சடிக்கப்பட்ட இச் சிறுநூல் ஆஸ்திகர்களுக்கு மிகவும் உபயோகமானது. இதில் ஸ்ரீ ராமாயண பாராயண உபக்கிரமம், ஸ்ரீ ராமாயண மஹாத்மயம், காயத்ரீ ராமாய ணம், ஸம்க்ஷேப ராமாயணம், ஸ்ரீ ராமாவதார கட்டம், ஸீதாவிவாக கட்டம், ஆதித்ய ஹ்ருத யம், ப்ரும்மா செய்த ராமஸ்தவம், ஸ்ரீ ராமபட்டா பிஷேக கட்டம், பலச்ருதி, பாராயண ஸமாபன முறை எல்லாம் அடங்கியிருக்கின்றன. ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமிகள் முகவுரையில் கூறுவதுபோல் ஒவ் வொரு ஆஸ்திகரும் தாங்கள் வாங்குவதோடு நில் லாமல் தங்கள் நண்பர்களையும் இப் புத்தகத்தை வாங்கி நித்யபாராயணம் செய்யச் சொல்லவேண் டியது.

## குழல் முடி

(ஆசிரியர் ஸ்ரீ K. வரதாச்சாரி. வெளியிட்டவர் ஸ்ரீ S. கல்யாண ஸுந்தரம் ஐயர், ஸ்ரீஜனார்த்தநா பிரிண்டிங் ஒர்க்ஸ், 98 டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம். விலை அணா 12.)

சென்னை ஸர்வகலாசாலை டாக்டர் ஸ்ரீ ராகவ வன் அவர்களின் முன்னுரை பெற்று வெளி யிடப்பட்டுள்ள இந்நூல் எமது பார்வைக்கு வந் திருப்பதால் சில கூறலுற்றோம்.

ஆசிரியர் ஸ்ரீ வரதாச்சாரியர் பன்மொழி பயின்று பன்னூல் உணர்ந்தவர். அவர் எழுதி யுள்ள நூல்கள் பல. அவற்றுள் அச்சேறிய சிலவற்றுள் இந்நூலும் ஒன்று.

ஒரு மூன்று மணி நேரத்துக்குள் நடிப்பிக்கக் கூடிய நாடகம் இது. இதனுள் உள்ள முப்பகு தியுள் வெகுளிச்சுவை, சூழ்ச்சித்திறம், உயிர் ஈகை ஆகிய மூன்றும் முறையே, ஓங்கி நின்றாலும் நூல் முழுவதிலும் பல் சுவையும் பயின்றுள.

முன்னோர் பொருள்களோடு அவர் தம் மொழி களையும் மேற்கொண்டிருப்பது மிகவும் பாராட் டத் தகுந்தது. இத்தகைய நாடகங்களே மக்க ளுக்கு நற்குண நற்செய்கைகளைப் பயப்பன வாகும்.

ஆசிரியரின் உரை நடையிலே திரிசொற்கள் வந்துளதைக் கொண்டு, எளியநடை வேண்டு மென்பார் எண்ணம் வேறுபடக் கூறுவர். இவ் வுரைநடை அழகும் சுவைதரும் ஆற்றலும் பெற்றுள்ளது என்பது எமது எண்ணம். தமி ழினிமை நுகர விரும்புவோர் இதனைப்படித்தும் நடித்தும் அவ்வினிமையை ஆற்றவும் நுகர் வாராக.

# மனச்சாட்சி




ஜி.எஸ்.மணி

நான்காவதாகப் பெற்றெடுத்த குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு மீண்டும் வந்துசேர்ந்தாள் பட்டு.

அப்போது பிறந்திருப்பதும் பெண் குழந்தையே.

அதற்குமுன்னர் மூன்று குழந்தைகள்; முதல் இரண்டும் ஆண் பிள்ளைகள்; மூன்றாவதாகப் பிறந்தது பெண். அத்துடனே நின்றிருக்கலாம்; சந்தான பாக்யம் போதுமென்றுதான் தோன்றியது. ஆனால் ஈசுவர சங்கல்பத்தை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்?

நாலாவதும் பிறந்தேவிட்டது.

மாமியார் அகமும், முகமும் ஒருங்கே மலர, சொல்லமுடியாத ஆனந்த உணர்ச்சி பொங்க, தன்னிரு கைகளையும் ஆவலுடன் நீட்டி, புதிய பேத்தியையும் பெற்றுக்கொண்டாள்.

பட்டு மாமியாரை முதலில் நமஸ்காரம் பண்ணினாள்.

“சகல சம்பத்தும் பெற்றுக்கொண்டு நல்ல வாழ்வு வாழ்ந்துகொண்டிரு; இந்தமட்டும் பெற்றுப்பிழைத்துத் திரும்பிவந்து சேர்ந்தாயே! வயிறும், குழந்தையுமாய் நீ நின்றவுடன் – ‘இரட்டையாக இருக்குமோ’ என்றுகூடச் சந்தேகப்பட்டேன்! – இது அவனைக்கொண்டு கறுப்பாகத்தான் பிறந்திருக்கிறது!” என்று தாங்கமுடியாத மகிழ்ச்சியால் ஓயாமல் பேசிக்கொண்டேயிருந்தாள் பாட்டி.

பட்டு தலைகுனிந்தபடி உள்ளே சென்றாள்.

கூடத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தான் துரை.

அவள் வந்ததும் தலைநிமிர்ந்து நோக்கினான்; புன்னகையுடன் ‘வா’ என்று சொல்லித் தலையசைத்தான்.

கடைக்கண்ணால் அவனைப் பார்த்து வெட்கத்துடன் சிரித்துக்கொண்டே பட்டு அவனையும் நமஸ்கரித்தாள்.

துரை அப்படியே திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தான். மேலும் பேச அவனால் முடியவில்லை.

அவள் எழுந்து நேராகச் சமையலறைக்குள் போய்ப் புகுந்துகொண்டுவிட்டாள்.

அம்மாவுடனே போயிருந்த இரண்டாவது பையனும், மூன்றாவது பெண்ணுமாக அப்பாவைப் பார்த்த சந்தோஷத்திலே அவனையே சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

"அப்பா!" என்று கூப்பிட்டுப் பரமானந்தப்பட்டான் நான்கு வயதுப் பிள்ளையாண்டான்.

"என்னடா! அங்கே போனதும் பாடத்தையெல்லாம் மறந்துவிடாமல் நினைவு வைத்துக்கொண்டிருக்கிறாயோ?" என்று கேட்டான் துரை.

"ஓ! இன்னும் எத்தனையோ கத்துண்டு வந்திருக்கேனப்பா!" என்று பெருமையுடன் சொன்னான் பையன்.

"நானுந்தான் சமத்தாயிருந்தேனப்பா!" என்று அடுத்த பெண் குழந்தையும் உடனே தெரிவித்துக்கொண்டாள்.

"அப்பாவை மறக்காமல் இருந்தாயோ?" என்று துரை அவளைச் செல்லமாய் வினவினான்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் தலையாட்டினாள் குழந்தை. நீ ஏனப்பா ஊருக்கு வரவேயில்லை?" என்று பதிலுக்குக் கேட்டாள்.

அதற்குப் பதில்சொல்லத் தெரியாமல் சிறிதுநேரம் தவித்துப்போனான் துரை.

நல்லவேளையாகச் சமயத்தில் பாட்டி வந்து காப்பாற்றினாள்.

புதிதாகப் பிறந்துள்ள சிசுவை அவன் முகத்துக்கெதிரே நீட்டி—"பாருடா உன் குழந்தையை; கொஞ்சம் கறுப்புத்தான்; என்றாலும் துறு-துறுவென்று நல்ல களையுடன் இருக்கிறது-இல்லையா?" என்றாள்.

துரைக்கு ஏனோ மிகவும் தர்மசங்கடமான நிலையிலிருப்பதாகத் தோன்றியது; ஒரே கணம் குழந்தையின்புறம் தன் பார்வையை அரைகுறையாகச் செலுத்தினான்-அப்புறம் சட்டென்று தலைகுனிந்துகொண்டுவிட்டான்.

சமையல் அறையின் கதவுப்புறமாக நின்றபடி பட்டுவும் அந்த காட்சியைப் பார்த்துக்கொண்டுதானிருந்தாள்.

'என்ன ஒன்றுமே பேசமாட்டேனென்கிறாயே! வெட்கப்படுவானேன்? இன்னும் கொஞ்சம் நன்றாகத்தான் குழந்தையைப் பாரேன்? எப்படியிருக்கிறது?' என்று விடாமல் தூண்டினாள் பாட்டி.

பட்டு ஆவலுடன் கவனித்தாள்.

'பார்த்துவிட்டேனே! — நன்றாகத்தான் இருக்கிறது—உனக்குத் தெரியாததா அம்மா? நான்—எனக்கு என்ன சொல்லத் தெரியும்?' என்று மென்று மென்று விழுங்கினான் துரை.

அவன் முகத்துக்குச் சரியாகவே குழந்தையை ஏந்தியபடி, பாட்டி வர்ணிக்கத் தொடங்கினாள். 'கண்ணும், மூக்கும் உன் மாதிரியே இருக்கிறது: காதும், நெற்றியும் உன் அப்பாவுடையது...'

துரை சிசுவின் பக்கம் திரும்பாமல் தன் கையையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தான்; கைவிரல்களை மடக்கியும், நீட்டியும் எண்ணுவதுபோல் ஏதோ செய்துகொண்டிருந்தான்.

குழந்தை பாட்டியின் கரங்களிலே துள்ளியது; நெளிந்தது; அப்புறம் அழத் துவங்கிவிட்டது.

'உம்; பசி எடுத்துவிட்டதாக்கும்! இந்தாடி பட்டு; குழந்தையை எடு' என்றாள் பாட்டி.

பட்டுவந்து அதை எடுத்துக்கொண்டாள். போகும்போது துரையைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனாள்; அந்தப்பார்வையிலே நிஷ்டூரம் காணப்பட்டது; கவலையும் இருந்தது; கோபமும் வெளிப்பட்டது.

குழந்தையை மார்போடு அணைத்துப் பிடித்துக்கொண்டு அறையின் ஒரு மூலையில் போயமர்ந்து கொண்டாள்.

குழந்தை பால் குடிக்கத் தொடங்கியது; சொல்லத்தரமற்ற அன்புடன் அதன் தலையை வருடிக் கொண்டிருந்தாள் பட்டு.

பசி ஆறியதும் குழந்தையை மடியில் கிடத்திக் கொண்டாள்.

அதன் முகத்தை உற்று நோக்கினாள்,

அதுவும் அவள் முகம்பார்த்துக் கன்னங் குழியச் சிரித்தது.

கள்ளங்கபடமற்ற அந்தச் சிரிப்பு அவள் உள்ளத்திலே கூறிய வாள் கொண்டு அறுப்பதுபோலே பட்டது.

உலகமறியாத அந்தக் குழந்தையின் பார்வை—பட்டுவிடம், 'ஜயித்துவிட்டேன், பார்த்தாயா!' என்று வெற்றி முழக்கம் செய்வதுபோலே தோன்றியது.

ஆம்; அந்தக் குழந்தைதான் வென்றது. தாய் தந்தைக்கும் அதற்குமிடையே தோன்றி நடந்த ஒரு பெரும் போட்டியிலே அதுவே ஜயக்கொடி நாட்டிவிட்டது.

அந்த நினைவு தோன்றியதும் பட்டுவின் கண்களிலே அவளையறியாமல் நீர்மல்கியது; நெஞ்சையும் அடைத்தது.

அந்தச் சிசு அவள் வயிற்றிலே மூன்று அல்லது நான்கு மாதக் கருவாக உருவாகியிருந்தபோது—துரைக்குப் பரிமாறிக் கொண்டேயிருந்தவள் இடையில் குடு குடு வென்று கொல்லைப்புறம் ஓடிப்போய் வாந்தி எடுக்கச் சிரமப்பட்டுவிட்டு வந்தாள்.

'என்ன உடம்பு பட்டு?' என்று அவன் கவலையுடன் கேட்டான்.

'ஒன்றுமில்லை—என்னவோ வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது—அவ்வளவுதான்' என்றாள்.

'திடீரென்று வயிற்றைப் புரட்டுவானேன்?'

'அதுதான் இப்போது ஒன்றுமில்லை என்கிறேனே? இப்போது சரியாகிவிட்டது—வீண் விசனப்படாதீர்கள்' என்று சொல்லி அப்போது அவனை அடக்கிவிட்டாள்.

அதற்குப் பிறகு அவள் அடுத்தடுத்து வாந்தி எடுக்கத் தொடங்கவே துரை சந்தேகப்பட்டான்; 'என்ன சங்கதி? கர்ப்பமா' என்று கேட்டேவிட்டான்.

'அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது!' என்று அவள் முகம் சிவக்கச் சொல்லிவிட்டுத் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

'இந்த இழவை அப்போதே சொல்லித் தொலைத்திருக்கலாமே? இத்தனைநாள் தாமதப்படுத்துவானேன்?' என்று அவன் ஆத்திரப்பட்டான்.

'இப்படித்தான் என்று நான் தெரிந்து கொண்ட பிறகல்லவா உங்களுக்குச் சொல்லமுடியும்.?'

'ஏற்கனவே நமக்கு மூன்று உருப்படிகள் இருக்கின்றன, நான்காவது - இன்னொன்று வேண்டாமென்று என் அபிப்பிராயம்; இதில் உன் கருத்து என்னவோ?' என்று அவளிடம் வினவினான்.

'இப்போது என் உடம்பு இருக்கிற மோசமான நிலையில்-இன்னொரு பிரசவத்துக்குப் பலம் இருக்காதென்றே எனக்கும் படுகிறது' என்று பட்டுவும் அப்போதைக்குத் தனக்குத் தோன்றியதை ஒளிக்காமல் சொல்லிவிட்டாள்.

'அதுதான் சமத்துக்கு அடையாளம்! காலம் இருக்கிற இருப்பில் இப்போது நமக்குப் பிறந்துள்ள மூன்றையும் சமாளிப்பதே கஷ்டம்: தெரியாமலா விவரம் தெரிந்தவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வற்புறுத்துகிறார்கள்!' என்று அவள் அவனுடன் ஒத்துழைக்கத் தயாராயிருப்பதுகண்டு அவன் தன் மனப்பூர்வமான மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டான்.

குடும்பக் கட்டுப்பாடென்பதும்-உயிர்க்கொலை என்பதும் ஒன்றுதானா என்பது பற்றி அவ்விருவரும் அப்போது சிறிதும் யோசித்துக்கொண்டு நிற்கவில்லை. பரபரப்புடன் கர்ப்பச் சிதைவுக்கு வேண்டியதைச் செய்வதில் ஒற்றுமையுடன் முனைந்துவிட்டார்கள்.

குடிக்காத மருந்தில்லை; செய்யாத பிரயோகமில்லை. ஒன்றிலும் அவர்கள் எதிர்பார்த்த பலன் கிட்டாமல் நாட்கள் வளர்ந்துகொண்டேயிருந்தன.

கடைசியில் கைதேர்ந்த ஒரு லேடி டாக்டரிடம் யோசனை கேட்டார்கள்.

'நான்கு மாதங்கள் முடிந்துவிட்டனவே! இந்த யோசனை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள்ளாகத்தான், வேண்டுமென்றால், பலிக்கக்கூடும்; இனி அமைதியுடன் இருந்து பிரசவத்தை எதிர்நோக்க வேண்டியதுதான்; எதுவும் செய்வதற்கில்லை' என்று அந்த லேடிடாக்டர் சொன்னபிறகுதான் அவ்விருவரும் அயர்ந்து உட்கார்ந்தார்கள்.

அவ்வளவு காரியங்களும்-துரையின் அம்மாவுக்குக்கூடத் தெரியாமல்-பரமரகசியமாகவே நடந்து முடிந்தவை!

கடைசியில் பட்டு ஸ்நானம் செய்யாமல் இருக்கிருள் என்பது அவளுக்கும் தெரிய வரவே-அதில் அவள் அடைந்த ஆனந்தமா வது ஆனந்தம்! எத்தனை பேரன் பேத்தி கள் எடுத்தாலும்-பாட்டிமார்களுக்கு மட் டும் அலுப்பே தட்டுவதில்லையே! அது மட் டும் ஏன்?

'இப்படித் துரும்பாய் இளைத்துவிட் டாளே என்று யோசித்தேன்-அப்படியா சங்கதி!' என்று ஆச்சர்யப்பட்டாள்.

பட்டுவும் வெகுவாக இளைத்துத்தான் காணப்பட்டாள். ஏன் இளைக்கமாட்டாள்? கர்ப்பத்தை கரைக்கவென்று அவள் விழுங் கிய மருந்துகளும், மாத்திரைகளும் கொஞ் சமா-நஞ்சமா?

ஆனால் அத்தனை சிரமமும் வியர்த்தம்!

கடைசியில் நான்காவது குழந்தையும் பிறக்கத்தான் செய்தது.

'பெண்ணு!' என்று அங்கலாய்ப்புடன் குறிக்கப்படும் குழந்தை பிறக்கும்போதே வெற்றி முழக்கத்துடன் பிறந்துவிட்டால்?

அளவுகடந்த பரிவுடனும், வாத்ஸல்யத் துடனும் குழந்தையை நோக்கினுள் பட்டு.

கைகளையும், கால்களையும் உதைத்துக் கொண்டு அது விளையாடியது, குப்புறக் கவிழ்ந்து தலைதூக்கிப் பார்த்து, பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தது.

'என்னை நீகூடக் கொல்லப்பார்த்தாயே, அம்மா?' என்று அவளைப் பார்த்துக் கேட் காமல் கேட்பதுபோலவே பட்டுவுக்குத் தோன்றியது.

'என்னை மன்னித்துக்கொள்ளடி என் ராஜாத்தி! உன் அப்பாவுக்கு வேண்டாத குழந்தையாகப் பாவி என் வயிற்றில் வந்து பிறந்துவிட்டாயே, என் கண்ணே!' என்று எண்ணியவளாய், குழந்தையை அப்படியே வாரியெடுத்து அணைத்து உச்சிமோந்தாள்பட்டு.

வேண்டாத குழந்தை!

இப்படி நினைத்ததுமே கண்ணீர் பொங்கி வந்தது அவளுக்கு; அவளும் தானே அவனுடன் சேர்ந் துகொண்டு அதைக் கொ ல்ல முயற்சி எடுத்துக் கொண்டாள்?

அதற்கு அம்மாவாக இருக்க முழுத் தகுதி உடையவளா அவள்? அந் தப் பாவத்திற்குப் பிரா யச்சித்தம் உண்டா?

நிஜமாகவே அந்தக் குழந்தைக்கு அவளுக் கிருந்த எண்ணம் தெரிந் துவிட்டால் பெரிதான பின்னர் அது அவளைப் பற்றி என்ன நினைத்துக் கொள்ளும்? அவளிடம் அன்பாக நடந்துகொள் ளுமா? அவளை அம்மா வாக மதிக்குமா? அல் லது தன் சத்துருவாக நினைக்குமா?'




கர்ப்பத்தைக் கரைக்கவென்று அவள் விழுங்கிய மருந்துகளும் மாத்திரைகளும் கொஞ்சமா நஞ்சமா?

பட்டு பெருமூச்செறிந்தாள்.

துரை அந்தக் குழந்தையை ஏறெடுத்தும் பார்க்கவில்லை! வேண்டாத குழந்தையாக அது விடாப்பிடியாக வந்து பிறந்துவிட்டதே! என்ற வெறுப்பு இன்னுமா அவனுக்கு மாறவில்லை?

'என்ன இருந்தாலும் — அவர் ஆண் பிள்ளை; அவருக்கு என்ன? இந்த ஆண்களின் மனசே இரும்புதானே? துளியாவது இரக்கத்துக்கும், அன்புக்கும் அவர்களிடம் இடமேது? சுயநலப்புலிகள்!' என்று எண்ணமிட்டாள் பட்டு.

மற்றக் குழந்தைகளுடன் துரை கொஞ்சவில்லையா? மற்ற மூவரிடமும் அளவளாவவில்லையா? தூக்கிவைத்துக்கொண்டு ஆனந்தப்படவில்லையா? இதனிடம் மட்டும் ஏன் இவ்வளவு துவேஷம்?

முதற்குழந்தை பிறந்தவுடன் எத்தனை ஆவலுடன் ஓடிவந்து பார்த்து மகிழ்ந்தார்! அதிலும் ஆண் குழந்தையல்லவா! கொள்ளிக்குப் பிள்ளையும், ஆசைக்குப் பெண்ணும் என்று சொல்லுவார்கள். கொள்ளிக்கும்-அன்புக்கும் அவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளாகவே காத்திருக்கிறார்கள்; போதாக்குறைக்கு மூன்றாவதாகப் பெண் குழந்தையும் இருக்கிறது; போதாதா? இப்போது மறுபடியும் பிறந்திருப்பதைப்பற்றி அவர் ஏன் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்? படிப்படியாக அவர் அன்பு குறைந்துகொண்டே வந்து கடைசியில் வெறுப்பாகவே மாறிவிட்ட விசித்திரத்தை என்னவென்றுதான் சொல்வதோ?

ஆணாகப் பிறப்பவர்கள் பிரமாதமாக என்ன சாதித்துவிடுகிறார்கள்? பெண்ணாகப் பிறந்தவர்கள் என்ன பாவம் செய்துவிடுகிறார்கள்?

யாருக்குமே புரியாத ஒரு விஷயம் இது; பட்டுவுக்குப் புரியாமலே போனதில் வியப்பென்ன?

ஆகவே துரை விஷமாகக் கருதும் கடைசிக் குழந்தைக்குத் தானே தாயாகவும், தந்தையாகவும். கூடப் பிறந்தவளாகவும், உற்ற தோழியாகவும் இருந்து, தன் அன்பையெல்லாம் அதன்மீது வர்ஷித்து, குறைவின்றி அதைப் போற்றி, போஷித்து உயிர்க்கு உயிராக அதை வளர்க்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டாள் பட்டு.

அவள் செய்த மகா பாபத்துக்குத் தகுந்த பிராயச்சித்தமாகவும் அதுவே ஆகலாமல்லவா?

எவ்விதமோ—பழி அனைத்தையும் துரையின் தலைமீதே போட்டுவிட்டுத் தான் தப்பித்துக் கொள்ளப் பார்த்தாள்.

என்னதான் வேண்டாமென்றாலும்—பிறந்துவிட்ட பின்னர்—ஒருமுறையாவது ஆசையுடன் அவர் இந்தக் குழந்தையைப் பார்த்தால் ஆகாதா?' என்றுமட்டும் அவள் உள்ளம் அடித்துக்கொண்டது.

அவள் மட்டுமா அதைப்பெற்றுவிட்டாள்?

என்னமோ தோன்றியது; 'விசுக்' கென்று குழந்தையை அள்ளி இடுப்பில் எடுத்துக் கொண்டு அவன் இருந்த இடத்துக்கு வந்தாள்.



'இதோ: கொஞ்சம் இதைப்பாருங்களேன் குழந்தை உங்களையேகண் கொட்டாமல் பார்த்துச் சிரிக்கிறதே, பாவம்!'

'கொஞ்சநேரம் இந்தக் குழந்தையைப் பார்த்துக்கொள்ளுகிறீர்களா? அடுப்படியில் கொஞ்சம் காரியமாயிருக்கிறேன்' என்று கெஞ்சும் குரலில் அவனைக் கேட்டுக்கொண்டாள்.

துரை ஏதோ எழுதிக்கொண்டிருந்தான்.

'நானும்தான் வேலையாக இருக்கிறேன்' என்று எழுதிக்கொண்டே அவன் பதில் சொன்னான்.

'நானே பார்த்துக்கொள்வேன்; ஆனால்—அடுப்புப் புகையால் குழந்தை அவதிப்படுகிறது; தவிர காக்கையும், எறும்பும்வேறு பிடுங்கித்தின்கின்றன; அதனால்தான் உங்களைத் தொல்லைப்படுத்தவேண்டி வந்துவிட்டது!' என்று நிஷ்டூரமாகப் பேசினாள் பட்டு.

எழுதுவதை நிறுத்தாமலேயே—துரை—'சரி; இப்படியே கீழே விட்டுவிட்டுப்போ; அழுதால் நான் பார்த்துக் கொள்கிறேன்' என்றான்.

குழந்தையை இடுப்பில் வைத்தபடியே அங்கே சிறிதுநேரம் நின்றாள் பட்டு.

'இதோ: பார் உன் அப்பாவை! உன்னைவிட அவருக்கு இப்போது எழுத்துவேலை முக்யமாகி விட்டதாம்! நீ என்னடி என்றால் உங்கப்பாவைப் பார்த்துப்பார்த்து, சிரித்துச் சிரித்து மகிழ்ந்து போகிறாய்! உங்கப்பாவோ உன்னைத் திரும்பிக் கூடப் பார்க்கமாட்டேன் என்கிறார்!' என்று சொல்லி, துரையின் கவனத்தை இழுக்க முயன்றாள்.

குழந்தையும் நிஜமாகவே—குனிந்து கொண்டிருந்த அவன் முகத்தை நோக்கி அடிக்கடி சிரித்தது.

'இதோ: கொஞ்சம் இதைப்பாருங்களேன்? குழந்தை உங்களையே கண் இமைக்காமல் பார்த்துச் சிரிக்கிறதே, பாவம்!'

கடைசியில் துரை சற்றே தலைநிமிர்ந்து குழந்தையை நோக்கினான்.

அது மறுபடியும் சின்னஞ்சிறு வாயைத் திறந்து சிரித்தது.

'உணர்ச்சியற்று அவன் பார்த்த பார்வை ஒரு தந்தையின் பார்வையாகுமா?' என்று பெற்றவளின் உள்ளம் நினைத்தது.

அதுவும் ஒரே கணம்தான்;

துரை மறுபடியும் தலைகுனிந்து எழுதத் துவங்கிவிட்டான்.

பட்டுவும் விடாப்பிடியாக அவன் காலடியிலேயே குழந்தையைக் கிடத்திவிட்டுச் சரேலென்று அப்பால் போய்விட்டாள்.

சிறிதுநேரம் சென்றது.

குழந்தையின் அழுகுரலைப் பட்டு செவியுற்றாள்.

நெஞ்சு படபடக்கத் துரை அதைச் சமாதானப்படுத்துகிறானென்று சிறிது நின்று கவனித்தாள்-ஐந்து நிமிஷம்-பத்து நிமிஷங்கள்-குழந்தையின் அழுகை அதிகமாயிற்றே தவிர மறுகுரலே இல்லை.

வந்து பார்த்தாள்:

அப்போது துரை எழுதிக்கொண்டிருக்கவில்லை; ஆனால் மேஜைமீது இரு கைகளையும் மடக்கி வைத்துக்கொண்டு தலையை அதன்மீது குப்புறக் கவிழ்த்துக்கொண்டு சலனமற்றிருந்தான்.

அவன் காலடியில் குழந்தை குப்புறக் கவிழ்ந்தபடி கதறிக்கொண்டு கிடந்தது.

பட்டுவுக்குப் பொறுக்க முடியாத கோபமும், கூடவே நெஞ்சுவெடிக்கும் அழுகையும் பீறிக்கொண்டு வந்துவிட்டது.

கண்களில் நீர் மல்க-உதடுகள் துடிக்க-அவள் பாய்ந்தோடி வந்து-"என் பாவம் தான்-வேண்டாத இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்தேன்; ஆனாலும்-அதற்காக-இந்தப் பாவத்தை இப்படி விஷமாக வெறுத்து ஒதுக்கமுடியுமா? ஏறெடுத்துப் பார்க்காமலும் இருக்கவேண்டுமா? சத்தியமாகச் சொல்கிறேன். இனிமேல் இந்தக் குழந்தையை உங்கள் கண்களில் படும்படி விடவேமாட்டேன். நிம்மதியாக இருங்கள்-'என்று பொருமிக்கொண்டே அதை 'வெடுக்'கென்று வாரிக்கொண்டு சரேலென்று போய்விட்டாள்.

அத்தனைக்கும் துரை வாயே திறக்கவில்லை. அவனிடம் சிறுசலனம்கூடத் தென்படவில்லை.

* * * *

பகவானின் சங்கற்பத்தை யாரால்தான் கண்டுகொள்ளமுடியும்? நன்றாக இருந்த பட்டுவின் குழந்தைக்கு மாந்தம் வரவேண்டுமா?

அப்படித்தான் வந்ததே? கைதேர்ந்த வைத்தியத்துக்குக் குணமாகக் கூடாதா? மாந்தம் குணமாகவில்லை.

குழந்தையின் உயிரைக் குடிக்கவே அது வந்தது; அவ்விதமே கொண்டுபோய்விட்டது.

அது பிறந்த பிறகு இறப்பதைவிட—பிறக்காமலே இருந்திருக்கக் கூடாதா? அல்லது புருஷனும்—மனைவியும் முனைந்து கருவைக் கரைக்க முயன்றபோதே அழிந்து தொலைந்து போயிருக்கக் கூடாதா?

அது இருந்தவரையில் அதன்பக்கம் எட்டிக் கூடப் பார்க்காமல் எட்டி இருந்துவந்த துரை—அது இறந்ததும் அருகேவந்து குலுங்கக் குலுங்க அழுததுதான் புரியாத விந்தையாக இருந்தது.

அவன் அம்மாதிரி கதறியதைக் கண்டு பட்டு அத்தனை துக்கத்திலும் தன்னை மறந்து அவனிடம் சீறி விழுந்தாள்.

'குழந்தை இருந்த வரையில் அதைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை; செத்தொழிந்த பிறகு பெரிதாக அழுவதற்கு வந்துவிட்டீர்களே? வெட்கமாக இல்லையா உங்களுக்கு?'

விம்மல்களுக்கிடையே துரை சொன்னான்:

'வாஸ்தவம்தான் பட்டு; ஆனால் அப்போதெல்லாம் நான் மனம் புழுங்கிச் செத்துக் கொண்டிருந்தது உனக்குத் தெரியாது. நான் மனம் ஒப்பிக் கொல்லநினைத்த என் குழந்தை என் முன்னே சிரித்து விளையாடியபோதெல்லாம் என் மனச்சாட்சி என்னைக் கொன்றுகொண்டேயிருந்தது பட்டு; தகப்பன் என்று சொல்லிக்கொண்டு அந்தக் குழந்தையின் களங்கமற்ற முகத்துக்கெதிரே என் மூஞ்சியை நீட்ட எனக்கு வெட்கமாயிருந்தது பட்டு. அதைப்பார்க்கவும் நான் கூசினேன்; அதைத் தொட்டுக் கொஞ்சினால்—என் கையும், வாயும் அழுகிச்சொட்டுமென்று நடுங்கினேன். கருவிலே அதைப்பிணமாக்க முயற்சித்தேன்—பட்டு; கடவுள் என் கையில் என் குழந்தையின் பிணத்தையே விட்டுவிட்டு உயிரை எடுத்துக்கொண்டுவிட்டதை நினைத்து இப்போது அழுகிறேன்—பட்டு; என்னை நீ உன் மனப்பூர்வமாக மன்னிப்பாயா பட்டு? நான் மகாபாபி; எனக்கு விமோசனமே கிடையாது பட்டு' என்று துக்கம் தாங்காமல் விம்மி வெடித்து, சிறு குழந்தையைப்போலவே 'ஹோ' வென்று கதறிவிட்டான் கதறி.

கூனிக்குறுகி நின்ற துரையின் தேகத்தில் தோன்றிய நடுக்கத்தையும், பரிதாபமான அவன் முகத்தையும், குரலில் ஒலித்த ஆறாத் துயரத்தையும் கண்டு ஒரு கணம் பிரமித்துவிட்டாள் பட்டு.

தன் துக்கத்தை மறந்தாள்; நெஞ்சில் அழுத்திய பாரத்தை மறந்தாள்; சூழ்நிலையை மறந்தாள்; சுற்றுப்புறத்தை மறந்தாள்; ஆவி பிரிந்து கிடந்த குழந்தையின் பிணத்தையும் மறந்தாள்; அவள் தன்னையே மறந்துவிட்டாள்.

ஓரே தாவலில் அவனிடம் ஓடிச்சென்று-அவனை நடுங்கும் கரங்களால் பற்றியபடி, 'என் ராஜா! இத்தனை நாட்களும் உங்கள் மனப்போக்கைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல்-பாவி, என்னென்னவோ தவறாக உங்களைப்பற்றி எண்ணிவிட்டேனே; அறியாமல் உங்கள் பொன்னான மனசையும் புண்ணாக்கி விட்டேனே? நீங்கள் தான் என்னை மனப்பூர்வமாக மன்னிக்கவேண்டும்' என்று மனமார வேண்டிக் கொண்டாள்.


SANKAR BRAND

# சங்கர் பிராண்ட்

போர்ட்லண்ட் ஸிமெண்ட்

திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது

தயாரிப்பவர்கள்:

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
11/12, ஸெகெண்ட் லைன் பீச், மதராஸ்.

தொழிற்சாலை:
சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா.

வினியோகஸ்தர்கள்:

காசி & சேது

| | |
|---|---|
| கும்பகோணம் | வலங்கிமான் |
| ஆடுதுறை | கொரநாடு |
| தஞ்சாவூர் | நீடூர் |
| திருவாடி | செம்பனார்கோயில் |
| அய்யம்பேட்டை | பொறையார் |
| குத்தாலம் | பேரளம் |
| மாயூரம் | நன்னிலம் |
| கொடவாசல் | நாகூர் |
| வல்லம் | முத்துப்பேட்டை |
| நாகபட்டினம் | பட்டுக்கோட்டை |
| திருவாரூர் | மதுக்கூர் |
| கொரடாச்சேரி | லக்ஷ்மான்குடி |




அவள் நடந்து கொண்டிருந்தாள்—இல்லை!—அவள் நடந்துகொண்டேயிருந்தாள்.

'அவன் இனி சாகவேண்டியதுதான். நம் நாட்டுக்கு இவ்வளவு இன்னல் விளைவித்தவனுக்குச் சாவுதவிர வேறென்ன நம் துரை தருவார்?'

'சாகட்டும்; அப்பொழுதுதான் மற்றவர்களுக்கும் புத்திவரும்'

'இவளென்ன சாவித்திரிமாதிரி அவனைச் சாவிலிருந்து மீட்டுவிடுவாளா? அவள் ஓடுகிற ஓட்டம் அப்படியல்லவா இருக்கிறது!'

'அதெல்லாம் நடக்காது. இன்றைக்கு நம் துரையினுடைய சிறையில்தான் இருக்கிறான். நாளை கட்டாயம் தூக்குத் தண்டனைதான்; கழுகுகளுக்கு நல்லவேட்டை நாளைக்கு அவனால் இருக்கிறது.'

கிராமத்தார்களின் பேச்சு அவளுக்குப் புரியவில்லையோ அல்லது புரிந்தும் கேளாததுபோல் போய்க்கொண்டிருக்கிறாளோவென்று மற்றவர்களுக்குப் புரியவில்லை. உள்ளம் உந்தித்தள்ள, பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி ஓட்டமும் நடையுமாக அவள் நடந்துகொண்டேயிருந்தாள்.

*   *   *   *

வர்த்தகம்தேடி பாரதத்தை நாடி வந்த ஆங்கிலக் கம்பெனியாரின் பண்டகசாலைகளில் தூத்துக்குடியும் ஒன்றாக இருந்தது. அந்தக் கம்பெனியார் வர்த்தகத்தை மட்டும் இந்த நாட்டில் வலுப்படுத்தவில்லை; அத்துடன் நாடு பிடிக்கும் எண்ணம்கூட அவர்களின் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அந்தத்திட்டத்தை நிறைவேற்ற பக்கட் (Baggatt) என்பவனை இங்கிலாந்திலிருந்து தளபதியாக இந்த நாட்டிற்கு வரவழைத்திருந்தார்கள் ஆங்கிலக் கம்பெனியார்.

அவனுக்கு வயது சுமார் முப்பது இருக்கும். வாலிபனாயிருந்த அவன் தூத்துக்குடியில் வந்து தங்கி, சில நாளைக்கெல்லாம் தமிழ் பேசக் கற்றுக்கொண்டான். செந்தமிழ் பேசத் தெரியாவிட்டாலும் தன் மனதிலுள்ளதைப் பிறருக்குத் தெரிவிக்கும் அளவிற்கு அவன் கொச்சைத் தமிழைப்பேசக் கற்றுக்கொண்டான்—எல்லாம் வியாபாரத்தை நன்கு நடத்தவேண்டுமேயென்ற அவசியத்திற்காகத்தான்.

திட்டத்தை நிறைவேற்றும் வண்ணம் அவன் சிறுசிறு நிலப்பகுதியாக, பிழைக்கவந்த நாட்டைச் சொந்த நாட்டிற்கு உரிமையாக்கிக் கொண்டேயிருந்தான். அந்த எண்ணத்திலேதான் அவன் பாஞ்சாலங்குறிச்சியின் மீதும் படையெடுத்தான். முன்பே பாஞ்சாலக்குறிச்சி மன்னன் கட்டபொம்மன் இறந்துவிட்டதால் பொம்மனின் தம்பி ஊமைத்துரையை அடக்கவேண்டிய பொறுப்பு பக்கட் தளபதிக்குக் கொடுக்கப்பட்டிருந்தது ஆங்கிலக் கம்பெனியாரால். இதைக்கேட்டு ஊமைத்துரை சீறி எழுந்தார்.

'நாட்டிற்குழைப்பதே கடமையாகக் கொண்டுள்ள உத்தமப் போர் வீரர்களே! நம்மைச் சுற்றியிருக்கும் சூழ்நிலை நான் விவரித்து உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. ஓண்டவந்தவர்களுக்கு இவ்வளவு துடுக்குத்தனமா? பாஞ்சை நிலத்தைப் பணிய வைக்க முயல்கிறார்களாம் அந்த ஆங்கிலேயர்கள்! அவர்கள் கனவு கனவாகவே முடியட்டும். நம் உடம்பிலிருந்து தெறித்து விழும் கடைசிச் சொட்டு இரத்தம்கூட அவர்களுக்கு அடிமையாகக்கூடாது. வீரம் நம் முன்னோர் நமக்கு விட்டுச்சென்ற உரிமைச்சொத்து. அதை அடகு வைக்கும் அளவிற்கு நாம் கோழைகளுமல்ல—முட்டாள்களுமல்ல. இதை நாம் உணர்ந்தால் மட்டும் போதாது; இதை ஆங்கிலேயர்களும் அறியவேண்டும் தூத்துக்குடிக்குப் புதி

தாக வத்திருக்கிருனுமே அந்தப் பக்கட் என்பவனைப் பாஞ்சை நிலத்திற்கு அடிமையாக்கி இங்கே கொண்டு வாருங்கள்; செல்லுங்கள்; வெற்றி கொண்டு திரும்புங்கள்!''

தலைவன் ஊமைத்துரை முழக்கிவிட்ட இந்த வீரகர்ஜனை ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராட, பாஞ்சை நிலப் போர் வீரர்களை அணிவகுக்கும்படி தூண்டிவிட்டது. ஒரு போர்ப்படை தூத்துக்குடியை நோக்கிச் சென்றது.

தூத்துக்குடியை அடைந்த வீரர் கூட்டம் பக்கட் தளபதியின் வீட்டை முற்றுகையிட்டது. எதிரிகளை அடிமையாக்க வேண்டுமென்று திட்டம் போட்டவன் அந்த எதிரிகளின் கைகளிலேயே சிக்கிக் கொண்டான். ஆமாம், அவன் கைதியானுன்! உடைமைப் பொருள்களெல்லாம் சூறையாடப்பட்டன. தூத்துக்குடி ஊமைத்துரைக்குச் சொந்தமாகி விட்டது.

ஊமைத்துரையின் மன்றத்திலே தன் தலை தொங்க அவன் கைதியாக நின்றுகொண்டிருந்தான். அரசனின் தீர்ப்பைத் தெரிந்துகொள்ள மக்கள் அங்கே கூடியிருந்தனர். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

'பேச்சிமுத்து இங்கே வா!'

ஊமைத்துரையின் கட்டளை அங்கே நிலவியிருந்த அமைதியைக் கலைத்தது. ஊமைத்துரைக்குமுன் வந்து நின்றுன் பேச்சிமுத்து. அவனது இதயத்திலே பூத்த மகிழ்ச்சி அவன் முகத்திலும் எதிரொலித்தது.

வாள் வீச்சில் பாஞ்சாலங் குறிச்சியிலேயே முதல்வனுன பேச்சிமுத்தை ஊமைத்துரை கூப்பிட்டதும் மன்றத்திலேயே ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

'பார்த்தாயா, நான் சொன்னபடிதான் நடக்கப்போகிறது. பேச்சிமுத்துவின் வாளுக்கு அவன் பலியாகப் போகிருன்.........'

'அதெல்லாம் கிடையாது. எதிரிகள் தம் அண்ணனைத் தூக்கிலிட்ட மாதிரி நம் துரை இவனையும் புளியமரத்திலேதான் தூக்குப்போடுவார். நீ வேண்டுமானுலும் பாரேன்!'

'வஞ்சத்திற்கு வஞ்சம்! இரத்தத்திற்கு இரத்தம்! இவனுக்குத் தூக்குத்தண்டனைதான் சரியானது!'

மக்களிடத்தில் இந்தப் பரபரப்பைக் கண்டதும் ஊமைத்துரைக்கு ஒன்றுமே சிந்திக்கத் தோன்றவில்லை. அந்தப் பரபரப்பிலே ஆண்-பெண்-முதியோன்-இளைஞன் என்ற வித்யாசமே இல்லாதிருந்தது. ஊமைத்துரை ஏதோ ஒரு முடிவிற்கு வந்தவராகப் பேச்சிமுத்தைப் பார்த்தார். அந்தப் பார்வையிலே அமைதி குடிகொண்டிருந்தது.

'சாமி, இப்போதே சொல்லுங்கள், இவனைக் கண்டம் துண்டமாகச் சீவி விடுகிறேன். கழுகுகளுக்கு நல்ல விருந்து கிடைக்கும்படி நான் வழி செய்கிறேன். அவ்வளவு விரிப்பானேன்? பாஞ்சாலங்குறிச்சியின் எதிரிக்கு எவ்விதச் சாவு நேரும் என்பதை இவனைக் கொண்டே விளக்கிவிடுகிறேன்!'

பேச்சிமுத்துவின் பேச்சையும், மக்களின் முணு முணுப்பையும் கேட்டு, தனக்குத் தெரிந்திருந்த கொச்சைத் தமிழ் மொழியில் அரை குறையாகப் புரிந்துகொண்ட பக்கட் தளபதி நடு நடுங்கினுன். அவன் உள்ளம் விநாடிக்கு விநாடி ஊமைத்துரையின் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

'பேச்சிமுத்து, நீ அசகாய சூரனப்பா! கைதியாகி நிற்கும் எதிரியைக் கொல்ல நீ துடிக்கும் துடிப்பைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது.'

ஊமைத்துரையின் இந்தப் பேச்சின் முழு அர்த்தம் ஆங்கிலத் தளபதிக்குத் தெரியாததால் அவனுடைய உடலும் உள்ளமும் நடுங்கிக் கொண்டே தான் இருந்தன.



பாஞ்சைக்கோட்டையின் தெற்கு வாயிலில் மேரி விஞேலா

"ஆங்கிலத் தளபதியே. நீங்கள் கொஞ்சமும் பயப்பட வேண்டாம். ஆங்கிலக் கம்பெனியாரை நாங்கள் அடக்கி, நாட்டில் அமைதியை நிலை நாட்டியவுடன் உங்களை ஒரு தொந்தரவும் செய்யாமல் உங்கள் சொந்த நாட்டிற்கு நீங்கள் போய்ச் சேர நான் எல்லா உதவியும் செய்கிறேன். அது வரை, நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும்" என்று ஊமைத்துரை பக்கட் தளபதியைச் சமாதானப் படுத்திவிட்டு, "பேச்சி முத்து, இவரை வைக்க வேண்டிய இடத்தில் வை!" என்று பேச்சிமுத்துவிற்குக் கட்டளையிட்டார். 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண—நன்னயம் செய்துவிடல்' என்ற பொன் மொழிதான் அவருடைய வாழ்க்கைப்பாடம் போலும்!

"என்ன?.........! நம் எதிரிக்கா விடுதலை? மன்னன் கட்ட பொம்மன் கொலை செய்யப்பட்டதற்கு நாங்கள் இந்தத் தளபதியின் இரத்தத்தைப் பார்த்தால்தான் சிறிதளவாவது எங்கள் உள்ளம் ஆறும்......" என்று மக்கள் ஒவ்வொருவரின் நெஞ்சும் வீறிட்டெழுந்தாலும் மன்னன் ஊமைத்துரையின் கட்டளைக்குப் பணிய வேண்டியது அவர்களுடைய கடமையாக இருந்ததால் அவர்கள் வாய்விட்டு ஒன்றும் சொல்லவில்லை. ஊமைத்துரை மீது அவர்களுக்கு என்றுமே அளவு கடந்த நம்பிக்கை. அந்த நம்பிக்கைதான் அவர்களைத் துரைக்குக் கீழ்ப்படிய வைத்தது.



இவர்களுடைய இந்த இன்பத்தைக் கெடுப்பானேன்? விடுதலை செய்து

பக்கட் தளபதி பாஞ்சாலங்குறிச்சிச் சிறைச்சாலையில் பாதுகாவலில் வைக்கப்பட்டான். இந்த விஷயம் ஆங்கிலக் கம்பெனியாருக்குத் தெரிய நேர்ந்தது. தளபதி இன்னும் இரண்டு நாட்களில் கொல்லப்படுவது நிச்சயமென்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

இந்த வதந்தி தளபதியின் மனைவி மேரி வினேலா (Marry Vinola) விற்கும் எட்டிற்று. கணவனைமீட்டு வர அவள் திட்டமிட்டாள். தூத்துக்குடியிலிருந்து பாஞ்சாலங்குறிச்சி செல்ல அவள் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டாள். துணைக்கு அருகிலிருந்த ஆங்கிலேயர்களை அழைத்தாள். ஆனால் தங்கள் தளபதிக்கு நேர்ந்த கதியை நினைத்து அவர்கள் அவளுடன் பாஞ்சாலங்குறிச்சி செல்ல மறுத்துவிட்டார்கள்.

ஊமைத்துரையைப் பற்றிய கனவு காணக் கூட அவர்கள் அஞ்சினர்கள். அவள் தனிமையில் விடப்பட்டாள்.

கடைசியாக அவள் தன்னந்தனியாகப் புறப்பட்டு, காட்டுப் பாதையில் கால் நடையாக நடந்து கொண்டிருந்தாள் — ஆமாம்! — நடந்து கொண்டேயிருந்தாள்.

* * * *

அவள் சென்று கொண்டிருந்த பாதையிலுள்ள கிராமத்தார்களெல்லாம் அவளை ஆச்சர்யத்தோடு பார்த்தார்கள். 'துரையின் தீர்ப்பென்றால் அதை எமனும் அசைக்க முடியாதே! அப்படியிருக்க இவளென்ன சாவித்திரியா எமனிடம் அடைக்கலம் புகுந்துவிட்ட தன் கணவனை மீட்டுவர?'' என்ற அர்த்தம் அவர்களுடைய ஆச்சரியத்தில் தொனித்தது. வேறு சிலர் அவளைக் கேலி செய்தனர். — திட்டினர் — பலவும் செய்தனர். அவள் அவற்றையெல்லாம் லட்சியம் செய்யாமல் பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி நடந்தாள்.

பாஞ்சைக் கோட்டையின் தெற்கு வாசலை அவள் அடைந்தபொழுது அது சாத்தப்பட்டிருந்தது. அங்கிருந்த வேலைக்காரர்கள் அவளை வந்த வழி போகச் சொல்லினர்; அவள் போகவில்லை. திரும்பிப் போகும்படி கடுமையாகப் பயமுறுத்தினர்; அவள் திரும்பவில்லை. அந்தக் கோட்டை வாசலிலேயே தலைவிரி கோலமாக அழுதுகொண்டு நின்றாள். கடைசியில் வேலைக்காரன் ஒருவன் மனமிரங்கி ஊமைத்துரையிடம் சென்று, தங்களைப் பார்க்க வேண்டுமென்று ஒரு ஆங்கிலப் பெண்



அந்தப் பாபம் நமக்கு வேண்டாம் விடுங்கள்.

மணி தெற்கு வாசலில் அழுதுகொண்டிருக்கிறாள்; அழைத்து வரவா?' என்று கேட்டான். 'உடனே அழைத்து வா!' என்று பதில் வந்ததும் அவன் மேரி வினேலாவைத் துரையிடம் அழைத்துச் சென்றான்.

தம்மைத் தேடிவந்த பெண் பக்கட் தளபதியின் மனைவி என்பதை ஊமைத்துரை குறிப்பால் உணர்ந்துகொண்டதும் அவளை ஒரு ஆசனத்தில் அமரச்செய்து, அவளுடைய கணவனைச் சிறைச்சாலையிலிருந்து மன்றத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்தார். பக்கட் வந்ததும் வினேலா தாவிப் பாய்ந்து அவனை இறுக அணைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். ஊமைத்துரையின் மனதை அந்தக் காட்சி உருக்கிவிட்டது. அவருடைய மனைவி செளந்தர வடிவுக்கும் அந்தப் பெண்ணின் நிலையைப் பார்க்கும்போது பரிதாபமாக இருந்தது.

'இவர்களுடைய இந்த இன்பத்தைக் கெடுப்பானேன்? அந்தப் பாபம் நமக்கு வேண்டாம்; விடுதலை செய்து விடுங்கள்!'' என்று செளந்தரவடிவு தன் கணவனிடம் ரகசியமாகச் சொன்னதும் ஊமைத்துரைக்கும் அதுவே சரியென்று தோன்றிற்று.

'இதோ உன் கணவர்! இவர் உன் உண்மை அன்பினால்தான் காப்பாற்றப்படுகிறார். விடுதலை அளித்துவிட்டேன். அழைத்துப் போகலாம்' என்று துரையையும் துரைச்சியையும் ஒன்றுசேர்த்து வைத்தார் ஊமைத்துரை. பட்டாடை ஒன்று அவளுக்குப் பரிசாக அளித்துப் பாலும் கனிகளும் கொடுத்து அவர்களுக்கு மிகவும் மரியாதை செய்தார். பறிமுதல் செய்யப்பட்ட பொருளையெல்லாம் அவர்களிடமே திருப்பிக் கொடுத்தார் ஊமைத்துரை. பக்கட் தளபதிக்கும் மேரி வினேலாவிற்கும் அவருடைய அளவுகடந்த கருணை ஆச்சரியத்தைக் கொடுத்தது. தங்கள் புது வாழ்வை மலரச் செய்துவிட்ட மகிழ்ச்சியில் அவர்களிருவரும் ஊமைத்துரையை நன்றியறிதலோடு பார்த்தனர்.

'இவ்வளவு நல்லவரிடம் ஏன் நம்மவர் பகைத்துத் துன்பம் அடைகிறார்களோ தெரியவில்லை!' என்ற அர்த்தத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருந்தது அவர்களுடைய அந்தப் பார்வை.



# பட்டணம் பார்!

ஆர். பி. அய்யங்கார்

“எச்சில் கையாலே காக்காய் ஓட்ட மனசு வராத பயல்களிடம் ஏனோ லக்ஷம் லக்ஷமா பணம் புரள்றது. அக்கம் பக்கத்திலே குடியிருப்பவர்களோ அவனைப்பற்றி பிரமாதமாகத் தான் பேசறா. ஆனால் படியேறி உள்ளே பார்த்தால் அல்லவா அஷ்டதரித்திரம் அலங்கோல தரித்திரமா கூத்தாடறது தெரியறது. ஏதோ அத்திபூத்தாப்லே ஆள் வந்திருக்கானே, ஒரு கப் காபி கொடுப்போம்னு தோணவேண்டாம்? கருமி, கருமி' என்று விஷயத்தை விளங்கச் சொல்லாமல் உறுமிக் கொண்டிருந்தார் சாக்ஷாத் என் மாமா தம் நண்பரிடம்.

'யாருன்னு குறிப்பிடாமே குழந்தைகள் தேய்க்கிற சடபுடா மாதிரி வெடிச்சுத் தள்ளறேளே' என்றார் அந்த நண்பர்.

'பால்யத்லெ நம்மகூட காலேஜில் படிச்சானே தாத்தம், அவனைத்தான் சொல்றேன். இப்போ என்னடான்னா 'தாத்தாச்சாரி அண்ட் ஸன்ஸ்' என்ற பெயரில் பிளாஸ்டிக் பிஸினஸ் பண்றானாம். சர்க்கார் வேலையை உதறிட்டு நாலு வருஷத்துக்கு முன்னாலே இதில் இறங்கினானாம். சக்கை போடு போடறதுன்னு அவனே சொல்றான். மலை, மலையா காசைக் குவிக்கட்டுமே, நமக்கென்ன? ஏதோ பழகினதோஷம்பார்த்துட்டு வரலாமேன்னு அவன் அட்ரஸை விசாரிச்சு, போனேன். ஒரு வாய் காபிக்கு வழியில்லை. பணம் இருந்துட்டா எல்லாம் ஆயிடுத்தா? லவலேசம் குணம் வேண்டாம்? சட், இவன் ஒரு மனுஷனா?'

'நீங்க போன போது சந்தர்ப்பம் ஏசை கேடாக இருந்திருக்கும். உள்ளே அவன் ஆம்படையாள் காபி போட பிரயத்தனப்பட்டிருப்பாள். பொடி தட்டியிருக்கும். ஒருவேளை பால் இருந்திருக்காது, யார் கண்டார்கள்?'

'போறுமே, அவன் பவிஷுக்கு நீ முட்டுக் கொடுக்கலையேன்னுதான் அழுதான்'

'சரி, எப்படியோ இருந்துட்டுப் போறான். நீங்கள் ஏன் இவ்வளவு அலட்டிக்கணும்?'

'காபிக்காக அவனை நாடி நான் ஒண்ணும் போகல்லே. இருந்தாலும் உபசாரத்துக்காவது ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? குடியா முழுகிப் போயிடும்?'

'அவனுக்கு தெரிந்த லக்ஷணம் அவ்வளவு தான். பேச்சை விடுங்கோ. இப்போ எங்கே புறப்பட்டாப்லே?'

'ஹோட்டல்லே காபி சாப்பிடலாம்னு கிளம்பினேன். நீயும் வாயேன்'

'பரவாயில்லை. எனக்கு அவசரஜோலி இருக்கு வரட்டுமா?'

'ஏது நீயும் தாத்தம்மாதிரி பிஸினஸ் கிஸினஸ் நடத்தறயா? பிகு பண்ணிக்காதே, சும்மா வா.'

'வலுக்கட்டாயமா கூப்பிடச்சே வராமே என்ன, இதோ தயார்' என்று நண்பர் அசைந்து கொடுத்தார்.

'ஏண்டா, நீயும்தான் வாயேன்' என்றழைத்தார் மாமா என் பக்கம் திரும்பி.

பின் மூவரும் கூப்பிடு தூரத்திலிருந்த 'மனோகரா ஹோட்டலு'க்குள் நுழைந்து ஒதுக்குப்புறமாகப் போட்டிருந்த டேபிள் முன் உட்கார்ந்தோம்.

'என்ன ஸார், என்ன வேணும்?' என்றான் ஸெர்வர்.

'சூடாக இருக்கிறதைச் சொல்லு': மாமாவின் இவ்வதிகாரக் குரல் ஹோட்டலையே ஒரு குலுக்குக் குலுக்கியது.

'காசி கேசரி, கல்கத்தா ஹல்வா, கல்கண்டு கேக், காராபூந்தி.'

'க, காவிலே சொன்னது போதும். அ, ஆ விலே யிருந்தே ஆரம்பியேன்.'

'அசல் தோசை, ஆறின ஜிலேபி, ஆல் அவுட் மிக்ஸ்ச்சர்.'

'என்னடா இது, நான் விளையாட்டா கேட்டால் வம்புக்காரனாக இருக்கே?'

'நிஜமாகவே இதெல்லாம் இருக்கு, ஸார், உங்களுக்கு எது கொண்டு வரட்டும்?'

'ஒண்ணும் வேண்டாம். மட்டாப் பால்விட்டு மூணு கப் ஸ்டராங்கா காபி போட்டுண்டு வா?'

'இதோ' என்று சொல்லிவிட்டு ஸெர்வர் சிட்டாகப் பறந்தான்.

பிறகு, 'நாலு வருஷத்துக்கு முன்னாலே என் தம்பி பிள்ளைக்கு கல்யாணம் நடந்தது. அப்போ பாரு.........' என்று மாமா மெள்ளப் பேச்சுக்கு, 'இ' கொடுத்தார்.

'காபிக்கு போனவனை காணுமே. செடியிலிருந்து கொட்டை எடுத்துண்டிருக்கானோ!' என்றார் நண்பர், அலுப்புத்தட்ட.

'அதுக்குத்தானே அவன் திரும்பற மட்டும் தம்பி பிள்ளை ராமுவின் கல்யாண கதையைச் சொல்ல வந்தேன். இதே பட்டணத்தில் தான் நடந்தது. கல்யாணத்தன்று காலம்பர நாதஸ்வரக்காரனின் அபஸ்வரத்தையெல்லாம் அமுக்க வேண்டி மேளக்காரன் கை நரம்பு புடைக்க தவுல் வாசித்துக் கொண்டிருந்தான், முகூர்த்தத்துக்கு கால் மணி இருக்கும். ராமுவின் ஒன்று விட்ட அத்தைப் பாட்டி கூடத்திலேயிருந்து போட்ட கூச்சல் கொட்டு மேளத்தையெல்லாம் கிழித்துக் கொண்டு என் காதை துளைத்தது.

'பிள்ளையாத்துக்காரா எத்தனை பேர் வந்திருக்கோம் என்பது தெரியாதா? அப்படி உத்தேசமா மதிப்பு போட முடியல்லேனா வரிசையா நிக்க வச்சு எண்ணறது தானே? நன்னா அனுப்பினா ஒரு குடம் காப்பியை. யார் மூக்கிலே ஈஷறதாம்? தேனொழுக பேசிட்டா போறுமா? சம்பந்தி உபசாரம்னா முக்யம். இன்னும் இரண்டு குடம் காப்பி இந்த க்ஷணம் வரலேன்னா வேண்டாம் இந்த வரன். காப்பி கொடுக்க வக்கில்லாதவா கல்யாணத்தைப் பண்ணுவானேன்?' என்றாள் அப்பாட்டி மூச்சுத்திணற.

'இந்த ரகளையை கேட்டதும் பெண்ணைப் பெற்றவர் ஓடோடி வந்து, காபி வேளையோ தாண்டிடுத்து. சாப்பாடு போட ஏற்பாடாயிண்டிருக்கு. இனி மேல் என்ன பண்ணுவது? கொஞ்சம் முன்னாலேயே தகவல் சொல்லியிருந்தால் ஜாஸ்தியாக அனுப்பியிருப்பேனே' என்றார்.

'எது எப்படி போனாலும் முதல்லே காபி இப்போ வந்தாகணும். தலைக்கு முழுசா ஒரு டம்ளர் கூட இல்லாமே என்ன கல்யாணம் வேண்டியிருக்கு?' என்று அத்தைப்பாட்டி விடாப்பிடியாக நீட்டி முழக்கினாள்.

'சம்பந்திக்கு முகூர்த்தம் தட்டிப் போயிடப் போறதேன்னு கிலி. கையைப் பிசைந்தார். இனிமேல் போய் ஏற்பாடு பண்ணுவதற்குள் காரியம் மலையேறிவிடும். சட்டென்று எனக்கு ஒரு யோஜனை தோன்றியது. அவரைத் தனியே கூப்பிட்டு ரகஸ்யமாகச் சொன்னேன். கண் மூடி கண் திறப்பதற்குள் இரண்டு குடம் காப்பி வாசலை வந்தடைந்தது. கெட்டி மேளம் கொட்ட பெண்ணின் கழுத்தில் தாலியும் ஏறியது' என்று மாமா கூறி முடித்தார்.

'ஆமாம், காபி எங்கேயிருந்து வந்தது?' என்று நண்பர் கேள்வி போட்டார்.

'ஹோட்டல்லேயிருந்து' என்று மாமா பதில் சொல்லிவிட்டு ஸெர்வர் வரக்கூடிய திசையில் தம் கண்களைத் திருப்பினார்.

உடனே அரை செகண்டில் ஆளும் சூடான காபியைக் கொதிக்கக் கொதிக்க மூன்று கண்ணாடி டம்ளர்களில் கொண்டு வந்து மேஜைமீது வைத்தான். "என்ன இத்தனை நேரம்?" என்று சற்று அதட்டலோடு கேட்டார் மாமா. அதற்குள் எங்கள் மேஜையை யொட்டிப் போடப்பட்டிருந்த வேறு ஒரு நாற்காலியில் வந்து உட்கார்ந்த ஓர் ஆஸாமி மஸால் தோசைக்கு ஆர்டர் பண்ணவே 'இதோ வந்து சொல்றேன், ஸார்' என்று கூறிய வண்ணம் ஸெர்வர் எங்கள் பார்வையிலிருந்து நழுவினான்.

காபி டம்ளர்களைக் காலி செய்தோம். பத்து நிமிஷம் ஆகியும் ஆள் திரும்புகிற வழியா இல்லை. 'பயல் ரொம்ப நன்னா காபி போட்டிருக்கானே! என்றார் மாமா. நண்பருடைய முகமும் மலர்ந்திருந்தது. எனக்கு மட்டும் ஸெர்வரின் மர்ம மறைவு மனதைக் குடைந்து கொண்டிருந்தது. 'சரி, நேரமாகிறது, அவன் திரும்ப மாட்டான் போலிருக்கு, கிளம்பலாமா?' என்று மாமா முணகிக்கொண்டு எழுந்திருக்கவே நண்பரும், நானும் அவரைப் பின் தொடர்ந்தோம்.

'மூணுபேர் ஏழரை அணு' என்ற கூச்சலோ, பிலபேலா இல்லாமல் காபிக்குக் காசைக்கொடுத்து விட்டு எங்களோடு ஹோட்டலிலிருந்து மாமா வெளி வந்தார்.

பட்டணத்திலே சின்னஞ்சிறு ஹோட்டல்கள் நிறையச் சிதறிக்கிடக்கின்றன. அவற்றில்ஒன்றே இது. நாங்கள் போனபோது பிற்பகல் இரண்டே முக்கால் மணி. ஹோட்டல் புரோப் ரைட்டர் ஈ ஓட்டிக்கொண்டிருந்தார். ஸெர்வர் களோ ஜோலியில்லாமல் ஸீட்டுகளில் உட் கார்ந்திருந்தனர். முதலில் அவர்களை டிபன் சாப்பிட வந்தவர்களோவெனக் கருதினேன். ஆனால் நாங்கள் உள்ளே நுழைந்ததும் அவர் கள் எழுந்திருக்கவே விஷயம் விளங்கியது. குறு கிய ஒரு ஹால். அதில் எட்டே எட்டு மேஜை, நாற்காலிகள் மட்டுமே போடப்பட்டிருந்தன. இரண்டு மேஜைக்கு ஒருவர் வீதம் நான்கு ஸெர் வர்கள்—பதினேழு, பதினெட்டு வயதுக்குட் பட்ட இளைஞர்கள் — அமர்த்தப்பட்டிருந்தனர், இரண்டு க்ளீனர்கள் வேறு. ரேடியோ ஒன்றும் மூலையில் அலறிக் கொண்டிருந்தது. சுவர் ஓர மாக நடுவே மூன்று அறைகள் கொண்ட திறந்த அலமாரியில் இரண்டு 'ஸ்வீட், நான்கு காரம்' பகட்டாக வைக்கப்பட்டிருந்தன. ஸ்வீட்டுகள் இவ்வார ஸ்பெஷலோ, இம்மாத ஸ்பெஷலோ யாருக்குத்தெரியும்! போட்டவர் களைக் கேட்டால் நம்மை விழுங்கி விடுபவர்கள் போல முறைத்துப் பார்ப்பார்கள். அத்தோடு நில்லாமல் அடிக்காத குறையாக நெடியேறும் ஓரிரு வார்த்தைகளையும் உதிர்த்து விடக்கூடும். பணம் கைவிட்டுப் பிரிகிறதேயென்று பாராமல், குணமுள்ள பதார்த்தமாவென்று கேளாமல் வாங்கிச் சாப்பிடுவதுதான் ஊருக்கு அழகு. பின் உள்ளூற உபத்திரவப்படும்போது தேள் கொட்டின திருடனைப்போல நான் முழித்தாலும் பட்டணத்து ஜனங்கள் விழித்துக்கொள்ள மாட்டார்கள்!

'பக்ஷணங்கள் அசல் நெய்யில் செய்யப்பட்ட வை அல்ல' என்றெழுதப்பட்ட அட்டையொன்று ஆணியில் தொங்கவிடப்பட்டிருந்தது எனக்கு ஆச்சரியமூட்டியது. ஆனால் நாக்கிலிருந்த ஈரப் பசை இடம் தெரியாமல் உலர்ந்தது. இந்த மாதிரி 'போர்டு' போட்டால் வியாபாரம் ஆகு மாவென்றுகூட அஞ்சினேன். பட்டணத்தில் எதையும் வாங்கிச் சாப்பிட வேண்டியபேர் காத்தி ருக்கிறார்கள். எல்லோரும் வெள்ளி ஸ்பூனும், கையுமாகவா பிறந்தோம்? முரட்டுச் சாப்பாடாகச் சாப்பிட்டாலும் நச்சுத்தீனி தின்னும் பழக்கம் நகர மக்களிடையே வேரூன்றிவிட்டது. நாலு காசு சம்பாதிப்பதற்குள் வேளாவேளைக்கு டிபன், காபி ஹோட்டலில் சாப்பிடுவதென்பது வழக்க மாகி விடுகிறது. ஏழைத் தொழிலாளியிடம் அற்ப சொற்பச் சில்லறை தட்டுக்கெட்டு மிஞ்சினால் அதையும் விட்டு வைப்பதில்லை அவனுடைய வாய் நெப்பாசை. அலங்காரமாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் ஜிலேபிகள் அவன் திருஷ்டியில் பட்டதும் நா துடிதுடிக்கிறது. துடிப்பு தணிந் ததும் அவன் பிளாஸ்டிக் பர்ஸிலிருந்து பணமும் துள்ளிக்குதித்தோடி ஹோட்டல் முதலாளியைத் தழுவிக்கொண்டுவிடுகிறது!

சின்ன காபி கிளப்காரர்களில் நேர்மை, மனச் சாட்சியுடன் நடந்து கொள்பவர்களும் இல்லா மலில்லை. சிலர் இப்படியுமப்படியுமாக லாபத் தையே குறியாகக் கொண்டு 'பட்டண மோசடி' புரிகிறார்கள். அவர்களுக்குப் பொது ஜனங்களைப் பற்றி அக்கறையில்லை. கண்டதைப் பக்குவமாகக் கலந்து, காரம் ஸ்வீட்டுகளைப் பண்ணி விற்று முத லாக்கி விடுகிறார்கள். விற்பனை என்றாவது சுரத் தில்லாமல் போய், பக்ஷணங்கள் மிஞ்சிவிட்டால் அவையே மறுநாள் புது சொரூபங்கள் பெறுகின் றன. சொரூபத்தைத் தூக்கிக் காட்ட வர்ண ஜாலம் வேறு. போதாக்குறைக்கு விதவிதமான டம்பப் பெயர்கள். சரக்கு சொள்ளை; முறுக் கேற்றுவதோ கொள்ளை.

ஊர் விட்டு ஊர் வந்த மாணவர்கள், உத்தி யோகஸ்தர்கள், கல்யாணமாகாதவர்கள், நாதி யற்ற கிழவர்கள் காபி கிளப்புகளை நாடுவதில் குற்றமொன்றுமில்லை. ஆனால் குடித்தனத்தை யும் நடத்திக்கொண்டு ஹோட்டல்களுக்குப்போய் கச்சடா, பிச்சடா பதார்த்தங்களை வாங்கிச் சாப்பிட்டு, வயிறும் நிரம்பாமல் வீடு திரும்பு கிறார்களே அவர்களை நினைத்தால்தான் பரிதாப மாக இருக்கிறது. சிலருக்குச் சகதர்மிணிகள் சுசி ருசியாக டிபன்களைச் செய்து பொட்டலம் கட்டிக் கொடுத்திருப்பார்கள். ஆபீஸ் இடைவேளையின் போது அதை அவிழ்த்து, தாராளமாகத் தங்கள் சகாக்களுக்கு ஆறின டிபனை வினியோகித்து விட்டு எல்லோருடனும் அச்சிலர் ஹோட்ட லுக்குக் காபிகுடிக்கக் கிளம்பிவிடுவார்கள். அங்கு நுழைந்தபின் காபி மட்டும் அருந்துபவர்கள் மிகவும் அபூர்வம். ஏதாவது சூடாக ஒரு 'ஐட்டத்தை' முடித்துக்கொண்ட பின்னரே காபி டம்ளரைத் தொடுவார்கள். வீட்டு டிபன் செல வோடு ஹோட்டல் பில் ஏறுவதால் இரட்டிப் புச் செலவாகிறதென்பதை எண்ணி அவர்களில் அநேகர் மனவேதனைப் படுவதுண்டு. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பட்டண வாசியென்ற பெயரைக் காப்பாற்றிக் கொள்வதற் காக மூடி மறைப்பார்கள். தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளும் இம்மூட ஜம்பம் நீடிக்கும் வரை ஹோட்டல்களின் எண்ணிக்கை மேன் மேலும் பெருகுவது திண்ணம்.

மாதம் ஆயிரக்கணக்கில் பணம் புரட்டும் ஹோட்டல்களும் உண்டு. மாலை வேளையில் அவற்றின் வாசல்கதவுகள் அடிக்கடி மூடித் திறக் கும். உள்ளே ஜன நெரிசல் கண்டுவிட்டால் வெளியிலுள்ளோர் எவருக்கும் கதவடைப்பே. கால், அரை மணி காத்திருந்தால்தான் 'ஸ்வர்க்க வாசல்' திறக்கப்படும். திறந்தாலும் நாற்காலி களில் போய் உடனே உட்கார முடியாது. சாப்

பிட்டுக் கொண்டிருப்பவர்கள் எப்போது எழுந் திருப்பார்களோவென ஏங்கித் தவம்கிடக்க வேண்டும். அலுக்காமல், சளைக்காமல் டேபிளுக்கு நான்கைந்து பேர்கள் வீதம் சுற்றி வளைத்துக் கொண்டு நின்றால் உட்கார்ந்து சாப்பிடுபவர்களுக்கு ஊகாமுள் குத்துவதுபோல் உறுத்தும். ஆகவே அவசர அவசரமாகக் காபி அயிட்டம்வரை முடித்துவிட்டு அவர்கள் எழுந்தால் ஸீட்டுகளுக்குப் பின் நிற்பவர்கள் 'மகராஜன், நன்னாயிருக்கணும்' என்று வாழ்த்தி, பெருமூச்சு விடக்கூடும். சிற்சில சமயம் உள்ளே நிற்கக்கூட இடமில்லாமல் ஜனக்கும்பல் இங்குமங்குமாக நெகிழ்ந்த வண்ணமிருக்கும். அப்போதெல்லாம் ஸெர்வர்கள் துடி நடையில் பம்பரமாகச் சுற்றி வேலை செய்வார்கள். பத்துப் பன்னிரண்டு தட்டுகளை டிபன்கள் சகிதம் ஒரே கையில் லாவகமாகத் தோள்பட்டைவரை அடுத்தடுத்து அடுக்கிக் கொண்டுவந்து, டேபிள்களில் ஞாபகமாக அவரவர் கேட்டதை நொடியவோ நழுவவோ விடாமல் ஒவ்வொன்றாக எடுத்துவைக்கும் அழகே அழகு. அனைவருடனும் அன்புடன் பேசிப் பழகி, அநுயாசமாக ஓடியாடி, புத்தி சாதுர்யத்துடன் உழைக்கும் இத்தகைய ஸெர்வர்களுக்கு எவ்வளவு சம்பளம் உயர்த்திக் கொடுத்தாலும் தகும். வெள்ளை வேஷ்டி, வர்ண புஷ்கோட், கைக்கடிகாரம் முதலியவற்றோடு அவர்களுள் சிலர் காட்சியளிப்பதைக் கல்யாண ஊர்வல மாப்பிள்ளைகள் கண்டால் வெட்கித் தலைகுனிய வேண்டியதுதான்! கையில் தட்டேந்தி, காபியாற்றும் இவ் வேலைக்கு, படிப்புப் பட்டம் பெற்றவர்கள் புகுந்திருப்பது துர்ப்பாக்கியமே. எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்ததோடு நில்லாமல் ஷார்ட் ஹாண்டு, டைப்ரைட்டிங்கும் கற்றுக்கொண்டு, 'நாலுபேர் டு எயிட்' எனப் பில் எழுதுபவரிடம் மணிப்பிரவாள நடையில் பொழிந்து தள்ளுவதை நினைத்தால் 'நெஞ்சு பொறுக்குதில்லையே.' உழைப்புக்குத் தக்க ஊதியம் கிட்டாவிட்டாலும் படிப்புக்குத் தக்க பதவி வேண்டும். இவ்வுண்மையை உயர்பீட அதிகார வர்க்கம் உணர்ந்து உருப்படியான நடவடிக்கைகளை எடுக்காதவரை பணம் படைத்த ஹோட்டல் 'அண்ணாக்களி'ன் பராமரிப்பில் படித்த ஸெர்வர் 'அம்பிகள்' மன நிம்மதி, நிறைவின்றி, கஷ்ட சுகங்களைக் கலந்தே அனுபவிக்கத்தான் வேண்டுமோ?

மொபைல் போஸ்டாபீஸ்களைப்போல மொபைல் ஹோட்டல்களும் பட்டணத்தைத் தினம் கோலி வந்து சிதறி நிற்கும் உதிரி பேர்வழிகளின் பணத்தையும் உள்ளுக்கு இழுத்துவிடுகின்றன. நகரத்தாரின் வாழ்க்கை வசதிகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகின்றன. போய் எங்கு முட்டிக் கொள்ளுமோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அதாவது இந்த நடமாடித்திரியும் சாதன வசதிகள் இன்னும் பல துறைகளில் ஏற்பட்டுவிட்டால் நகர வாசிகள் வீடுகளை விட்டு எழும்பாமல் முடங்கிக் கிடப்பார்கள். வாசலிலேயே மொபைல் ஆஸ்பத்திரி, மொபைல் பலசரக்குக் கடை, மொபைல் லாண்ட்ரி, மொபைல் ஸலூன் முதலியன வந்து நின்றால் வேடிக்கையாகத்தானிருக்கும். விஞ்ஞான. யந்திர சக்திகள் தாவி முன்னேற, முன்னேற மனிதன் தயங்கித் தயங்கிப் பதுங்குவதாகவே எனக்குப் படுகிறது. அவனுடைய சுய உழைப்பு, ஓட்டமெல்லாம் ஒடுங்கிக்கொண்டே வருகிறதென்பதற்கு இம் 'மொபைல்' நூதன மொன்றே போதிய சான்று. கலி முற்றுவதாக கிராமக் கிழவர்கள் கூறுகிறார்கள். அதன் அர்த்தம் இப்போது தான் புலப்படுகிறது. மனுஷனின் வெளிப்புழக்கம் குறையக் குறைய அவனது ரத்த ஓட்டம் சுருங்குவது இயற்கையே. ரத்த ஓட்டம் குறைந்தால் விறைப்புள்ளவனாகிறான். (அதனால் தானோ என்னவோ நாகரிக நகரத்தார் நாட்டுப்புறத்தார்களைவிட விடுவிடுவென விறைப்பாகப் பேசுகிறார்கள்!) விறைப்புக்கு மறுபதம் முற்றல். ஆகவே மனுஷன் முற்றினால் கலியுகம் இளசாக இருப்பது எங்ஙனம்?

மாமா, நண்பருடன் காபி குடித்த அதே ஹோட்டலுக்குத் திரும்ப மறுநாள் காலை போனேன். அதே ஸெர்வர் என் கண்ணிலும் தென்பட்டான். உடனே கூப்பிட்டு, "நேற்று மாமா கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் நீ கம்பி நீட்டியதற்குக் காரணமென்ன?" என்று கொக்கி போட்டு மடக்கினேன்.

அவன் நைஸாகச் சிரித்துக்கொண்டே, 'காலம்பர வந்த பால் குடங்கள் எல்லாம் ஒரு நாளுமில்லாத திருநாளாக தீர்ந்து போயிடுத்து, ஸார். புதுப்பால் வரவோ ஒருமணி நேரத்துக்கு மேலாகுமென புரொப்பரைட்டர் சொன்னார். அத்தோடு பால் பவுடர் டப்பாவுக்காக காசு கொடுத்தார். வெளியே போய் வாங்கி வர நேரமாயிடுத்து. உங்கள் பேச்சு சுவாரஸ்யத்திலே இதையெல்லாம் நீங்கள் கவனிக்கல்லே. பவுடர் பாலைக்கொண்டு காபி கலந்தேனென கூற எனக்கு கூச்சமாயிருந்தது. அதான் திரும்பி பாராமல் நகர்ந்து விட்டேன்' என்றான்.

உண்மையைக் கேட்டதும் கண்கள் சுழன்றன. ஹோட்டல் தட்டாமாலை சுற்றியது. உடனே அசல் காபியை மடக்கெனக் குடித்தேன். சுற்றுப்புறச் சூழ் நிலை தெளிவாகியது. ஆனால் 'பவுடர் டப்பா' மட்டும் மனக் கண்முன் இன்னும் உருண்டுகொண்டேயிருக்கிறது.

# சினிமா காட்சி

பெ. தூரன்

சுந்தரத்தை இப்பொழுதெல்லாம் பார்ப்பதற்கே பரிதாபமாய் இருக்கிறது. பாழடைந்து கவனிப்பாரற்று இடிந்து விழுந்துகொண்டிருக்கும் கோபுரத்தைப் போல அவன் காட்சியளித்தான். ஒரு காலத்திலே நாகரிகமாய் உடுத்துக்கொள்வதில் அவன் பெயர் வாங்கியிருந்தான். உடையணிவதில் அவனுக்குள்ள தேர்ந்த சுவையைக்கண்டு அவனுடைய நண்பர்களெல்லாம் ஆச்சரியப் படுவார்கள். ஆனால் இன்று அவன் உடையைப் பற்றிச் சிந்திப்பதாகவே தெரியவில்லை. அவனுடைய அழகிய கிராப்பு சீர்குலைந்து கிடக்கிறது. பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னாலே அவனுடைய காதல் மனைவி திடீரென்று நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தபோது இருண்டுபோன அவன் முகம் இன்றும் ஒளிகாணவேயில்லை. மேலும் மேலும் அதில் இருளின் ரேகைகள் வந்து குவிவது போலவே எனக்குத் தோன்றுகிறது. அவன் சிரித்துப் பேசி எங்களையெல்லாம் இன்பக் கடலில் ஆழ்த்தியதெல்லாம் கனவுபோல மங்கி மறைந்து விட்டது. இப்பொழுது அவன் கல கலவென்று பேசுவதே கிடையாது. எங்களோடு அதிகமாகக் கலந்து கொள்ளுவதுமில்லை. நாங்களாக வலியச் சென்று இழுத்தால் எங்களுடன் வருவான். ஆனால் அவனுடைய சிந்தனையெல்லாம் எங்கேயோ இருக்கும். முன்பெல்லாம் நாங்கள் எந்த விஷயத்தைப் பற்றிப்பேசினாலும் அதில் அவன் பிரதான பங்கெடுத்துக் கொண்டு ஹாஸ்யமாகவும், குதூகலமாகவும் சாதுரியமாகவும் பேசுவான்; மற்றவர்களைத் திணற அடிப்பான்; இப்பொழுது அதற்கு முற்றிலும் விரோதமாக மௌனம் சாதிக்கிறான். அவனை வைத்துக் கொண்டு நாங்கள் உரையாடுவது இடிந்து போன ஒரு கோட்டையின் முன்னாலே இருந்துகொண்டு உரையாடுவது போலத்தான் எனக்குத் தோன்றுகிறது. சினிமாவிற்குச் செல்லுவதிலும், நல்ல இன்னிசையைக் கேட்பதிலும் அவனுக்கு எங்களைவிட அதிக விருப்பம் உண்டு. ஆனால் இப்பொழுது அவன் எங்கும் செல்வதாகக் காணோம். நண்பர்கள் வற்புறுத்தினாலும் அவன் கூட வரப் பிடிவாதமாக மறுத்து விடுகிறான்.

ஆனால் சென்ற சில நாட்களாக அவன் அடிக்கடி சினிமாவுக்குச் செல்கிறான் என்று கேள்விப்பட்டு நான் ஆச்சரியம் அடைந்தேன். நேற்று மாலை சுமார் மூன்று மணிக்கு எதிர்பாராத விதமாக அவன் என்னைத் தேடிக்கொண்டு வந்தான். இரவு $9\frac{1}{2}$-மணி சினிமாவுக்குத் தன்னுடன் வரவேண்டுமென்று கட்டாயப் படுத்தினான். முதல் காட்சிக்குப் போகலாமென்று நான் கூறியும் அவன் அதற்கு உடன்படவில்லை. தனக்கு ஏதோ வேறு வேலை இருக்கிறதென்றும இரவு $9\frac{1}{2}$-மணிக்கு, சினிமாக் கொட்டகையில் டிக்கெட் வாங்கிக்கொண்டு எனக்காகக் காத்திருக்கப் போவதாகவும் கூறினான். நான் அவன் விருப்பப்படியே சினிமாக் கொட்டகையில் அவனைச் சந்திக்க உடன்பட்டேன்.

அவனைக் காக்கவைக்கக் கூடாதென்று நான் சற்று முன்பாகவே அவன் குறிப்பிட்ட சினிமாக் கொட்டகைக்குச் சென்றேன். முதற் காட்சி அப்பொழுதுதான் முடிந்து மக்கள் வெளியே வந்துகொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்திலே சுந்தரமும் யாரோ ஒருவருடன் பேசிக்கொண்டு வெளியே வந்தான். முதற்காட்சியைப் பார்த்துவிட்டு அவன் அப்படி வருவது எனக்கு மலைப்பை உண்டாக்கியது. முதலில் அவன் என்னைக் கவனிக்கவில்லை. பிறகு கூட்டம் சிறிது குறையவே என்னைக் கண்டதும் அப்பொழுதுதான் அங்கு வந்தவன்போல அவசரம் அவசரமாக அருகே

வந்தான். "வந்துவிட்டயா? இதோ டிக்கட் வாங்கிவருகிறேன்" என்று கூறிவிட்டு வேகமாக ஓடினான்.

காட்சி தொடங்கும் வரையில் அவன் என்னிடம் வார்த்தையாடவில்லை. எனக்கு அது சங்கடமாக இருந்தது. இருந்தாலும் நான் அவனுடைய மௌனத்தைக் கலைக்க விரும்பாமல் கொட்டகைக்குள் மெதுவாக நுழையும் மக்களைக் கவனித்துக்கொண்டே அமர்ந்திருந்தேன்.

அந்தப்படம் நேற்றோடு முடிவடைந்தது. நாங்கள் பார்த்ததுதான் கடைசிக் காட்சி. ஆனாலும் கூட்டம் அதிகமாக இருக்கவில்லை. காரணம் அந்தப்படம் அவ்வளவு சுவாரசியமாக இல்லை. எப்படியோ இழுத்துப் பிடித்துக்கொண்டு விளம்பர பலத்தினால் ஒரு வாரம் ஓடியிருக்கிறது.

இடைவேளைக்கு முன்னதாகவே எனக்கு அலுப்புத் தட்டிவிட்டது. இருந்தாலும் சுந்தரத்தைத் திருப்திப் படுத்துவதற்காக மற்றப் பகுதியையும் சகித்துக்கொண்டிருந்தேன். சுந்தரம் படத்தைப் பெரிதும் ரசிக்கிறானென்று நான் நினைத்து அவனைத் திரும்பிப் பார்த்தேன். அவன் படத்தைப் பார்ப்பதாகவே தோன்றவில்லை. கண்களை மூடிக் கொண்டு கன்னத்தில் கைவைத்தவாறு அசைவற்றிருந்தான். தலை கீழே குனிந்தபடியிருந்தது. எனக்கும் அவனுக்கும் ஒரே வயதுதான். இருவரும் ஒரே தெருவில் வசிப்பவர்கள், பால்யம் முதல் நாங்கள் தோழர்கள். ஆனால், இப்போது பார்ப்பதற்கு என்னைவிட இரட்டிப்பு வயதானவன்போல் தோன்றினான்.

கண்ணை மூடிக்கொண்டு அவன் உட்கார்ந்திருந்தது எனக்கு வியப்பாக இருந்தது. எதற்காக அவன் என்னை இவ்வாறு சினிமாப் பார்க்க அழைத்தான் என்பதும் அந்தக் காட்சி முடியும்வரை ஒரு புதிராகவே இருந்தது.

சினிமாவேதனை ஒருவாறு முடிவடைந்ததும் நாங்கள் வீட்டைநோக்கிப் புறப்பட்டோம். இரவு அதிக நேரம் ஆகிவிட்டபடியால் பஸ், டிராம் ஒன்றும் கிடையாது. நாங்கள் வசித்த தெரு சமீபத்தில்தான் இருந்ததாகையால் நடந்தே போகலாமெனக் கூறினேன்; அவன் யாதொரு பதிலும் கூறாமல் வீட்டைநோக்கி அடியெடுத்து வைத்தான்.



கொஞ்ச நேரம் வரையில் இவ்வாறு சுந்தரம் பேசாமல் நடந்தான். நானும் அவனைத் தொந்தரவு செய்யக்கூடாதென்று வார்த்தை கொடுக்காமல் பின் தொடர்ந்தேன். பகல்நேரத்திலே இரைச்சலும், பரபரப்பும் மிகுந்துள்ள அந்தச் சென்னை நகர வீதியிலே இப்பொழுது எவ்வித நடமாட்டத்தையும் காண முடியவில்லை. உயிரற்றது போன்ற அந்த வீதியின் நிசப்தம் என் உள்ளத்திலே ஒருவித விநோதமான உணர்ச்சியை உண்டுபண்ணிற்று.

"படக்காட்சி பிடித்ததா?" என்று சுந்தரம் திடீரென்று கேட்டான்.

"உனக்குப்பிடித்திருந்தால் அதுவே எனக்குத் திருப்தி—உனக்காகத்தானே நான் வந்தேன்?" என்றேன் நான்.

"படம் சுத்த ஆபாசந்தான் ஆனால் அதிலே ஏதாவது ஒரு அம்சங்கூட உன் மனதைக் கவரவில்லையா?" என்று கேட்டுவிட்டு அவன் என்னைக் கூர்ந்து நோக்கினான். அவன் கண்களுக்குள்ளே நூறுயோசனை தூரத்திற்குப் பின்னால் கனன்றுகொண்டிருப்பது போல ஒரு ஒளி தோன்றிற்று.

"ஒரு பாட்டு என் உள்ளத்தை எப்படியோ தொட்டது" என்றேன்.



இங்கே கேட்ட பாட்டின் அதே மெட்டில் உன் மனைவி ஒரு பாட்டெழுதி ஒருநாள் பாடினாளே என்று கூறி முடிப்பதற்குள் சுந்தரம் என் கன்னத்திலே பளாரென்று அறை கொடுத்தான்

"எந்தப் பாட்டு?" என்று கடுமையான குரலில் அவன் கேட்டான்.

"உனக்கு ஞாபகமில்லையா? இங்கே கேட்ட பாட்டின் அதே மெட்டிலே உன் மனைவி ஒரு பாட்டெழுதி ஒரு நாள் பாடினாளே" — என்று கூறி முடிப்பதற்குள் சுந்தரம் என் கன்னத்திலே பளாரென்று ஒரு அறை கொடுத்தான். நான் திகைத்துப்போனேன்.

"சுந்தரம் இதென்ன இது?" தடுமாறிக் கொண்டு மெதுவாகக் கெட்டேன்.

"என் மனைவியின் பாட்டை நினைத்துக்கொண்டிருக்க உனக்கென்ன உரிமையிருக்கிறது?' என்று அவன் குரூர வார்த்தைசொன்னான். அவன் முகத்திலே மிருக உணர்ச்சி தாண்டவமாடியது. அவன் உடம்பெல்லாம் பதறிக் கொண்டிருந்தது.

என் கண்களிலே எதற்காகவோ நீர் ததும்பலாயிற்று, அதைச் சுந்தரம் பார்த்துவிட்டான் போலிருக்கிறது. சட்டென்று அவன் உள்ளம் மாறியது.

"சங்கரா, என்னை மன்னித்துக்கொள். இந்த ஒருவாரமாகத் தினமும் இரண்டு காட்சிக்கும் சென்று இந்த இசையை நான் அனுபவித்து வருகிறேன். ஒவ்வொரு காட்சிக்கும் எனது நண்பர்களில் ஒருவரை அழைத்துச் சென்றேன், ஒருவராவது என்

மனைவி பாடிய அந்தப் பாட்டை நினைத்திருக்கவில்லை. அவர்கள் முற்றிலும் மறந்துவிட்டார்கள். அதிலே எனக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது. அவளுடைய இன்பகானத்தை மறவாமல் நினைத்துக் கொண்டிருக்க எனக்கு மட்டும் உரிமை உண்டு என்று நினைத்து, அந்த நினைப்பிலே பூரித்துப் போயிருந்தேன். நீ மட்டும் நான் எதிர்பார்த்ததற்கு மாறாக அந்த இசையை நினைவில் வைத்திருக்கிறாய். அதை அறிந்ததும் எனக்கு என்றுமில்லாத பொறாமை ஏற்பட்டுவிட்டது. மன்னிக்க வேண்டும்'' என்று அவன் கம்மிய குரலில் கூறினான்.

என்னால் பதில் ஒன்றும் பேசமுடியவில்லை. ஏதாவது கூறவேண்டுமென்று வார்த்தைக்காகத் திண்டாடினேன். அவனுடைய உள்ளத்திலே அழுந்திக் கிடந்த அந்தச் சோகத்தை எப்படியாவது தணிக்கவேண்டுமென்ற ஆவல் மேலெழுந்தது.

"உன் மனைவி எழுதிய பாட்டுக்களைக் கேட்கும்படி எங்களை அந்தக் காலத்தில் உற்சாகமாக அழைத்துச் செல்வாயே?'' என்று ஏதோ கேட்டுவைத்தேன்.

"ஆமாம், அதெல்லாம் அந்தக் காலம். இப்பொழுது அவளுடைய பாட்டெல்லாம் எனக்கேதான் சொந்தம். அதிலே யாரும் பிரவேசிக்கக்கூடாது'' என்று அவன் பேசிக் கொண்டே போனான்.

என் வீட்டுவாசலை நெருங்கினோம். "போய்வரட்டுமா, சுந்தரம்'' என்றேன் நான். அது அவன் காதில் விழவில்லை. அவன் திரும்பிப் பாராமல் நடந்துகொண்டிருந்தான். அவன் வாயிலிருந்து வெளி வந்துகொண்டிருந்த வார்த்தைகள் என் காதை அடைவதற்குள் அவன் வாழ்வைப் போலவே உருக்குலைந்து பொருளிழந்து வெற்றொலியாய் மாறிக் கொண்டிருந்தன.




குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்



K. T. டோங்கரே அண்கோ., பம்பாய்-4.

# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிட்.

சேர்மென்

**ஸர். A ராமஸ்வாமி முதலியார்** K. C. S. I., D. C. L. (Oxon)

(சென்னை நகரத்திலுள்ள ஆபீஸ்கள்)

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு,
பெரியமேட், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் & தியாகராயநகர்,

பிராஞ்சுகள்

| | |
|---|---|
| அம்பாஸமுத்திரம் | ராமநாதபுரம் |
| ஆம்பூர் (N. A. Dt.) | சீர்காழி |
| சிதம்பரம் | தஞ்சாவூர் |
| கடலூர் | தென்காசி |
| ஈரோடு | திருநெல்வேலி ஜங்ஷன் |
| காஞ்சீபுரம் | திருநெல்வேலி டவுன் |
| காரைக்குடி | திருச்சிராப்பள்ளி |
| கும்பகோணம் | வேலூர் |
| மதுரை | விஜயபுரம் |
| மாயூரம் | விழுப்புரம் & |
| பாலக்காடு | விருதுநகர் |
| புதுக்கோட்டை | |

K. S. வைத்யநாதன்
அஸிஸ்டெண்ட் செக்ரடரி





# மாடிஸன் வாழ்க்கை

சி வி. ராமகிருஷ்ணன்

விடியற்காலையில் எழுந்தேன். முதல் நாள் ஊரெல்லாம் சுற்றியாகிவிட்டது. இன்று 'இன்ஸ்டிட்யூட்டு'க்கு (ஆராய்ச்சிக்கழகம்) போக வேண்டும். என் ஜெர்மானிய நண்பரும் அதே இடத்தில் வேலையாக இருந்ததால், மற்றவர்களை அவரே அறிமுகப்படுத்திவிடுவார் என்ற எண்ணத்துடன் எழுந்தேன். குளித்துவிட்டு இன்ஸ்டிட்யூட்டுக்குப் புறப்பட்டேன். குளிர் காலம் ஆரம்பித்துவிட்டது. உடல் நடுங்க ஆரம்பித்தது. இத்தனைக்கும் கல்யாணத்திற்குத் தைத்த கம்பளி ஸூட்டைப் போட்டுக் கொண்டிருந்தேன்! (மாமனார் சொன்னபடி ஒரு 'சில்க்' ஸூட்டாகத் தைத்துக்கொள்ளாமல் இரண்டு மூன்று கம்பளி ஸூட்டுகளாகத் தைத்துக்கொண்டதே நல்லதாகப் போயிற்று. அவருக்குக்கூட அதில் மனவருத்தம், பாவம்!) நான் நடுங்குவதைப் பார்த்து ஸ்ரீமதி பெய்னர்ட் (அந்த ஜெர்மானியர் பெயர் பெய்னர்ட்) 'என்ன, ஸெப்டம்பரிலேயே இப்படி நடுங்குகிறீர்களே! டிஸம்பரில் நீங்கள் என்ன செய்வீர்களோ! இன்று திங்கட்கிழமையாதலால் இரவு கடைகள் திறந்திருக்கும். எங்கெங்கே விற்பனைகள் என்று பத்திரிகையில் பார்த்துக்கொண்டு சாயங்காலம் கடைக்குப் போகலாம். உங்களுக்கும் இன்னும் சில கம்பளி ஆடைகள் வாங்கிக்கொள்ளலாம், என்றார். 'சரி'யென்று பல்லைக்கடித்த வண்ணம் பதிலளித்துவிட்டு வெளியே கிளம்பினேன். பெய்னர்ட் என்னைக் காரில் அழைத்தார். நான் நடந்து வர விரும்புவதாகச் சொல்லி விட்டேன். காலையில் காட்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டு போகலாம் என்பது என் எண்ணம்.

வெளியே கிளம்பியதும் குளிர் இன்னும் அதிகமாக நடுக்க ஆரம்பித்துவிட்டது. அருகிலுள்ள ஹோட்டலுக்குள் நுழைந்தேன், 'என்ன வேண்டும்' என்று 'ஸர்வர்' கேட்டான். நான் விழித்தேன். என் கஷ்டத்தைப் புரிந்து கொண்டவன் போல் ஒரு 'மெனு கார்டு' கொண்டுவந்து கொடுத்தான். என்னென்னவோ பெயர்கள் காணப்பட்டன. அவற்றில் எது சாக 'பக்ஷிணிகள்' உணவு என்று தெரியவில்லை. ஆகையால் 'டோஸ்டும் காபியும்' என்று சொல்லி வைத்தேன். கன்னங்கரேலென்று சர்க்கரையும் இல்லாமல் காபி டிகாஷனைக் கொணர்ந்து வைத்துவிட்டான். அப்புறந்தான், 'க்ரீமுடன் காபி' (Coffee with cream) என்று சொல்லவேண்டும் என்று ஞாபகம் வந்தது! ஏனெனில் அமெரிக்கர்கள் காப்பியைப் பாலும்சர்க்கரையும்சேர்க்காமல் சாப்பிடுகிறார்கள். சிலர் பால் சேர்த்துக்கொண்டும் சாப்பிடுகிறார்கள் (Coffee with cream) என்று சொன்னதும் கொஞ்சமா

கப் பால்விட்டு, காபி வந்துசேர்ந்தது. அடுத்த நாளிலிருந்து வேடிக்கையாக, 'பால்விட்ட காபி' என்று சொல்வதற்குப் பதில் 'காபி கலந்த பால்' என்று சொல்ல ஆரம்பித்தேன்! ஸர்வரும் என் தேவையைப் புரிந்துகொண்டு தினம் என்னைக் கண்டதும் தாராளமாகப்பால்விட்டு, காபிகொணர்ந்து வைக்க ஆரம்பித்தான். இங்கே காப்பி விலை 7 சென்ட்தான். சில ஹோட்டல்களில் 5-சென்ட்டுக்குக்கூடக் கிடைக்கிறது. (ஒரு சென்ட் ஒரு அணு—இருந்தாலும் மற்றப் பொருள்களுடன் ஒத்துப் பார்த்தால் காபி மலிவுதான்) என்ன தான் இருந்தாலும் தமிழ் நாட்டு நவீன நாகரிகச் சின்னமாகிய 'எஸ்ஸென்ஸ்' காபி இவர்களுக்குத் தயாரிக்கத் தெரியவில்லை என்று தான் சொல்ல வேண்டும். டீ வேண்டுமானால் உங்களுக்கு வேண்டியது 'பச்சை' டீயா. அல்லது 'கறுப்பு' டீயா என்று தான் சொல்ல வேண்டும்! (Green or Black) நம்மைப் போன்ற குடியர்களுக்கு (காபி, டீ குடியைத்தான் சொல்கிறேன்!) கறுப்பு டீ தான் சரிப்படும், ஒரு கோப்பை வெந்நீரில் ஒரு டீ பொட்டலத்தைப் பிரிக்காமல் காகிதத்துடன் அப்படியே தண்ணீரில் போடுவது முதலில் வேடிக்கையாக இருக்கிறது. ஆனால் காகிதம் வடிதாளாகையால் தேயிலை டிகாஷன் தானே இறங்கிவிடும். காபியோ, டீயோ பிடிக்காதவர்கள் 10 சென்ட் கொடுத்தால் கள்ளிச்சொட்டு மாதிரி குளிர்ந்த பால் கிடைக்கும். இங்கு ஐஸ் போல் குளிர்ந்த பாலைத்தான் சாப்பிடுகிறார்கள். சுடச்சுட, குங்குமப்பூ, ஏலக்காய் பிஸ்தாப்பருப்பு, கல்கண்டு முதலியன போட்டுப் பால் சாப்பிடும் ருசியை அறியாதவர்கள், பாவம். நம்மைப்போன்ற பிரகிருதிகள் சூடான பால் வேண்டும் என்று கேட்டால் சுட வைத்துக் கொடுக்கிறார்கள். டோஸ்டைத் தவிர வேண்டுமானால் சாகலேட் சாப்பிடலாம். 'Dough nut' என்று 'கேக்' மாதிரி ஒன்று செய்கிறார்கள். ஒரு நாள் பக்கத்திலிருப்பவன் ஏதோ தோசை மாதிரி ஒன்று சாப்பிட்டுக் கொண்டிருந்தான். நாக்கில் ஜலம் ஊறவே, "அது என்ன?" என்று கேட்டேன். (wheat cake) என்றான். கோதுமை மாவில் முட்டை கலந்து. தோசை மாதிரி வார்த்து, கொஞ்சம்வெண்ணெய் தடவிப் போடுகிறார்கள். 'தொட்டுக்கொள்ள, தேன் ஆரஞ்சு ரஸம் எங்கு வேண்டுமானாலும் கிடைக்கிறது. காலை ஆகாரம் என்றால் நான் சொன்னவற்றுள் ஏதாவது ஒன்றைத்தான் சாப்பிடலாம். இரண்டு ரொட்டித்துண்டுகளுக்கு நடுவில் (cheese) பாலேடு வைத்துப் பலவித டோஸ்டுகள் தயாரிக்கிறார்கள். 'கபே'க்களில் தானே பரிமாறிக்கொள்ளக்கூடிய பகுதியும் 'வெய்ட்டர்கள்' வந்து பரிமாறும் பகுதியும் உண்டு. நாமே பரிமாறிக் கொள்ளும் பகுதியில் விலை குறைவு. நம் ஊர் ரெயில்வே ஸ்டேஷன்களிலுள்ள மாடர்ன் கபே ஸ்டால்களைப் போல் இருக்கின்றன.

சாப்பிட்டுவிட்டு ஒரு டாலர் நோட்டைக் கொடுத்தேன். (அமெரிக்க நாணயச் செலவாணியும் விலைவாசியும் தெரியும் வரை, நம் அறியாமையை மறைப்பதற்காக நோட்டு நோட்டாக வீசுவதைத் தவிர வேறு வழியில்லை!) சில்லறையை வாங்கிக்கொண்டு இன்ஸ்டிட்யூட்டை நோக்கி வேகமாக நடந்தேன். குளிரில் உடம்பு வெலவெலக்க ஆரம்பித்துவிட்டது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு இன்ஸ்டிட்யூட்டை அடைந்தேன்.

யூனிவெர்ஸிடி அவென்யூவில் ஒரு கோடியில் என்ஸைம் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட் (Enzyme Research Institute) இருக்கிறது. புதுக் கட்டிடம், அடித்தளம், முதல் மாடி இரண்டாம் மாடி - நம் காலேஜுகளில் உள்ள கெமிஸ்ட்ரி ஸெக்ஷன் அவ்வளவுதான்! ஆனால் அதைக்கட்டப் பலகோடி ரூபாய்கள் செலவாகியிருக்கின்றன. அதில் உள்ள கருவிகளும் பொருள்களுமோ இன்னும் பதின்மடங்கு மதிப்புள்ளவை.

உள்ளே நுழையும்போது 'கணகண' வென்று கணப்புச்சட்டி போட்டதுபோல் குளிருக்கு இதமாக இருந்தது. காரணம் 'இன்ஸ்டிட்யூட்டில் (Air-Conditioning)' இருப்பதுதான். உள்ளே நுழைந்துவிட்டால் கம்பளி ஆடைகூட அவசியமில்லை. சுற்று முற்றும் சர்க்காரோ அல்லது பெய்னர்ட்டோ இருக்கிறார்களா என்று பார்த்தேன். டைரக்டரிடம் போவதற்குத்தான். பெய்னர்ட் வேறு, காலையிலேயே, 'கொஞ்சம் நரைத்த மீசை தாடியாவது ஒட்டவைத்துக் கொள்ளுங்கள். டைரக்டர் வயதுமுதிர்ந்த விஞ்ஞானியை எதிர்பார்க்கிறார். உங்களைப் பார்த்தாலே காலேஜ் மாணவர் மாதிரி இருக்கிறது! எங்காவது 'அதிர்ச்சி' உண்டாகிவிடப்போகிறது' என்று சொல்லியிருந்தார்.! நமக்கு எந்தவித மான வரவேற்புக் கிடைக்குமோ என்று எண்ணியவாறு ஓர் அறையில் ஏதோ பரிசோதனைகள் செய்துகொண்டிருந்த ஒருவரை அணுகினேன். ஒரு 'Good Morning' போட்டேன். 'Good Morning. தங்களுக்கு என்னவேண்டும்?' என்று கேட்டார். 'நான் டைரக்டரைப் பார்க்கவேண்டும். அவர் எப்பொழுது வருவார்? அவர் அறை எங்கே? 'என்று நான் சொல்லி முடிப்பதற்குள்ளேயே, 'ஓ! நீங்கள்தான் ராமகிருஷ்ணனா? நான் தான் 'க்ரீன்' (டைரக்டர் பெயர்). 'ரொம்ப சந்தோஷம். இதோ ஐந்தே நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்' என்று தம் பரிசோதனையை முடித்துக் கொண்டு பிறகு தம் அறைக்கு என்னை அழைத்துச் சென்றார். இதுதான் அமெரிக்கா. டைரக்டர் மற்றவர்களுடன் கலந்து வேலை செய்கிறார். காலை எட்டு மணிக்கு மற்றவர்கள் இன்ஸ்டிட்யூட்டுக்கு வருவதற்கு முன்பே அவர் வந்து, தம் வேலையை ஆரம்பித்து விடுகிறார். அவரே சோதனைக் குழாய்கள் முதற்கொண்டு எடுத்துக் கொள்வதையும் அலம்பிக்கொள்வதையும் குறிப்பிடத்தான் வேண்டும். பதினொரு மணி வரை ஆராய்ச்சிச் சாலையில் வேலை செய்துவிட்டுப் பின் கடிதப் போக்குவரவைக் கவனிக்கத் தம் அறைக்குச் செல்வார். ஒரு மணிக்

குள் காரியதரிசியிடம் எழுத்து வேலைகளையெல்லாம் கொடுத்துவிட்டு, திரும்பவும் மத்தியானம் தாம் வேலைசெய்ய ஆரம்பிப்பார்; அல்லது மற்றவர்கள் வேலையைப் பார்வையிட்டு அவர்களுக்கு யோசனைகள் கூறுவார். ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை டைரக்டர் தமக்கு எது ஆராய்ச்சிக்கு உகந்ததாகத் தோன்றுகிறதோ அந்த முறையில் செலவழித்துக் கொள்ளலாம். ஒவ்வொன்றுக்கும் அரசாங்கத்தார் உத்தரவை எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஆராய்ச்சியைத் திறம்பட நடத்துவதற்கு வேண்டிய சுதந்திரம் இருக்கிறது. நம் நாட்டைப் போல் அடிக்கடி 'ரிப்போர்ட்' எழுத வேண்டிய தொல்லை இல்லை. 'கணக்குகள்', கடிதப் போக்குவரத்து முதலியவற்றைக் காரியதரிசி கவனித்துக் கொள்வாள். ஆகையால் டைரக்டர்களுக்கு நிதானமாக ஆராய்ச்சிகளைக் கவனிக்கவும் மற்றவர் ஆராய்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளவும் சிரத்தை காட்டவும் அவர்களுக்கு உற்சாகமளிக்கவும் முடிகிறது. இன்ஸ்டிட்யூட்டில் உள்ள ஒவ்வொருவரும் நேரடியாக டைரக்டர் கீழ் வேலை பார்க்கிறார்கள். நம் நாட்டைப் போல் பல படிகளைத் தாண்டித்தான் அவரிடம் போகலாம் என்பதில்லை. இரவு வேலைகளில்கூட நூல்களைப் படித்து ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதற்குப் புது யோசனைகளைக் காலையில் சொல்லுவார். யாருக்காவது, ஆராய்ச்சியில் நல்ல முடிவு கிடைத்ததாக அவருக்குப் 'போன்' பண்ணினால் போதும். உடனே உற்சாகத்துடன் வந்து விடுவார். அவருடைய திறமையையும் சுறுசுறுப்பையும் அவசியம் பாராட்டத்தான் வேண்டும்.

உடம்பில் நிகழும் பல வேலைகளுக்கும் (ஜீரணித்தல், ரத்தவோட்டம், சுவாசித்தல் etc) என்ஸைம்கள் (நொதிகள்) தான் முக்கிய காரணம் என்பது விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவு. இந்த என்ஸைம்களைப் பிரித்து ஒவ்வொன்றின் அமைப்பு, தயாரிப்பு, தன்மை, அது உடலில் வேலை செய்யும் விதம் எல்லாவற்றையும் இந்த இன்ஸ்டிட்யூட்டில் ஆராய்கிறார்கள். அமெரிக்காவில் ஹிருதய நோய்களும் கான்ஸரும் அதிகமாக இருப்பதால் ஹிருதயம் வேலை செய்வதற்கு அனுகூலமான என்ஸைம்களைப் பற்றியும் கான்ஸருக்கும் என்ஸைம்களுக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் பற்றியும் இங்கு ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய ஆராய்ச்சி ஸ்தாபனம் உலகிலேயே இது ஒன்று தான். 'விஸ்கான்ஸின்' ராஜ்ய அரசாங்கம், ராக்பெல்லர் ஸ்தாபனம், அமெரிக்க சுகாதார இலாகா மூன்றும் சேர்ந்து இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருக்கின்றன, இங்கிலாந்தில் 17 வருஷம்ஆராய்ச்சிசெய்து இளமையிலேயே ரசாயன உலகில் புகழ் பெற்ற டாக்டர் டேவிட் க்ரீன் - ஐ இதற்கு டைரக்டராக நியமித்திருக்கிறார்கள். இவர் ஓர் அமெரிக்க யூதர். வயது 42 தான்! சுறுசுறுப்போ, வயது 20 என்று தான் மதிக்கலாம்! ஊக்கமும் திறமையும் உள்ள பல ஆராய்ச்சியாளர்களை உலகின் பல பாகங்களிலிருந்தும் தம்முடன் வேலை செய்ய வரவழைத்துக்கொள்ளுகிறார். இந்தியா, ஜப்பான், ஜெர்மனி முதலிய பல நாடுகளிலிருந்தும் இங்கு ஆராய்ச்சியாளர்களை வரவழைக்கிறார்கள். உலகின் தலைசிறந்த ஆற்றலை விலை கொடுத்து வாங்கப் போதுமான பணம் அவர்களிடம் இருக்கிறது! தவிர, ஒருவர் பெரிய பதவிக்கு வந்துவிட்டால் 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்ற வசனத்துக்கேற்ப மாமா, மருமான் என்று உறவினர்களைக் கொண்டு எல்லா இடங்களையும் நிரப்பும் முறையும் அமலில் இல்லை! திறமைக்கேற்ப வேலை என்ற கொள்கையைப் பின்பற்றும் நாடு. இம்மாதிரி வந்திருக்கும் ஆராய்ச்சியாளர்களைத்தவிர M. Sc பாஸ் செய்த ஏராளமான (Lab Technicians) 'டெக்னீஷியன்கள்' இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலார் ஸ்திரீகள். பலர் கணவனின் படிப்பு முடிவதற்காக வேலை பார்ப்பவர்கள். இம்மாதிரி வேலை செய்வோர், கணவன் படிப்பு முடிந்து உத்தியோகத்தில் அமர்ந்ததும் தாங்கள் வேலைக்குப் போவதை விட்டு விடுகிறார்கள்.

சரி, டைரக்டரைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தவன் எதெதையோ வர்ணிக்கத் தொடங்கிவிட்டேன். டைரக்டர் என்னைத் தம் அறைக்கு அழைத்துக் கொண்டுபோய் யோக க்ஷேமங்களை விசாரித்துவிட்டு, 'சில நாட்கள்வரை, நாங்கள் செய்வதைப் பார்த்துக் கொண்டே இருங்கள். எல்லாம் தானே புரிந்து விடும்' என்றார். நானும் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு முதலில் ஆராய்ச்சிச்சாலையைச் சுற்றிப் பார்க்கலாம் என்று பேஸ்மென்டுக்குள் நுழைந்தேன். இங்கேதான் 'தயாரிப்பு அறை' (Preparation Room.) அதை அடுத்து,'குளிர்ந்த அறை' ('Cold Room) உள்ளே ஒரு அறையில்—4°c இன்னொரு உள் அறையில்—20°c (பனிக்கட்டியைவிட 20° சதாம்சம் குறைவு) இதையடுத்து 'வொர்க்ஷாப்' (வொர்க்ஷாப் ஆட்கள் எங்கும் ஒரே மாதிரிதான் இருப்பார்கள் போலும்! இங்கும் இவர்களைத் தாஜா செய்துதான் வேலை வாங்கவேண்டியிருக்கிறது. தயாரிப்பு அறையில் நான்கு ('Refrigerated centrifuges') இருக்கின்றன. ஒவ்வொன்றின் விலை ரூ. 10000 தான்! (பனிக் கட்டியைவிடக் குறைந்த உஷ்ண நிலையில் சுழலும் கருவி) ஐஸ்பெட்டிகள் ஐஸ் உடைக்கும் கருவி எல்லாம் இங்கேயே இருக்கின்றன. ஒரு மேஜைமேல் ஐந்து கத்திகள் வைக்கப்பட்டிருந்தன. பனிக்கட்டிக்குள் சில கண்ணாடி பீக்கர்கள் இருந்தன. இது எதற்கு என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே 'ஹிருதயம் வந்துவிட்டது' என்று ஒரு அம்மாள் கத்தினாள்; உடனே மேல்மாடியிலிருந்து 5 ஆட்கள் ஓடி வந்தார்கள். பக்கெட் பக்கெட்டாகக் கீழே ஏதோ பொருள் மாடியிலிருந்து இறங்கியது. பார்த்தால், ஏதோ பிராணியின் ஹிருதயம். அந்த ஐந்து பேரும் ஆளுக்கு ஒரு கத்தி எடுத்து அதைத் துண்டு துண்

டாக நறுக்கி அவசர அவசரமாக அந்தப் பனிக் கட்டியில் வைக்கப்பட்ட பீக்கர்களில் போடஆரம் பித்தார்கள். எனக்கு ஏதோ சினிமாவில் திடீர் காட்சி ஒன்று பார்ப்பது போல் இருந்தது. தலை யைச் சுற்ற ஆரம்பித்தது! இந்த லட்சணத்திலே ஒருவர். 'நீங்களும் நறுக்குகிறீர்களா?' என்று கேட்டார்! திடுக்கிட்டேன். ஆனால் பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியமரம் ஏறித்தானே ஆக வேண்டும்! சரியென்று தயங்கியவாறே நானும் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டேன். அங்கிருந்தவர் ஹிருதயத்தில் வேலை செய்யும் நொதிகளை ஆராய்வதற்காகப் பன்றியின் ஹிருதயத்திலிருந்து அவற்றைத் தயாரிக்கிறார்களென்றும் பன்றி இறந்தவுடனேயே ஹிருதய நொதிகளைப் பிரித்தெடுக்காவிட்டால் அப்புறம் அது கெட்டுவிடும் ஆகையால்தான் இவ்வளவு அவசரம் என்றும் விளக்கினார். மாடியிலிருந்து இங்கு இவை எப்படி வருகின்றன? என்று கேட்டேன். ஒருவர் உடனே என்னை மாடிக்கு அழைத்துக் கொண்டு போனார்.

மாடியில் 'Oscar Meyer கம்பெனியிலிருந்து சுகாதார முறையில் பண்ணையில் வளர்க்கப்பட்ட பன்றிகளை இங்கேகொண்டுவந்து மாட்டுகிறார்கள். மின்சாரச் சம்மட்டி இவைகளை அறைந்து கொல்கிறது. செத்த பன்றி ஒரு வளையத்தில் நகர்ந்து கொண்டே போகிறது. வரிசையாக ஆட்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். அவரவர்கள் எதிரே பன்றி வரும்பொழுது அவர்கள் பங்கை, (கல்லீரல், குடல், ஹிருதயம் போன்ற ஏதாவது உறுப்பு) பிரித்தெடுத்துக்கொள்ளுகிறார்கள். (உடம்பில் சூடு இருக்கும்பொழுதே இத்தனை வேலையும் நடக்கவேண்டும் (உயிர் போய்விட்டாலும் 'ஸெல்கள்' உயிருள்ளவை. கொஞ்சநேரம் வரைதான்) கீழ்மாடியிலுள்ள பெண்கள் குடலிலுள்ள அசுத்தங்களை நீக்கி, புகைக்கவேண்டிய பாகங்களைப் புகைத்து, அந்தந்த ஸெக்ஷனுக்கு அனுப்புகிறார்கள். (ஹிருதயம் பேஸ்மெண்டுக்கு வருவதைத்தான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன்) அந்தந்த ஸெக்ஷனில் அவற்றை நறுக்கிப் பதம்செய்து கெடாமலிருக்கும்படி பனிப் பெட்டிகளில் வைத்து உடனே மோட்டார் வேன்களில் கடைக்கு அனுப்பிவிடுகிறார்கள். பன்றி இறைச்சி இவர்களுக்குப் பிடித்தமான உணவாகையால், பன்றிகள் உணவுக்காகப் பண்ணையில் வளர்க்கப்படுகின்றன. இப்பண்ணையை நடத்தும் கம்பெனியார் தினந்தோறும் நொதி ஆராய்ச்சிக்காக நாற்பது ஹிருதயங்களை இலவசமாகக் கொடுக்கிறார்கள். அரைமணிக்குள் அவற்றிலிருந்து நொதிகளைத்தயார் செய்யவேண்டும். பல முறைகளைக்கொண்டு நொதிகள் பிரித்தெடுக்கப் படுகின்றன. அவற்றைப்பிரித்துக் குளிர்ந்த அறையில் வைக்கும்வரை தினம் ஒரு ஆர்ப்பாட்டந் தான்! சிலசமயம் இந்தக் கூத்தில் டைரக்டர் கூட வந்து மாட்டிக்கொள்ளுவார். நொதிகளைப் பிரித்தெடுத்து வைத்தபின் எல்லாரும் பகல் போஜனத்திற்குச் செல்கிறார்கள்.

பகல் போஜனம் இவர்களுக்கு மிகவும் சுருக்கம்தான். காலையிலும் இரவிலும்தான் முழுச் சாப்பாடு என்று சொல்லவேண்டும். பகலில் அவரவர்கள் கையில் 'மட்டன் ஸாண்ட்விட்ச்' கொண்டு வருகிறார்கள். அதனுடன் ஓர் ஆப்பிளையும் சாப்பிட்டு ஒரு கோக்கோ கோலாவை'க் குடித்'துவிட்டு (Chewing gum) 'சுவைக்கும்பிசினை'ச் சுவைக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். காப்பியும் வெற்றிலையும் நம்மை ஆட்டிவைப்பதுபோல் இவர்களைச் சுவைக்கும் பிசினும் கோக்கோ கோலாவும் ஆட்டுகின்றன! எல்லா இடங்களிலும் இவற்றை விற்க மெஷின்கள் இருக்கின்றன. வேலை செய்து கொண்டே இவற்றைச் சாப்பிடலாம். சினிமாக்களிலும்கூட இவை உண்டு. பகலில் பலத்த உணவு சாப்பிட்டால் தூக்கம் வரும் என்ற பயமோ என்னவோ!

'லஞ்ச், சாப்பிடுவதற்காக Drug house-க்குப் போனேன். Drug house என்றால் மருந்துக் கடை என்றுதான் அர்த்தம். ஆனால் இங்கு எல்லாச் சாமான்களும் கிடைக்கும். ஒரு மூலையில் மருந்துகள். இன்னொரு புறம் சுத்தமான உணவு, இன்னொரு புறம் சோப்பு, சீப்பு போன்ற பொருள்கள். இங்கே கொஞ்சம் விலையும் குறைவு. அதனால் இங்குத்தான் பலர் உணவு அருந்துகிறார்கள். வியாபார தந்திரம் தெரிந்தவர்களாகையால் 'வாஷிங்டன் பிறந்த நாள், அந்த நாள், இந்த நாள்' என்று விசேஷ விற்பனை தினங்களில் விலை குறைவாக விற்பார்கள்! வழக்கமாக அதிக விலை கொடுத்து அன்றுதான் சரியான விலை கொடுப்பதை உணராத மக்களும் மிகவும் சந்தோஷம் அடைகிறார்கள். ரெப்ரிஜிரேடரில் உள்ள ஐஸ்க்ரீமை நாமே எடுத்துக் கொள்ளலாம் (மெஷினுக்குள் பணத்தைப் போட்டு விட்டுத்தான்). அதே மாதிரி ஸ்டாம்பு விற்கும் மெஷின்கள் இங்கேயே இருப்பதால் தபாலாபீசுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. டெலிபோன் 'பூத்'களும் இங்கேயே இருக்கின்றன. வெள்ளிக்கிழமை மாலை இங்கு ஒரே கூட்டமாக இருக்கும். சனிக்கிழமை மாலையை, இங்குக் குஷியாகக் கழிக்கத் திட்டங்களைப் 'போன்' மூலம் காதலர்கள் வகுத்துக்கொண்டிருப்பார்கள். நமக்குஅவசரமாகப் போன் பண்ண வேண்டுமென்றால் இவர்கள் பேசிமுடியும் வரை காத்திருந்து சரிப்படாது! 'Honey' 'Darling' என்று போனிலேயே இவர்கள் கத்துவது நமக்கு வியப்பாகத்தான் இருக்கும்!

Drug house-ல் நேராகக் காப்புரியா ஸெக்ஷனுக்குச் சென்றேன்! முதலில் ஆரஞ்சு ரஸம் சாப்பிட்டேன். 'காய்கறி ரஸம்' (Vegetable Soup) என்று காணப்பட்டது. அதைக்கொண்டுவரச் சொன்னேன். அதில் ஏதோ சிவப்புத் துண்டுகள் மிதந்து கொண்டிருந்தன. 'இவை என்ன?' என்று கேட்டேன். 'beef' என்றான். (பசுவின் இறைச்சி) 'அட ராகவா!' என்று மனத்தில் சொல்லிக்கொண்டு, 'நான் காய்கறி ரசமல்லவா கேட்டேன்? என்று சொன்

னேன். அப்படியென்ருல் (beef) இல்லாத தாவர காய்கறி ரசம் (Vegetarian Vegetable soup) என்று சொல்லவேண்டும் என்ருன்! பிறகு டோஸ்டும் பாலேடும் வெள்ளரிக்காய் ஊறுகாயும் (வேறு ஒன்றுமில்லே, உப்புப் போட்ட வெள்ளரிக்காய்!) சாப்பிட்டுவிட்டு ஒரு டம்ளர் 'மால்ட்' செய்த பால் சாப்பிட்டேன் (Malted milk) அதாவது, 'மால்ட்', சாகலேட், வெனிலா, ரோஸ்பரி எஸ்ஸென்ஸ் முதலியன வற்றைப் பாலில் கலந்து கடைந்து கொடுக்கிருர்கள். இட்லியும் சட்னியும் மாதிரி ஏதோ சிலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அது என்ன என்று கேட்டேன், இரண்டு பன்னுக்கிடை (minced meat) வைத்து, பிளாஸ்டிக் தட்டுக்களில் கொடுக்கிருர்கள், நம் ஊரில் வாழை இலேயில் இட்லி, சட்னி தருவது போல. ஒருமுறை மெனுவில் ('spanish rice plate' ஸ்பானிஷ் சாதம்) என்று போட்டிருந்தது. அதைத் தவருக (spinach rice) என்று நினைத்து (spinach ஒருவிதக் கிரை) அதை ஆர்டர் பண்ணிவிட்டேன். வெகு நாள் கழித்துக் கிரையும் சாதமும் சாப்பிடப் போகிருேம் என்று நாக்கைத் தீட்டிக் கொண்டு காத்துக்கொண்டிருந்தேன். கடைசியாக, 'பிளேட்' வந்தது. கிரையும் இல்லே, மண்ணுமில்லே! 'beef' துண்டுகள் சிவப்பாகக் காட்சியளித்தன! 'நான் விலே வேண்டுமானுல் கொடுத்துவிடுகிறேன், எனக்கு இது வேண்டாம்' என்றேன். 'அது தான் நானும் பார்த்தேன். நீங்கள் இதை ஆர்டர் செய்கிறீர்களேயென்று; பின் ஏன் ஆர்டர் செய்தீர்கள்?' என்று பணிப்பெண் கேட்டாள். நான் விஷயத்தை விளக்கினேன். அவள் உடனே இதைத் தன் சகபாடிகளுக்குச் சொல்ல எல்லோரும் என்னேப் பார்த்து விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தார்கள்! அப்புறம் சில நாட்களுக்குத் தினம், என்னேப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்துக் கொள்வார்கள்!

பாலும் ஆரஞ்சு ரஸமும் டோஸ்டும் சாப்பிடுவதற்குப் பில் 90 சென்ட் (4½ ரூபாய்) பேசாமல் கொடுத்துவிட்டு வெளியே வந்தேன். எதிரே ஒரு சலூன் காணப்பட்டது. அதற்குள் நுழைந்தேன். ஸலூன்காரன் 'கொர் கொர்' என்று மெஷினே என் தலேயில் செலுத்தியவாறே இன்னொருவரிடம் ட்ரூமனேப் பற்றியும் கிரிக்கெட்டைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தான். ஐந்து நிமிஷத்தில் அவன் 'வேலே முடிந்துவிட்டது' என்ருன். ஒரு டாலர் நோட்டைக் கொடுத்து விட்டுச் சில்லறைக்காகக் கையை நீட்டினேன். இன்னும் 25 சென்ட் என்ருன். (மொத்தம் ஆறு ரூபாய்!) கப்பலில் கொடுத்த மூன்று ரூபாயே மலிவு என்று ஆகிவிட்டது! வெளியே வரும் பொழுது, 'அடிக்கடி வாருங்கள்' என்ருன். 'மூர்ச்சையடையாமல் சமாளித்தது போதாதா, அடிக்கடி வேறு வரவேண்டுமா' என்று நினேத்துக்கொண்டு மனதிற்குள்ளேயே 'இப்போதைக்கு இல்லே' என்று முணுமுணுத்தது அவன் காதில் விழுந்ததோ, என்னவோ தெரியாது!

இன்ஸ்டிட்யூட்டுக்குத் திரும்பி ஆ[illegible] சாலேயைச் சுற்றிப் பார்த்தேன், வி[illegible] Warlburg Manometers, Backm[illegible] photo meter முதலியன ஒ[illegible] அறையிலும் இருந்தன. கண்ணுடிச் மூலம் காய்ச்சி வடித்த நீர், சாத நீராவி, வெந்நீர் ஒவ்வொரு மேனை வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட வேலே ஒன்றும் ஆரம்பிக்காததால் யூட்டை ஒரு முறை சுற்றிப் பா லேப்ரரியில் போய் உட்கார்ந்து டீ அங்கும் பொழுது போக வில்லே. க்ரீனுக்கு ஒரு 'குட் நைட்' போ மாலே ஆறு மணிக்கு வீட்டுக்குக் கிள

ஸ்ரீமதி பெய்னர்ட் குழந்தையைத் [illegible] பண்ணிவிட்டு, கடைக்குக் கிளம்பத் தய இருந்தார். காரை எடுத்துக் கொண்டு கடைக்கு கிளம்பினோம். இங்கே கடைகள் சாதாரண நாட்களில் காலே 10 மணியிலிருந்து மாலே 5 மணி வரைதான் திறந்திருக்கும். ஞாயிற்றுக்கிழமை கடை கிடையாது. திங்கட்கிழமை மாத்திரம் மத்தியானம் 2 மணிக்கே கடையை மூடிவிட்டு மறுபடி 6 மணிக்குத் திறக்கிருர்கள். ஆண், பெண் அனேவரும் வேலேக்குப் போவதால் திங்கட்கிழமை மாலே தான் 'ஷாப்பிங்' மும்முரமாக இருக்கும். ஒன்றும் வாங்காதவர்கள்கூட வேடிக்கை பார்த்துக் கொண்டே செல்வார்கள். ஸ்ரீமதி பெய்னர்ட் முதலில் வீட்டுக்கு வேண்டிய சாமான்களே வாங்கிக்கொள்வதற்காக 'Food Store'-க்குள் நுழைந்தார். இங்கு உள்ளே தள்ளு வண்டிகள் இருக்கின்றன. குழந்தைகளே எடுத்துக்கொண்டு வருகிறவர்கள் தள்ளுவண்டி ஒன்றில் குழந்தையை உட்கார வைத்து விட்டு, தொல்லேயில்லாமல் சாமான்களே வாங்கலாம்! பால், வெண்ணெய்' காய்கறி, இறைச்சி, ஜாம் (Jam) அரிசி முதலியன இங்கே கிடைக்கின்றன. சுற்றிக் கொண்டே நமக்கு வேண்டியவைகளேயெல்லாம் எடுத்து டிரேயில் போட்டுக்கொண்டு வந்து, கௌண்டரில் கொடுத்து விடவேண்டும். அவர்கள் சாமான்களே, 'பாக்' செய்து பில்லேயும் கொடுப்பார்கள்! குடும்பத்திற்கு வேண்டிய சகல சாமான்களும் இங்கேயே கிடைப்பதால் பெண்மணிகள் ஆபீஸிலிருந்து வரும்பொழுதே ஐந்து நிமிஷத்தில் சாமான்களே வாங்கிக்கொண்டு வந்துவிடுவார்கள். ரொட்டி, பால், பழரசம் என்று இந்த மாதிரி உணவுகளாகச் சாப்பிடுவதால் 'நச்சு பிச்சென்று' சமையல் வேலேயும் கிடையாது. அறுபது நாழியும் அடுப்பூதும் தொல்லேயும் இல்லே. அதனுல்தான் இவர்கள் சௌகரியமாக வேலே பார்க்கமுடிகிறது. சுத்தமான ஆரோக்ய உணவு நியாயமான விலேக்கு வெளியிலேயே கிடைத்துவிடுகிறது. அமெரிக்கர்களுடைய வாழ்க்கை ஒரேயந்திரமயமாகி குடும்பப்பற்றுக் குறைந்து விட்டது என்று சமூக மனத்தத்துவ ஆராய்ச்சியாளர்கள் கருதுகிருர்கள். ஒவ்வொருவரும் சுதந்திரமாக இருப்பதால் ஒருவர்

ை இன்னொருவர் பூர்த்தி செய்வதால்
பரஸ்பரம் அன்யோன்ய பாவம் அதிக
வதில்லை. விவாக ரத்துக்கள் அதிகரிக்

் பொருள்களை வாங்கிக்கொண்டு
வுக்குப் போனோம். Capital Square
ச் சுற்றிக்கொண்டு போகவேண்டும்.
ளை நிறுத்த யந்திரசாதனங்கள் இருக்
(Automatic machines) ஒரு மணி
க்க 20 செண்ட் வாடகை யந்திரத்தில்
டும். யந்திரத்தின் முன் ஒரு மணி
ம். 1மணி கழித்துத் திரும்பவும் 0-க்கு
அதற்குள் வராவிட்டால் போலீஸ
காரில் டிக்கட் எழுதி ஒட்டிவிடுவான்.
ாள் போலீஸ் ஸ்டேஷனுக்குச்சென்று
ர் கொடுக்க வேண்டும்! இன்னும் சில
டங்களில் (யந்திரவசதி இல்லாத இடங்கள்) குறித்த நேரத்தில் மோட்டார் சைகிளில் ஒரு போலீஸ்காரன் எல்லாக் காரின் டயர்களையும் ஒரு நீண்டதடியைக்கொண்டு அடையாளம் குறித்துக் கொண்டே போவான். சரியாக 1 மணி கழித்து அவன் வரும்பொழுது அந்தக் கார் அங்கு இருக்கக்கூடாது. எல்லாரும் கார் வைத்துக்கொண்டிருப்பதால் இங்கே காரை நிறுத்த இடம் கிடைப்பது மிகவும் தொல்லை. வெகுநேரம் சுற்றிப்பார்த்து விட்டு ஒரு தெருக்கோடியில் காரை நிறுத்தி விட்டுக் கடைக்குச் சென்றோம்.

எங்கெந்தக் கடையில் அன்று விசேஷவிற்பனை என்று ஸ்ரீமதி பெய்னர்ட் பத்திரிகையிலிருந்து குறித்து வைத்திருந்தார். அதாவது, ஸ்டாக் மிஞ்சிப்போகும்போலிருந்தால் உடனே விலையைத் தள்ளி விற்பனை செய்துவிடுகிறார்கள். புதுத் தினுசுகள் மேலும் மேலும் வரவழைப்பதற்காக அப்படிச் செய்கிறார்களேயொழிய, சரக்கு நன்றாகத்தான் இருக்கும். ஒரு கடைக்குச் சென்று 50 டாலர் விலையுள்ள 'Leather Jacket'-ஐ 24 டாலர் விலைக்கு (தள்ளுபடி விலை)வாங்கிக்கொண்டேன். அங்கேயே Woollen socks, gloves, தலை காது எல்லாவற்றையும் சேர்த்து மூடும் (fur cap) எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டேன், கடைக்காரர் என்னைக் குசலப் பிரச்னம் விசாரித்தார். முன் பின் தெரியாத என்னிடம் 'செக்' வாங்கிக்கொண்டார். இங்கு, 'செக்'குகளை யார் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்கிறார். அவற்றை உடனே பணமாக்கிக் கொள்ளலாம். காஷியர் மூன்றாவது மாடியில் இருப்பான். மாடிக்குச் செல்லும் குழாய் ஒன்றில் செக்கைப் போட்டு மூடி, ஒரு பித்தானை அமுக்கினால் 'செக்' காஷியர் முன்னால் போய் நிற்கும்! அவன் பணத்தைக் குழாய்க்குள் போட்டு அனுப்புவான்! கடைமுதலாளி ஒரு ரஷ்யர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். 'சரிதான் நான் இந்தியன், இந்த அம்மாள் ஜெர்மானியர். இம்மாதிரி எல்லாரும் சிநேகபாவத்துடன் இருந்தால் உலகயுத்தம் தலைகாட்டாது!' என்று சொல்லிவிட்டு வெளியேறினேன்.

ஸ்ரீமதி பெய்னர்ட் மெள்ள மெள்ள ஒவ்வொரு கடைக்கும் என்னை அழைத்துச் சென்று பல சாமான்களை 'மலிவு, மலிவு' என்று சொல்லி என்னை வாங்கும்படி செய்துவிட்டார். வீட்டுக்குப்போய் உடனேயே எல்லாவற்றையும் அணிந்துகொண்டு பார்த்தேன். என்ன மகாராஜா மாதிரி இருக்கிறீர்களே?' என்று சொல்லிச் சிரித்தார் பெய்னர்ட். எல்லாவற்றையும் கழற்றிவைத்துவிட்டுக் கணக்குப் பார்த்தேன். மொத்தம் 300 டாலர் செலவாகியிருந்தது (1500 ரூபாய்) அவ்வளவும் ஒரு வருஷக் கூத்துக்காக! இந்தியாவில் தம்பிடிக்குப் பிரயோசனம் இல்லை. ஒரு ஏக்கர் நிலம் வாங்கினால் தலைமுறை தலைமுறையாகக் கிடக்கும்! நவீன நாகரிகத்தின் கூத்துக்களை எண்ணியவாறு கண்ணயர்ந்தேன்.

(தொடரும்)


## காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள்நாடு | | | மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | ரு. | அ. | பை. | ரு. | அ. | பை. |
| ஒரு வருஷம் | 6 | 0 | 0 | 7 | 8 | 0 |
| அரை வருஷம் | 3 | 0 | 0 | 3 | 12 | 0 |
| தனிப் பிரதி | 0 | 8 | 0 | 0 | 10 | 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

# குங்குமம்

**என். சுப்பிரமணியம்**

கிளிக்கண்ணிகள் எல்லாமே அற்புதமான பாடல்கள்; தமிழிலுள்ள அமர காவ்யங்களுள் கிளிக்கண்ணியும் ஒன்று. ஒவ்வொன்றிலும் கிளி கொஞ்சும் தன்மை இருக்கிறது. முக்கியமாக,

எங்கும் நிறைந்திருப்போன்
 எட்டியும் எட்டாது இருப்போன்
குங்கும வர்ணனடி—கிளியே
 குமரப் பெருமானடி.

என்ற கண்ணியில் எனக்குப் பற்று அதிகம். முருகக் கடவுள் குறிஞ்சி நாட்டில் [மலையும் மலை சார்ந்த இடமும்] மட்டுமா இருக்கிறார்? நெய்தல் நிலத்துக் கடற்கரையிலும் கோயில் கொண்டார். குமரன் இளமை குன்றாமல் இருப்பதன் ரகசியம் அவன் உடல் வண்ணமே. வெண்மையான சாம்பல்பூத்த திருமேனியுடைய சிவனும் கரிய நிறக்கொண்டல் வண்ணம்கொண்ட கண்ணனும் நமக்கு நிறத்தினால் அறிமுகமானவர்கள். நீலம், வெண்மையென்ற நிறங்களைவிடக் கண்ணுக்குக் கவர்ச்சியும் மனதிற்குக் குளிர்ச்சியும் தருவது குங்கும வர்ணம். இளமைக்குள்ள நிறம் குங்குமம் வயதானாலும் குங்குமம் இட்டுக் கொண்டால், இளமையின் பொலிவையடையலாம். என்றும் இளமையையுடைய முருகனைக் குங்கும வர்ணன் எனச்சொல்ல ரசிகத் தன்மை வேண்டும்.

குங்குமம் அத்தனை அருமையான பொருள். அதன் பட்டுப்போன்ற ஸ்பரிசம் விரல் நுனிக்கு எத்தனை கொள்ளை இன்பம் தருகிறது! வேல் விழியும், பிறை நெற்றியும், எட்பூ நாசியும். தாமரைமுகமுமாகத்தான் இருக்கட்டுமே. குங்குமப் பொட்டிட்டுப் பார்த்தால் நீலவானத்திலே நிலாவட்டம் முகிழ்த்தது போன்றிருக்கும். மங்களகரமான பொருள் குங்குமம். குமரிப் பெண்கள் முதல் பிரம்மசாரி கிழவர்கள் வரை நீறில்லா நெற்றிக்கு இட்டால், அதன் அழகே தனி. குங்குமத்தின் அருமை வியாபாரிக்கும் தெரியக் காணோம்; தமிழகத்துப் பெண்டிரும் அறியவில்லை. இன்றைய உலகத்தில், பத்திரிகையில் கதை படிக்கும் காலத்து:—

"குங்குமச் சிமிழை வாரிக் கவிழ்த்துக் கொண்டது போல அழகாக இருந்தது செவ்வானம். அந்த வேளையில் தந்தக் கையன்ன காந்தள்விரல் கொண்டு குங்குமச் சிமிழைத் தொட்டு, திலகம் தீட்டினாள் அவள்"

என்று குறுக்கிடும் வர்ணனையை ரசிப்பார்கள். தங்கள் பாழ் நெற்றியை மட்டும் எண்ணுவதில்லை. வாழ்க்கையில் உள்ள சில பொருள்கள் கலைக்கடத்தோடு ஒன்றிவிடுகின்றன. ஏட்டுச் சுரைக்காயைப் பார்த்துத் திருப்தியடைகிறார்கள். கலையில் வரும் இன்பங்களுள் ஒரு சில இன்பங்களை யாவது வாழ்க்கையிலும் அனுபவிக்க வேண்டும். முக்கியமாகக் குங்குமம் தீட்டுவதை அனுபவிக்க வேண்டும்.

சிலருடைய திருமேனியில் குங்குமப் பொட்டின் அளவைப் பார்த்தால் கசாப்புக் கடை நோக்கிச்செல்லும் ஆடுகளின் நினைப்பு வரும். அத்தனை பயங்கரமான நிறத்திலும் அளவிலும் இட்டு இருப்பார்கள். தோட்டத்தில் பாதிக்கிணறு இருக்க முடியாது. நெற்றியில் பாதிக்கும் மேலாக உயர அகலத்தில் ஒரு ரூபாய் அத்தனை இட்டதைக் காண்கிறோமே! இவர்களால் குங்குமத்திற்கு மதிப்புப் போய்விட்டது. அருவருப்பும் பயங்கரமும் வளர்ந்துவிட்டன. அழகுக்காகப்பிறந்த கலையை அவலட்சணம் செய்துவிடுகிறவர்கள் இவர்கள். அளவிற்கு மிஞ்சினால், அழகு கொஞ்சும் குங்குமம் பயங்கரப் பொருளே; அளவோடு நெற்றியில், நாசிக்கு நேராகச் சிறியதாக இடவேண்டும்.

இது என்ன, பத்தாம்பசலிக்கொள்கையென்று தனிமையில் நீங்கள் சிரிக்கலாம். குங்குமத்தின் அருமையும் பெருமையும் தெரியாததனால், இந்தப் பரிகாசச் சிரிப்பும், குறும்புக் குறுநகையும் ஏற்படுகின்றன. நான்கூட இப்படி நகைத்தவன். பழந்தமிழ் நூல் நயத்தைப் போலவே, பழந்தமிழர் பண்பாட்டுப் பழக்க வழக்கத்திலும் உண்மைகள் இருக்கின்றன. நமக்கு மஞ்சளின் குணாதிசயங்கள் தெரிந்தும், அதை உபயோகம் செய்வதில்லை. 'தாழம்பூக்கலர்' பட்டுப்புடவை கட்ட ஆசைப்படும்பெண் மஞ்சளின் அழகை அனுபவிக்கிறதுபோன்று, அதன் குணத்தையும் அறிந்திருந்தால்? மஞ்சளுக்குக் கிருமியைக்கொல்லும் சக்தி உண்டு; புண் ஆற்றும் திறமையுண்டு; தோலிலே சுருக்கம் விழாது பளபளப்பை நிலைநிறுத்தும் வலிவும் வனப்பும் உண்டு; பருக்கள் துர்நாற்றம் மறையச் செய்யும். மஞ்சள் உபயோகித்துவந்த பெண்டிர் முகத்திலே களை,

வயதான பின்னரும் இருப்பதை இன்றும் பார்க்கலாம். பருவத்து ஜிலுஜிலுப்புக்கு அப்பால் முகக்களையை இழந்துவிடும் இன்றைய நவநாகரிக யுவதிகளைப் பார்க்கும்போது பரிதாபமாகவிருக்கிறது. ஒரு சிலரின் முகத்திலே, ஆண்மைக்களை அரும்புவதையும் பார்க்கிறோம்.

மஞ்சளை மறந்துவிட்டு மாக்கல்லில் தயாராகும் பௌடருக்கு அடிமைப்பட்டதால் மூஞ்சியிலே (முகம் என்றால் மஞ்சள் சேர்த்துக்கொள்ளும்) ஒருவித அசட்டு வெள்ளையும் சோகையும் படர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். மஞ்சளுக்குள்ள மருத்துவ குணங்களுக்காக அதை உணவிலும் உடம்பிலும் சேர்த்தார்கள். பச்சை மஞ்சள் பூசிய முகத்தில்தான் காந்தியும் சொலிப்பும் தனிமையான அழகும் குடிகொள்ளும்.

குங்குமம் பற்றிச்சொல்ல வந்தவன், மஞ்சளுக்குள் மயங்கிவிட்டது குறித்து நீங்கள் கோபிக்க வேண்டாம். குங்குமம் மஞ்சளின் மறு பிறவியென்பதை நம்முள் பெரும்பாலோர் அறிய மாட்டோம். பெண்கள் மஞ்சள்பூச வேண்டும் என்ற பரம்பரை, கோவிலில் அம்மனுக்குக் குங்குமம் சாத்தவேண்டும், அதுவே அர்ச்சனைப் பொருள் என்று சொல்லி வந்தது. சோப்பும் பவுடரும் சுனோவும் அலங்காரப் பொருள்கள்; அழகைத் தற்காலிகமாக எடுத்துக்காட்டும் பொருள்கள். யந்திர நாகரிகத்தினால் பட்டணத்தில் வாசம் செய்வோருக்கு, சோப்பு அவசியமான பொருள். அழுக்கை அகற்றி முகத்திலே மஞ்சள் சேர்த்தால் இன்னும் ஆரோக்கியம் அதிகம் என்பதைப் பலரும் சொல்லுகிறார்கள். மஞ்சளின் மகிமைக்கு ஈடே கிடையாது

மஞ்சளிலிருந்து குங்குமம் தயாரிக்கிறார்கள், என்ற விபரத்தை நேற்றுத்தான் நான் அறிய முடிந்தது. இதுவரை ஏதோ மாவுப் பொருள்களிலிருந்து தயாரிக்கிறார்கள் என்றே நினைத்தேன். சில ரகத்துக் குங்குமத்தை எடுத்தால், அது கையிலும் நெற்றியிலும் ஒட்டாது. இந்த மாதிரி நமக்கு ஒட்டாது போய்விடுகிறவை, வியாபாரிக்கு அதிக லாபம் தருகிறவை; இத்தனையும் மரிக்கேன் மாவிலிருந்து தயார் செய்யப்பட்டவை. கையிலே ஒட்டிக்கொண்டு நமக்கு ஆனந்தம் தருகிறவை மஞ்சள் குங்குமம்.

மஞ்சள் குங்குமத்தின் உற்பத்தி முறையைக் கடைக்காரரிடம் கேட்டபோது நான் அசந்து போனேன். ஒருநிறம் மற்றொரு நிறமாக மாறுவதிலே ஆனந்தம் இருக்கிறது. பாலில் டிக்காக்ஷன் ஊற்றும்போது, சந்தன நிறமாக வருகிறதே அந்த மாற்றம் நமக்கு மிகமிகப் பிடிக்கிறது. நிறங்கள் தம் இயல்பை இழந்து மற்றொன்றாக மாறும்போது பார்க்கவும் அனுபவிக்கவும் மனத்திலே பதியவும் பதிந்து இன்பம் தரவும் இடம் பிடிக்கின்றன. அந்தி வானத்தின் மாயா நாடகத்தை அனுபவிக்க முடிவது இந்த நிறபேதத்தினால்தானே.

மஞ்சள் தூளில், எலுமிச்சம்பழச் சாற்றைச் சேர்த்தால், நிறம் மாறி, குங்கும வர்ணம் வருகிறதாம், இரண்டும் இரண்டும் நாலாவது போன்று. எந்த நிற மாற்றத்திற்கும் அளவைகள் உள. உதாரணமாக, ஒருவீசை மஞ்சளைத் தூள்செய்து தனியாக வைக்கிறது, ஐம்பது எலுமிச்சம்பழம் சாறு பிழிந்து தனியாக வேறொரு பாத்திரத்தில் வைக்கிறது, இரண்டு பலம் வெண்காரம், இரண்டு பலம் படிக்காரம் பொடித்துச் சாற்றிலே கலக்கி, இதிலே மஞ்சள்தூளைக் கொட்டி, ஒருநாள் பொழுது வைத்திருந்தால், குங்குமக் குழம்பு வந்துவிட்டது. இந்தக் குழம்பை நிழலில் உலர்த்திக் காயவைத்தால், தூள் தூளாக இருக்கும். இப்படிக் காய்ந்ததை வஸ்திரகாயம் செய்து முடித்தால், கையில் படுகிறது பட்டுக் குங்குமம்; வெண்காரம் படிக்காரம் கூடுதல் குறைவு கலந்தால், குங்குமத்தின் நிறம் துய்ய-சிவப்பு, கருஞ்சிவப்பு, ரோஸ், வெளிறிய சிவப்பு இவ்வாறு ஏற்படும்.

குங்குமம் உயர்தரமாக இருப்பது, மஞ்சளிலிருந்து பிறந்ததால்தான். கோவில் அருகாக இருக்கும் வீதிகளிலே குங்குமம் குடிசைத் தொழிலாக நடக்கின்றது. பெரிய பெரிய கோவில்கள் உள்ள ஊர்களில் முக்கியமாகப் பெண்களுக்கு இது பிழைப்புத் தரும் தொழில். மதுரை, திருச்சி, திருவரங்கம், தஞ்சை ஆகிய இடங்களைத் தவிர்த்தும், சிற்றூர்களிலும் இது மங்களகரமான தொழில்.

ஆனால் இன்று, மரிக்கேன்மாவை வாங்கி வர்ணம் கலந்து குங்குமம் விற்கிறார்கள். பக்தர்களுக்குப் பக்தி குறியே தவிர, எது உண்மையான குங்குமம் எது போலியான குங்குமம் என்ற பாகுபாடு அறியமுடியாது காணிக்கை மட்டும் செலுத்தி வருகிறார்கள். குங்குமப் போலி வந்ததோடு நின்றதா? அதிலே பளபளவென ஜிகினாக்களைக்கொட்டி அருவருக்கும் நிறங்களிலே நீலம் ஊதாமுதல் தவிட்டு நிறம் வரை கொண்டுவந்துவிட்டார்கள். என்ன நோக்கத்தோடு மஞ்சளைத் தாயாகக்கொண்டு, குங்குமம் பிறந்ததோ, அந்தப் புனிதமானகுணம் போய் ஒப்புக்கு நிற்க ஆரம்பித்துவிட்டது. வயலில் களையும் பயிரும் இணைந்து வளர்ந்தாலும் களையின் மூர்க்கம் அதிகமாக இருக்கும். அப்படித்தான் ஜிகினா குங்குமம் வளர்ந்த கதை. பயிரைவிட முக்கிய புள்ளியாகத் தலை தூக்கும் களைக்கு வலு இருக்கலாமா? மஞ்சளே இல்லாத குங்குமத்தில், ஜிகினா போடுவதும் அதை ஆசையோடு வாங்கி இடுவதும் தவறான காரியங்கள். உணவுப் பொருள்களில் கலப்புச் செய்து விட்டால், சுகாதார அதிகாரிகள் பிடித்துத் தண்டிப்பது போல இந்தப் புனிதப் பொருளுக்குக் கலப்புச் செய்கிறவர்களை யார் தண்டிப்பது? இந்த மாதிரி போலிச்செயலை வியாபாரத்தின் சகல துறைகளிலும் புகுத்தி, மக்களைப் படாதபாடு படுத்துகிறார்கள். கடவுளுக்கே அர்ச்சனைப் பொருளான இதன் மீதுகூடக் கலப்

புச்செய்வதா? கடவுளுக்கேஇந்தப் போலிக் குங்குமம் வழங்கவந்துவிட்டதை எண்ணும்போது தான் வருத்தமாக இருக்கிறது.

ஆரம்ப நிலையில் நல்ல நோக்கதுடன், குறிக்கோளுடன் எழும் காரியங்கள், நாளாவட்டத்தில் பழக்கம், அதிகத்தேவை, காரணமாக எதிரிடையான பலனைத் தரும்படி செய்துவிடுகின்றன. குதிரை கீழேதள்ளி, குழியும் பறித்தது என்றபழமொழிப்படி போலிகள் மஞ்சளைவிரட்டியடித்துவிட்டுக்குங்குமம் உருவில் கோயில்களிலே உலவுகின்றன. கோவிலில்லாத ஊரிலே குடியிருந்தாலும் குடியிருக்கலாம், மஞ்சள் இல்லாக் குங்குமத்தைமட்டும் வாங்கவேண்டாம்.

சர். சி. வி. ராமன், ஜே. ஸி. போஸ் இருவரையும் போன்று, புதிய உண்மைகளை நான் சொல்லிவிட்டதாக எண்ணவேண்டாம். எல்லா நல்ல விஷயங்களையும்போன்று இந்த விபரத்தை நானாகப் பிறரிடமிருந்து தெரிந்துகொண்டது தான். சிவப்புத் துணியைக்காட்டி, மாடுகளை மிரளவைப்பது போல, மஞ்சள்தூள் அல்லாத குங்குமம் வந்து, பாழ்நெற்றியில் பரவிவிட்டதை நினைக்கும்போதுதான் மிகமிகக் கஷ்டமாகவிருக்கிறது. மதப் பற்றுக்காரணமாகத் திலகம் இடுவதைவிட, அழகுக் கலைகாரணமாகப் பார்த்தாலும் குங்குமம் எத்தனை அவசியம் என்பது தெரியும்.

நம்மைவிட்டு விலகிவரும் நல்ல பழக்கங்களில் இதுவும் ஒன்றாகி வருகிறது. மேலைநாட்டு நாகரிகத்தைப்பின்பற்றி, நம்நாட்டுச் சீதோஷ்ணத்திற்கு ஒவ்வாத உதட்டுச்சாயம், விரல் நகச்சாயம் இவை தேய்ப்பவர்கள், கண்ணுக்கு மையிடுகிறவர்கள் நெற்றிக்குமட்டும் இதை மறப்பானேன்?

அதிகச்செலவே இல்லாத மருதோன்றிச் சாயம், இயற்கையானது. உள்ளங்கை பாதம் இரண்டிற்கும் நகங்களுக்கும் கொள்ளையழகு தருவது. இதை மறந்துவிட எத்தனை படிப்புப் படித்துவிட்டோம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, பரிகாசம் நிறைந்த இப் பழமொழியே, குங்குமம் சுமந்த பிராணியை நம்முள்ளம் நினைவில் வைத்திருக்கும்.




# உதவாக்கரை

**ரா. ஸ்ரீ. தேசிகன்**

ஓர் அழகான அந்திப் பொழுதில் செக்கர் வானத்தை நோக்கிய வண்ணமே இருந்தேன். இயற்கைத்தேவி வானக்கிழியில் பல வர்ண சித்திரங்களை வரைந்து கொண்டிருந்தாள். பல காட்சிகள் தோன்றி மறைந்தன. அந்திப் பொழுதின் இறுதிக்காட்சியின் மீது இருள்திரை விழுந்து விட்டது. மீன் கணங்கள் தோன்றின. சந்திரனும் கிளம்பி விட்டான். நிலவு வெள்ளத்தில் எல்லாம் தோய்ந்து கிடந்தன. புகலரும் பொலிவு எங்கும் படர்ந்தது. என்னுடைய கல்லூரிச்குப் பக்கத்திலுள்ள பக்கிங்காம் கால்வாய் கூட ஒரு புனித தெய்வநதிபோலக் காட்சி அளித்தது. அங்கே மிதக்கும் சிறு படகுகள் கூடக் காதலர்களை அழைத்துச் செல்லும் தங்கப் படகுகள் போலத் தோன்றின. என் மனம் ஒரு தனி உலகத்தில் திரிந்தது. கடலின் அரவமும் என் செவியில் ஒரு நல்லிசைக் கானம் போல் மதுரமாய் ஒலித்தது, நான் அந்தக் கால்வாய் ஓரமாய்ச் சென்று கொண்டிருந்தேன். அங்கே ஒரு மூலையில் ஒரு கொடி ஒய்யாரமாய் ஆடிக்கொண்டிருந்தது.

இந்த அற்பக் கொடிக்கு இத்தனை தருக்கா? என்றெண்ணினேன். வானத்தில் எத்தனையோ கோளங்கள் சுற்றுகின்றன. அநேக சூரியர்கள் சந்திரர்கள் இருக்கிற இடத்தில் இந்த அற்பக்கொடிக்கென்ன வேலைஎன்ற எண்ணமும் மீண்டும் வந்தது.

இதையே சிந்தித்துப் படுத்திருந்தேன். விடியற்காலம் நான்கு மணி இருக்கும். ஓர் அபூர்வமான கனவு என் மன அரங்கில் எழுந்தது. ஒரு தெய்வ சபை என் கண்முன் விரிந்தது. அதற்கு நாயகன் எல்லாம்வல்ல நடராஜன்தான். அவருக்கு முன் தெய்வ மங்கையர் நடனமாடினர். ஒரு தெய்வகானம் அமரநாட்டை நிரப்பிற்று. பலவித இசைக்கருவிகளுக்கிணங்க ஒரு கான விருந்து நடந்துகொண்டிருந்தது. திடீரென்று அந்தச் சபையில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. ஏதோ ஓர் அபஸ்வரம் எழக்கண்டார்கள். என்ன, என்ன, இப்படி நிகழுமா? என்று ஒருவரையொருவர் நோக்கினார்கள். என்ன அபசாரம் செய்தோமோ என்று அமரர்கள் வருந்தினர். ‘இப்படி அபஸ்வரம் எங்களிடத்தில்—அதுவும் உங்கள் சன்னிதானத்தில் — ஏற்பட்டதில்லை. அதன் காரணத்தை அருளுங்கள் என்றனர்.

பூலோகத்தில் ஒருவன் நான் படைத்த கொடியை நிந்தித்துவிட்டான். அது கோபித்துக் கொண்டு தன்னுடைய நடனத்தை நிறுத்திவிட்டது. அதனால்தான் உங்கள் சங்கீதத்தில் ஒரு குறை ஏற்பட்டது. அதைச் சமாதானப்படுத்திவிட்டேன். இப்பொழுது மீண்டும் தொடங்குங்கள். முன்போல் அமரகீதம் ஒலிக்கும் என்றார் அந்தச் சபாநாயகர். சங்கீதம் மீண்டும் என் செவியில் பாய்ந்தது. இன்ப அலைகள்மீது மிதந்து கொண்டே சென்றேன். அதை மாந்தியபடியே படுத்திருந்தேன்.

என் கனவுங் கலைந்தது. அன்றுமுதல் என்னிடத்தில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. பசும் புல்லிலும் ஒரு சோலையைக் கண்டேன்; மலரிலும் ஒரு தெய்வ ஒளி வீசிற்று.

என்னையே நான் நொந்து கொண்ட நாளுண்டு, ஆனால் இப்பொழுது என்னிடத்தில் ஒரு புதிய சக்தி ஓடக் கண்டேன். எனக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் இடமுண்டு. நான் இல்லாமற் போனேனானால் ஆண்டவன் இந்த அகில நாடகத்தை நடத்த முடியாது; அப்படி நடத்தினாலும், அது ஒரு பூர்ண நாடகமாகக் காட்சி அளிக்காது என்ற தீர்மானத்திற்கு வந்தேன். எல்லாவற்றிற்கும் ஏதோ ஒரு பொருள்—அர்த்தம் இருப்பதாக உணர்ந்தேன். உதவாக்கரை என்ற சொல் எங்கேனும் எழுமானால் உள்ளத்தின் மீது ஒரு சோகம் படரும்.

என் மனைவிக்கு வயதாகிவிட்டது. அவள் முன்போல் காரியஞ் செய்ய முடியவில்லை. மாடிக்கும் கீழுக்கும் ஓடியாடித் தண்ணீர் கொண்டு வருவதென்றால் கஷ்டமான அலுவல் தான். குழந்தைகள் விளையாட்டில் கவனத்தைச் செலுத்திய காரணத்தால் குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய காரியங்கள் வேப்பங்காயாய்ச் கசந்தன. என் பெண் காமாட்சியைக் காரியஞ் செய்யச் சொன்னால், படிப்பென்று புத்தகத்தை எடுத்துக்கொண்டு உரக்கப் படிக்கத் தொடங்கிவிடுவாள். காரியஞ் செய் என்கிற பொழுதெல்லாம் ஒரு சாக்கைச் சொல்லிவிட்டு வெளியே சென்றுவிடுவாள், ‘இப்படி இருக்குமா? இந்தப் பெண். எல்லாம் நீங்கள் கொடுக்கிற செல்லம் தான். இப்பொழுது தெரியாது. உங்களை ஒன்றுஞ் சொல்லமாட்டார்கள். இப்படிப் பெண்ணை வளர்த்திருக்கிறாளே அவள் என்று என்னைத் தான் தூற்றுவார்கள்’ என்று என் மீது கோபம் கொள்ளுவாள்.

‘அது ஓர் உதாவக்கரை’ என்று சொல்லுவாள். இப்படிச் சொல்லுகிறாளே என்ற வருத்தம் ஏற்படும்; ஆனால் அவளுக்கு அந்தப் பெண் உதவவில்லை. உண்மைதான். மிகுதியான காரியங்களில் எழும் கசப்புமேல் என் மனைவி சொல்லுகிற வார்த்தைகளில் குற்றமில்லை. ஆனால் உதவாக்கரை என்ற வெஞ்சொல் என் மனத்தைப் புண்படுத்திவிடும்.

ஓர் இரவு ஒரு பழுத்த நிலவில் நான் மாடத்தின் மீது உட்கார்ந்தேன். என் குழந்தைகள் தூங்கிவிட்டன. என் மனைவி வீட்டுக் காரியங்களைச் செய்துவிட்டு மாடத்திற்கு வந்தாள். என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு என்ன யோசிக்கிறீர்கள்? என்று கேட்டாள்,

ஒன்றுமில்லை. நாணு ஐயர் இறந்துபோவதற்கு முன்பு என்னிடம் ஒரு சமாசாரம் சொன்னார். அது ஒரு கதைபோல இருக்கிறது; அதைச் சொல்லலாமா?’ ‘ஆகா சொல்லுங்கள் கேட்கிறேன்.’

'நாணு ஐயரைத் தெரியுமோ உனக்கு?' 'ஏன் நன்ருகத் தெரியுமே. காலையில் எழுந்திருந்து பட்டை பட்டையாய் விபூதியைப் போட்டுக்கொண்டு கீதை வாசிப்பாரே. அவரைத்தானே சொல்லுகிறீர்கள்.'

'ஆம், ஆம், அவர் ஒரு பெரும் பாவத்தைச் செய்யத் துணிந்தார்.' 'அதென்ன? ஆச்சரியமாயிருக்கிறதே. அவர் ஒரு சிவப் பழமாயிற்றே'

'சொல்லுகிறேன் கேள்.

'நாணு ஐயர் ஒரு பரம ஏழை. நான்கு சாத்திரம் படித்தவர். அவரை ஈச்வரன் மிகவும் பரிசோதித்துவிட்டான். அவருக்கு அனந்தர வார்சு சொத்து வரும்போலிருந்தது. ஆனால் தாயாதிக்காரனுக்குப் பிள்ளை பிறந்துவிட்டது.

'பிள்ளை பிறந்தவுடன் இவருடைய கனவுகள் ஆசைகள் எல்லாம் எல்லாம் மண்ணோடு மண்ணாய்ப் போயின. அந்தக் குழந்தையைக் கொன்ருல் என்ன? என்ற எண்ணமும் தோன்றிவிட்டதாம்'' என்று கண்ணீர்விட்டுச் சொன்னார் அவர்.

'இந்தக் காலத்தில் கொலைக்கு அஞ்சமாட்டார்கள்' அவர்களுக்குத்தான் காலம். இப்பொழுது இந்த ஊரில் மைனராய் விளங்குகின்ருரே ஒருவர், அவருடைய சுவீகாரத் தகப்பனுருக்கு எப்படிச் சொத்துச் சேர்ந்தது என்ற விஷயமும் எனக்குத் தெரியும்.'

''அதென்ன சொல்லேன்' என்று என் மனைவியை வினவினேன்.

'தாயாதிக்காரனைக் கொன்று ஒரு வீட்டில் தொங்கவிட்டுவிட்டான் அந்தப் பிராமணன். அந்த வீட்டில் பேயடைந்திருக்குமென்ருர்கள். ஆனால் அது ஒரு பங்களாவாய்க் காட்சி அளிக்கின்றது. அதில் பிள்ளைகுட்டிகளைப் பெற்றுக் கொண்டு ஒருத்தர் இருப்பதாகக் கேள்வி.

'கொன்ற கொடும்பாவி குலம் அழியுமென்ருர்கள். அந்த மைனருக்குக் குழந்தைகளுக்குக் குறைவில்லை. தகப்பன் புரிந்த பாவம் ஒன்றும் கஷ்டத்தைக் கொடுக்கவில்லை. சம்பத்து, சந்தானம் எல்லாம் பெருகிக் கொண்டுதான் வருகின்றன.

'நீங்கள் தர்மம் செய்கின்றீர்களே, உங்களுக்கென்ன வருகிறது. கைமேல் பலன் கிடைக்கிறது, அதுதான் கட்டி, முதுகுமேல் சிரங்கு. இதுதான் நீங்கள் செய்கிற புண்ணியத்தின் பலன். அந்தப் பிராமணன் காற்று இந்த நாணு ஐயருக்கும் அடித்ததோ.'

'அப்படித்தான் வைத்துக்கொள். ஆனால் அவர் மனப் போராட்டத்தை என்னிடம் சொன்னார். நரக வேதனைக்கு மேல் அது போய்விட்டது'

'கொன்ருல் என்ன? ஆத்மாவுக்குத்தான் அழிவில்லையே? என்ற எண்ணம் வந்ததாம். எல்லாப் பூதங்களிடத்திலும் அன்பு காட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறதே, அதற்கென்ன சொல்லுகிருய் என்று அவர் மனம் பதில் கேட்டதாம். கொலை களவு — இவை மகா பாவங்கள் அல்லவா? என்ற ஒரு நல்ல எண்ணம் வருமாம். நான் வறுமையில் வாடுகின்றேனே. கொன்று சொத்தை அபகரித்தால் என்ன? எத்தனையோ கொலையெல்லாம் செய்துவிட்டு உலகத்திற்குப் பெரியவர்களாய் கலைவாணர்களாய் உபதேசம் செய்யக்கூட வந்திருக்கிருர்களே. அந்தக்கயவர்கள்; தெய்வமிருந்தால் இப்படி நடக்குமா? தெய்வம் என்று சொல்லுவதெல்லாம் மக்களைப் பயப்படும்படி செய்வதற்காக ஏற்பட்ட வெறுஞ் சொல்லா என்ற எண்ணமும் வந்ததாம்.'

'கீதை, இராமாயணம், பாரதம், பாகவதம் இதெல்லாம் பாராயணம் செய்கிறவர்களுக்கா இந்த மாதிரி எண்ணங்கள் வரவேண்டும்?'

'மனது பொல்லாது அம்மா; அது இருக்கிற வரையில் எல்லாக் கெடுதலான எண்ணங்கள் வரத்தான் வரும். அவைகளை அடிக்கடி அடித்துத் துரத்த வேண்டும்.' 'பிறகு என்ன செய்தார்' 'குழந்தைக்கு விஷம் வைத்துக் கொன்று பாழுங் கிணற்றில் தள்ளலாம் என்ற கோர எண்ணம் தலை விரித்தாடிற்றும்.

'குழந்தைக்கு வேண்டிய பக்ஷணங்களைக் கொடுத்து ஆசைகாட்டி அழைத்துக்கொண்டுபோய்விட்டார். அதற்கு விஷம் கொடுக்கிற சமயத்தில் நம்முடைய வீட்டைக் கூட்டுகிற வீராயி மகள் செல்லம் அந்த இடத்தில் பாடிக்கொண்டுவந்தாளாம்.'

'அந்தக் குட்டியின் பாட்டை நான் கேட்டிருக்கிறேன்; அது நன்ருய்ப் பாடுமே.

'என்ன பாட்டு பாடித்தாம்.?'

'அறத்தைச் சிதைத்தல், அருளை மாய்த்தல், கொலை புரிதல், குலத்தை அழித்தல், அந்தணர் புரியும் அறமோ என்று பாடினளாம். இவையே. பிறகு 'காதற்ற ஊசியும் வாராதுகாண் உன்கடை வழிக்கே' என்ற அடியையும் பாடி அகன்ருளாம்.

'நாணு ஐயரின் மனம் சட்டென மாறிவிட்டது. குழந்தையை வீட்டிற்குக் கொணர்ந்து சேர்த்து விட்டார், இதற்குள் ஊரெல்லாம் குழம்பிப் போய்விட்டது. குழந்தையைக் காணுமே, குழந்தையைக் காணுமே என்று பெற்றோர்கள் மனம் பதைத்துவிட்டது.

'குழந்தையைக் கண்டதும் வாரி அணைத்துக் கொண்டனர். பெற்றோர்கள் எங்கே குழந்தாய் போயிருந்தாய் என்ருர்கள்.

'தாத்தா பட்சணம் கொடுத்தா அம்மா' என்ருன் அக் கள்ளங் கபடில்லாத பையன்.

'பகவான்தான் உங்கள் குழந்தையைக் காப்பாற்றினுர்' என்ருர் நாணு ஐயரும்.

'நீங்கள் இல்லாமற் போனல் குழந்தையின் கதியாதாகுமோ? நீங்கள் தான் தெய்வம் போலக் காப்பாற்றினீர்கள்' என்றனர்.

'வீராயி கூடத் தன் பெண்ணைக் காணுது தேடினுள். வீட்டிற்கு வந்ததும் அந்தக் குழந்தையின் மீது விழுந்த அடிகளுக்குக் கணக்கு வழக்கில்லை. அந்தப் பெண்ணுல்தான் அவர்கள் பிள்ளை பிழைத்தது. நாணு ஐயர் உய்ந்தார் என்றதை அவள் அறிவாளா?' என்றேன்

'நானும் என் குழந்தையை உதவாக்கரை யென்று சொல்லுகின்றேனே. அதனிடத்தில் எத்தனை குணங்களிருக்கின்றனவோ என்று சொல்லிக் கொண்டு அவளும் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

நிலவு காய்ந்து கொண்டிருந்தது. அந்தத் தெய்வ கானம் என் செவியில் மீண்டும் விழத்தொடங்கிற்று. அந்த அமர கீதத்திற்கு ஏற்றவாறு அந்தக் கொடியும் பழுத்த நிலவில் நடனமாடக்கண்டேன்.

# விஞ்ஞானத் - - - - - துணுக்குக்கள்

நா. கி. நாகராசன்

## அப்பழுக்கற்ற வெல்லம்

நமது நாட்டில் சாதாரணமாகத் தயாரிக்கப்படும் வெல்லம் தெளிவற்ற நிறத்தையும் ஒருவகை மணத்தையும் கொண்டிருக்கும், காற்றுப்பட வைத்தால் இது சில சமயங்களில் கசிவதும் உண்டு. இக்குறைகள் இல்லாது அழகிய தோற்றமுள்ள வெல்லத்தைத் தயாரிக்கும் எளிய முறையொன்றை நம் நாட்டின் ரசாயன அறிஞர் மூவர் கண்டுபிடித்திருக்கின்றனர். கருப்பஞ்சாற்றில் சிறிதளவு ஆமணக்குப் பிண்ணாக்கைச் சேர்த்துவிட்டால் அதிலுள்ள அசுத்தங்கள் அனைத்தும் பிரிந்துவிடுகின்றன. இந்தச் சாற்றிலிருந்து பெறப்படும் வெல்லம் அப்பழுக்கற்று இருக்கும்.

## உலோக மழை!

உலோகம் திரவமாக உருகி மழையாகப் பெய்தால் எப்படி இருக்கும்? அமெரிக்காவில் உலோக வேலைக்கலையில் கண்டுபிடிக்கப்பட்ட முறை வழக்கத்திற்கு வந்தால் உலோக மழை பெய்யும் காட்சி தொழிற்சாலையில் சர்வசாதாரணமாய்விடும். உலோகத்தை உருக்க ஒரு பாத்திரம் தேவையாகிறது. இப்பாத்திரத்தினால் பல தொல்லைகள் நேருகின்றன. இது அதிகமான சூட்டைத் தாங்க ஏற்றதாகவும், உருகிய உலோகத்தை ரசாயன முறையில் பாதிக்காததாகவும் இருக்கவேண்டும். இதற்காகப் பல எச்சரிக்கைகள் எடுத்துக்கொள்ள நேருகிறது. ஆயினும் பாத்திரத்தினால் உலோகமானது சிறிது கலப்படம் அடைந்தே தீரும். இத்தொல்லையில்லாமல் பாத்திரத்தின் உதவியின்றியே உலோகத்தை உருக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. உருக்கவேண்டிய உலோகக் கட்டியை மின்சாரக் காந்தம் தரையிலிருந்து மேலே உயர்த்தி அந்தரத்தில் நிற்குமாறு செய்யும்! கட்டியைச் சுற்றிலும் அதைத் தொடாதவாறு கம்பிச் சுருள்கள் இருக்கும். இவற்றில் மின்னோட்டங்களை நிகழ்த்தினால் கட்டியிலும் மின்னோட்டம் நிகழும். இதனால் அது சூடேறி உருகும். இப்போது அது வானத்திலிருந்து மழைபோலப் பொழியலாமல்லவா?

## கடிகார ரேடியோ

கைக் கடிகாரத்திலும், பவுண்டன் பேனாவிலும் ரேடியோவை அமைத்து அவற்றின் உதவியால் டோகியோவுக்குச் செய்தி அனுப்பிய ஜப்பானிய உளவாளிகளைப் பற்றிப் போரின்போது பல வதந்திகள் வெளி வந்தன. இவற்றில் உண்மையில்லாமல் இருக்கலாம். ஆனால் இத்தகைய ரேடியோக்கள் எங்கெங்கும் பயன்படும் காலம் விரைவில் வரக்கூடும் என்பது அண்மையில் வெளிவந்த செய்தி ஒன்றிலிருந்து தெரிகிறது. ஜெர்மானியம் என்ற உலோகம் மனிதனுக்குப் பயன்படாது ஆராய்ச்சிச் சாலையின் ஒரு மூலையில் கவனிப்பாரற்றுக் கிடந்த ஒரு பொருள். இதில் கடுகளவை எடுத்துக்கொண்டு அதைக் கம்பிகளால் இணைத்து மின்சாரத்தைக் கடத்தாத பிளாஸ்டிக் பொருளில் பதித்துவிட்டால் இது ஒரு ரேடியோ வால்வைப் போல் இயங்குகிறது. இத்தகைய வால்வை ரேடியோவிலும், டெலிபோனிலும் பயன்படுத்தலாம். இதனால் இக்கருவிகளை மிகச் சிறியனவாக அமைக்கலாம். ஒரு மின்சார பாட்டரியின் உதவியால் இந்த வால்வைப் பல ஆண்டுகள் இயக்கலாம். சாதாரண ரேடியோ வால்வு ஒன்றை இயக்கத் தேவையாகும் மின்சாரத்தைக்கொண்டு சில ஆயிர ஜெர்மானிய வால்வுகளை இயக்க முடியும், சாதாரண வால்வு இயங்

கும் போது வெப்பம் தோன்றுவதைப்போல் இதில் தோன்றுவதில்லை. வருங்காலத்தில் ரேடியோ வால்வுகள் பல புதுவகைகளில் பயனுக இவை உதவலாம்.

## உடல் மெலிந்தோர்க்கு நற்செய்தி

நீண்ட நாள் காய்ச்சலினுலும், உடலை வாட்டும் வேறு நோய்களினுலும் பலவீன மடைந்தவர்களுக்கு, சானடோஜன் (Sanatogen) போன்ற மருந்துகள் முன்னர்ப் பயன்பட்டுவந்தன. இவை இப்போது கிடைப்பது அரிதாகவும், விலையுயர்ந்தவை யாயும் ஆய்விட்டன. எளிதாகவும், மலிவாகவும் இம்மருந்தைத் தயாரிக்கும் முறையொன்று மைசூரிலுள்ள மத்திய உணவாராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. பாலிலுள்ள கேஸீன் (Casein) என்ற புரதச் சத்தைத் தக்க ரசாயனத் திரவத்தில் கரைத்து, தாழ்ந்த வெப்ப நிலையில் உலரவைத்து, பொடித்து, தேவையான உலோக உப்புக்களையும், வைடமின்களையும் கலந்து இன்சுவையுடன் இதைத் தயாரிக்கிறுர்கள். இது ஏழைகளின் டானிக்காக நம் நாட்டில் பயன் பட வழி உள்ளது.

## வறண்ட அறுவடை

வயலிலுள்ள பயிர்கள் முற்றியதும், அறுவடைக்கு முன்னரே அவை தக்க அளவு உலர்ந்துபோகுமாறு செய்ய அமெரிக்காவில் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறுர்கள். பயிர்களின் மேல் சில ரசாயனப் பொருள்களைத் தெளித்து விட்டால் அவை தமது நீரை இழந்து உலர்ந்து போகின்றன. சூரிய ஒளி குறைவான நாடுகளில் அறுவடையான பயிர்களை உலர்த்துவதில் நேரும் தொல்லைகளை இதனுல் தவிர்க்கலாம். ஈரத்தை இழக்கும் தானியங்கள் இன்னும் சீராகப் பழுப்பதால் விளைச்சலும் அதிகமாகிறது. பயிர்களின் ஈரத்தைக் குறைப்பதால் பூஞ்சைகள், கிருமிகள் முதலியவற்றுல் நேரும் தொல்லை குறைகிறது. ஓரளவு உலர்ந்த பயிர்களை எந்திரங்களால் அறுவடை செய்வதும் எளிதாகிறது. இம்முறை இப்போதே அமெரிக்காவில் வழக்கத்திற்கு வந்துவிட்டது.

## ஏகலைவன் இருந்திருந்தால்....!

வில்வித்தையில் அபாரமான திறமை பூண்டு விளங்கிய ஏகலைவனிடம் வலது கைப் பெருவிரலைக் காணிக்கையாகப் பெற்ற துரோணர் கதையைப் பாரதத்தில் படிக்கிறேம். பெருவிரலை இழந்த ஏகலைவனின் திறமை மறைந்தது. ஆனுல் அவன் இக்காலத்தில் இருந்திருந்தால் துரோணரது சூழ்ச்சி பலித்திராது! ஒருவர் ஏதாவதொரு உறுப்பை இழந்துவிட்டால் வேறெருவர் உறுப்பிலுள்ள சதையையும், எலும்பையும், தோலையும் அது இருந்த இடத்தில் ஒட்டவைத்து வளர்க்கும் கருவி மருத்துவ (Surgery) முறைகள் தற்காலத்தில் பெருமுன்னேற்ற மடைந்துள்ளன. பெருவிரலை இழந்த ஒருவனுக்கு வேறெருவர் விரலை அங்கு நட்டு, அது பெருவிரலாக வளரும்படி செய்தார்கள். வடிவ மருத்துவம் (Plastic Surgery) என்ற இந்த நவீன விஞ்ஞானத் துறைக்கு ஆதிகாரணமாக இருந்தவர்கள் பழங்கால இந்துக்கள் என்பது இக்காலத்தில் நமக்கு வியப்பை அளிக்கிறதல்லவா?

## முடக்கு வாதத்திற்கு மந்திரம்

பலவகை நோய்களுக்கு மந்திரம் போடும் வழக்கம் இன்றும் நம்நாட்டில் இருந்து வருகிறது. மந்திரவாதி கூறும் மந்திர ஒலிகளுக்கும் உடலியல் விளைவுகளுக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதோ இல்லையோ நாம் அறியோம். ஆனுல் படிகக்கல்லை மின்சாரத்தினுல் துடிக்கச் செய்தால் அது ஒலியலைகளைப்போன்ற அலைகளைத் தோற்றுவிக்கிறது. இவை காதுக்குக் கேட்காத ஒலி அலைகள். தற்காலத்தில் இவை சலவைத் தொழிலிலிருந்து, உலோகத் தொழில்வரை பலவாறு பயன்படுகின்றன. வெகுநாட்களாக ஆருத புண்களின்மேல் இவற்றை விழச்செய்தால் அவை விரைவில் ஆறிப் போகின்றன. காதில் விழாத இந்த மந்திர ஒலிகளால் தலைவலி, முடக்குவாதம் முதலிய நோய்களையும் குணப்படுத்த முடியும் என்று கண்டிருக்கிறுர்கள்.

## ஒளி வீசும் கண்ணுடி

கண்ணுடி சாதாரணமாக மின்சாரத்தைக் கடத்துவதில்லை. ஆனுல் அதன்மேல் வெள்ளீய உப்புக்கள் சிலவற்றைப் பூசி அடுப்பில் சுட்டு எடுத்துவிட்டால் அது மின்சாரத்தைக் கடத்தும் திறமையைப் பெறுகிறது. இத்தகைய கண்ணுடியின் வழியே மின்சாரத்தைச் செலுத்தினுல் அதன் மேற்பரப்பு முழுதும் பிரகாசமாக

ஒளி வீசும். வெப்பத்தை வெளிவிடாது ஒளியை மட்டும் தரும் இந்த 'விளக்கு' பல அழகிய வடிவங்களில் அமைக்கப்பட்டு வீடுகளிலும், கடைகளிலும் பயன்படலாம். வேறொரு வகையிலும் இந்தக் கண்ணாடி பயன்படலாம். குளிர் நாடுகளில் கண்ணாடி ஜன்னல்களின்மேலும், மோட்டார் வண்டியின் முன்புறத்திலுள்ள கண்ணாடியின் மேலும் பனிக்கட்டி உறைந்து தொல்லை கொடுக்கும். இக்கண்ணாடிகளை இவ்வாறு மின்சாரம் கடத்தும் திறனுள்ளவையாகச் செய்துவிட்டால் உறைபனி படியும்போது அவற்றின் வழியே மின்சாரத்தைச் செலுத்தி அதை நொடிப் பொழுதில் கரைத்துவிடலாம்.

## பெனிசிலினுக்குப் புது உறவினன்

பெனிசிலினைக் கண்டுபிடித்த பேரறிஞர் சர் அலெக்ஸாண்டர் பிளெமிங்கு இப்போது சென்னையில் இருக்கிறார். இவர் உலகிற்குத் தந்துதவிய மாய மருந்திற்குப்பின் நூற்றுக்கணக்கான வேறு நுண்ணுயிர்ப் பகைகள் (Anti-biotics) கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. அவற்றுள் அண்மையில் ஓர் உயிர்ப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பெயர் புரோடியஸ் (Proteus) இதை வளர்க்கும்போது செத்த க்ஷய நோய்க் கிருமிகளை இதற்கு உணவாக அளிக்கிறார்கள். இதை உண்டு வளரும் இப்பொருள் இவற்றிற்குப் பகையான மாற்றுப் பொருளைத் தயாரித்துக்கொள்கிறது. பிறகு இப்பொருளை உடலிற் செலுத்தினால் உடலிலுள்ள கிருமிகளை அழித்து இது நோய்க்கு மருந்தாகிறது. சோதனை நிலையிலுள்ள இம்மருந்து வழக்கத்திற்கு வந்தால் மானிடனின் கொடிய பகைகளுள் ஒன்றான க்ஷயத்தைக் கட்டுப்படுத்த பூரண வெற்றிதரும் முறை தோன்றலாம்.

## நிலக்கரி தரும் செல்வம்

மூடிய கலத்தில் நிலக்கரியை இட்டுச் சூடேற்றி அதைச் சிதைத்து அதிலிருந்து பல திரவப் பொருள்களையும், எரி வாயுவையும் பெறுகிறார்கள். திரவமாகக் கிடைக்கும் தாரிலிருந்து ஆயிரக்கணக்கான ரசாயனப் பொருள்கள் பெறப்படுகின்றன. இதைவிட எளிதில் இப்பொருள்களை நேரடியாக நிலக்கரியிலிருந்து பெறும் முறையொன்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நிலக்கரித் தூளுடன் சில தாது எண்ணெய்களைக் கலந்து பசைபோல் செய்து, அதை அதிகமான அழுத்தத்திற்குட்படுத்திச் சூடேற்றினால் அது தானே திரவமாகிவிடுகிறது. இந்தத் திரவத்திலிருந்து முன்பு தாரிலிருந்து பெற்ற பொருள்கள் அனைத்தையும் வேறு சில புதுப் பொருள்களையும் பெறலாம். இம்முறை வழக்கத்திற்கு வந்தால் தற்போது விலையுயர்ந்தவையாக உள்ள பல பொருள்கள் நீரைவிட மலிவானவையாய்விடும். இதனால் ரசாயனத் தொழிலில் புரட்சிகரமான மாறுதல்கள் விளையலாம்.


தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள
கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக்
காப்பாற்றிக்கொள்ளுங்கள் ...
லைப்பாயின்
பாதுகாக்கும்
நுரையினால்!
LIFEBUOY SOAP
LIFEBUOY
SOAP
நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவறாமல் ஸ்னானம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது, உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
லைப்பாய் சோப்
தினசரித்தொல்லையான கிருமிகளிலிருந்து தினமும் உங்களைக்காப்பாற்றுகிறது
L. 227A-50 TM

தொடர் கதை

# லக்ஷிய புருஷன்

கே. சுந்தரம்மாள்

9

அவ்வருஷமும் வழக்கம்போல்! ஸ்ரீராமநவமி முடிந்து, புவனேசுவரரின் உத்ஸவத்திற்காக, ஈசுவரய்யர் இல்லத்தில் யாவரும் கூடியிருந்தார்கள். உத்ஸவத்தில் ரிஷபவாஹன தினமே மிகச்சிறந்ததாகும். சுற்றுப்புறங்களிலிருந்தும் ஜனங்கள் கூடுவார்கள். பெயர் பெற்ற மேளகாரன் வருவான். ரிஷபவாகன ஊர்வலக்காட்சியுடன் நடன மாதர்கள் நடனமாடுவார்கள். (உத்ஸவத்தின் ஒருநாள் கோவிலுக்குள்ளிருக்கும் மஹாமண்டபத்தில் ஹேமாவின் நடனம் கூட நடக்கும்) அன்றும் அவ்விதமான கோலாகாலத்துடன், அஸ்தமித்து ஏழுமணிக்குப் புறப்பட்ட ரிஷபவாஹனம் விடியற்காலம் மூன்று மணிக்குக் கோவிலுக்குள் வந்தது. ஈசுவரய்யர் வீட்டில் வந்து படுக்கும்பொழுது மணி நான்கு. மறுபடியும் ஆறுமணிக்கே எழுந்திருந்து கோவிலுக்குச் சென்றுவிட்டார். காலை காப்பி பலகாரம் முடிந்ததும் ராஜா ஹேமா இருவரையும் தவிர மற்றயாவரும் வாருணிக்கு ஸ்னானத்திற்குச் சென்று விட்டார்கள். சமையல்காரர்கள் மட்டுமே வீட்டிலிருந்தார்கள். ஒன்பது மணிக்குக் கோவிலிலிருந்து திரும்பிவந்த ஈசுவரய்யர் திண்ணையில் படுத்துக் கொண்டார். அடுத்த அறையில் பேசிக்கொண்டிருந்த ஹேமாவும் ராஜாவும், ஒருநாளும் அவ்விதம் படுக்காதவர் அப்படிப் படுத்துக்கொண்டதும், திடுக்கிட்டு இருவரும் அவரருகில் வந்து "அப்பா உங்களுக்கு என்ன செய்கிறது?" என்றாள் ஹேமா.

"வாயுக்குத்து, வழக்கத்தைவிட இன்று சற்று அதிகமாக இருக்கிறது. சுக்கு வெந்நீரும், வெந்நீர்பையில் ஒத்தடத்திற்கு வெந்நீரும் கொண்டுவா" என்றார் ஈனசுவரத்தில். அவள் உள்ளே செல்லும்பொழுது, "நாராயணனை வரச் சொல் ஹேமா, வண்டியைக் கொண்டுபோய் டாக்டரை அழைத்துவரச் சொல்லவேண்டும்" என்று டாக்டருக்கு ஆளை அனுப்பிவிட்டு அவர் பக்கத்தில் வந்த ராஜாவை, "ராஜா! ஹேமா வருமுன் உன்னிடம் சில விஷயம் சொல்லவேண்டும். என்னருகில் உட்கார்" என்றார். பக்கத்தில் உட்கார்ந்தவனின் கையைப் பிடித்துக்கொண்டு, "ராஜா! உனது கலை ஆர்வமே உனது உணர்ச்சிகளை அடக்கியாளச் செய்கிறது. அது விஷயம் மற்றப்பேர் புரிந்துகொள்ள முடியாது. என் மனம் உன்னைப் புரிந்துகொண்டு விட்டதினால்தான் நான் மற்றப்பேர் சொல்வதைக் கவனிக்கவில்லை; மனக்கவலையும் வைக்கவில்லை. நான் ஜீவித்திருப்பதானால் இதுகூட உன்னிடம் பேசமாட்டேன், இன்னும் சில மணி நேரமே என் ஜீவன் நிற்கும். பெண் மனம் அவச்சொல்லைத் தாங்குவது சற்றே சிரமம். கூடிய சீக்ரம் உலகவழக்கத்தைச் செய்துவிடு. எட்டு வயதிலேயே உன்கையில் ஒப்புவித்து விட்டேன், இருவரின் மணக்கோலத்தைக் காணக் கொடுத்துவைக்கவில்லை. என் மனக்கண்ணால் அதை இப்பொழுது காணப்போகிறேன். அவள் மனம் குழந்தை பிரதிபாவின் வளர்ப்பில் தான் செல்லுகிறது என்றாலும், இயற்கையை வெற்றி காணுவது கடினம். இதுதான் எனது இறுதி உபதேசம்" என்றார்.

திணறிவரும் மூச்சையும், தயங்கித்தயங்கிவந்த பேச்சையும் கண்டு ராஜாவின் மனம் துயரத்திலாழ்ந்தது. மாமா நீங்களாவது என் மனதைப் புரிந்து கொண்டதானது எனக்கு எவ்வளவு ஆனந்தமாகவும், நிம்மதியாகவும் இருக்கிறது தெரியுமா? என் அன்னைகூட என்னைப் புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் நினைத்தது சரியே. ஸ்ரீநாத சர்மாவின் இரண்டாவது பரிசும் பெற்ற பிறகே கணவன் மனைவியாகலாம் என்று நினைத்தேன். இப்பொழுது நீங்கள் பிழைத்துவிட்டால் நாளை வெள்ளிக்கிழமையே புவனேசுவரர் சன்னிதியில் கல்யாணத்தை நடத்திவிடலாம்" என்றான். யாவரும் வந்திருக்கும் சமயம் தமது அந்திமகாலம் வருவது கண்டு அந்த நிமிஷம் வரை சந்தோஷப்பட்டிருந்தவர் 'நாளையே கல்யாணம்' என்ற ராஜாவின் சொல்லைக்கேட்டதும் புவனேசுவரர் இந்தப் பூட்டுக்குமட்டும் பிழைக்கும்படி செய்துவிடட்டும் என்று எண்ணினார், அந்தச் சமயம் வெந்நீருடன் ஹேமா அவ்விடம் வந்தாள். வெந்நீரைக் குடித்தார். பக்கத்தில் உட்கார்ந்து ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்த ஹேமாவின் கையைப் பற்றி ராஜாவின் கையில் வைத்து இருவர் கைகளையும் தம்கையினால் சேர்த்துப் பிடித்து கண்களை மூடித்திறந்தார். ஹேமா ஒருமுறை ராஜாவைக் கூர்ந்து பார்த்தாள்.

"ஹேமா! உன் குறை கூடிய சீக்கிரம் தீர்ந்துவிடும். எனக்குப்பின் நீ ரொம்ப அமோகமாக வாழ்வாய்" என்றார் "அப்பா! என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? எப்பொழுதும் வரும் வாயுக்குத்து தானே?"

"இல்லையம்மா! இன்று அதிகமாய் இருக்கிறது. மூச்சுவிடமுடியவில்லை. மாரை வலிக்கிறது" என்று திணறித் திணறிச் சொன்னார்.

"அப்பா!" என்றாள். அவ்வளவே தேம்பித் தேம்பிஅழலானாள். அவள் கையிலிருந்த பையை வாங்கித் தானே ஒத்தடம் கொடுத்தானே தவிர அவளைச் சமாதானம் செய்யவில்லை ராஜா.

"அழாதேயம்மா. ராம ராமா என்று சொல்லு. விஜயாவைக் கூப்பிடு. உன் மாமியாரையும் கூப்பிடு" என்றார்.

"மாமியார்" என்ற வார்த்தை கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். ராஜாவினிடம் அவர் சொன்னதொன்றும் அவள் அறியாளாதலின், அவன் அவருக்கு ஆறுதலாக ஏதாகிலும் சொல்லுவான் என்று எதிர்பார்த்தாள். அவன் மௌனம், அவள் மனதைச் சுட்டது. அந்தச் சமயம், ஆற்றிற்குச் சென்றவர்களும், டாக்டரும் வந்துசேர்ந்தார்கள். தந்தையின் நிலைமையை ஒரு நொடியில் யூகம்செய்துகொண்ட விஜயா, அப்பா! என்று அலறிய வண்ணம் ஹேமாவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். பெண்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்த தந்தையைநோக்கி

"அப்பா, ஹேமாவைப்பற்றிக் கவலைப்படாதேயுங்கள். அவள் எனது முதல் குழந்தை. நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றாள். மௌனமாக ஒத்தடம் கொடுக்கும் ராஜாவின் மீது அவளுக்கு அடக்க முடியாத கோபம் ஏற்பட்டுவிட்டது. அதுவரை அதிகமாகப் பேசியறியாத ராஜாவைப் பார்த்து, "அவருக்கு ஆறுதலாக ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா?" என்றாள்.

"நான் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. அவருக்கு எல்லாம் தெரியும்" என்றான். அதற்குள் டாக்டர் அருகில் வந்து பரிசோதனை செய்யவே ராஜா எட்டிப் போய்விட்டான்.

"நாடி விழுந்துவிட்டது. ஆனால் வயது சென்றவர்களைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. இரண்டுமணி அவகாசம் தாண்டினால் நிச்சயம் பிழைப்பார்" என்று சொல்லிவிட்டு, ஏதோ ஊசி போட வந்தார். தமக்கு வேண்டாமென்று ஒரே பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

பிரேமாவின் தந்தை விச்வநாத சர்மா அவர் தலைமாட்டில் வந்து உட்கார்ந்து ராமஜெபம் பண்ண ஆரம்பித்தார், நடுவே அவர்காதுக்குள் வாயை வைத்து, "ராஜாவைச் சீக்கிரமாக ஹேமாவைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லுங்கள்" என்றார்.

"அவன் என்ன குழந்தையா? தானே காலம் வந்தால் செய்து கொள்ளுகிறான். அவளை என்றே அவனிடம ஒப்புவித்துவிட்டேன். எனக்கு யாதொரு கவலையுமில்லை' என்றுஹீனஸ்வரத்தில் பேசினார்.

ராஜாவின் தாயாரைப் பார்த்து, 'ஹேமா' என்று வாயெடுத்தவர் மேலேபேச முடியாமல் திணறினார். சுற்றிலும் யாவரும் ராம ஜபம் செய்ய, அவர் வாயும்



ஈசுவர ஐயர் வீட்டில்

"ராமராம" என்று முணுமுணுக்க, கையைக் கூப்பியபடியே ஆழ்ந்த நித்திரையிலாழ்ந்து விட்டார். அவர் பேச்சை முடிக்கு முன்னமேயே, 'ஹேமா என்றும் என் குழந்தை" என்றாள் ராஜாவின் தாய்.

கடைசியாக அவள் வந்து போய் ஆறு மாதத்திற்கு மேலாகிவிட்டது. என்றாலும், தந்தை மகளைக்காண அதற்குள் மும்முறை சென்று வந்தார். அன்று அவள் போகும்பொழுது, இனிமேல் உத்ஸவ காலத்தில் யாவருடனும் வருவதன்றித் தனியே வருவது என்பது கூடாது என்று நினைத்த வண்ணம் சென்ற ஹேமா, "இன்றுதந்தை பிழைக்கமாட்டார்" என்ற நிலைமை ஏற்பட்டவுடன் "நாம் இனிவரவேண்டாமென்று புவனேசுவரர் செய்து விட்டாரா? அன்று தந்தையிடம் என்றாகிலும் மனம் வெறுத்து இவ்விடமே வந்தால்? என்று கேட்டதற்கு அடைக்கலம் தந்த தந்தையே இல்லாத அவ்வூருக்கு இனிஎப்படி வரமுடியும்? இனி ராஜாவைத்தவிர வேறு கதியே இல்லை" என்று நினைக்கும்பொழுது, விஜயாவின் அப்பா! என்ற அலறல் அவளைத் தந்தையைக் கவனிக்கும்படி செய்தது. "அப்பா ஆதரவு என்ற சொல்லும் அற்றுவிட்டதே" என்று தந்தையின் மிருததேகத்தின் மார்பில் முகத்தைப்புதைத்து விம்மினாள் ஹேமா. சற்றுப்பொறுத்ததும் அப்படியே துவண்டு மயங்கியபடி விஜயாவின்மீது சாய்ந்துவிட்டாள். அதைக்கண்ட ராஜா ஒரே எட்டில் அவளருகில் வந்து குழந்தையைத் தூக்குவதுபோல் தூக்கி, திண்ணைக்கடுத்த ரேழியில் படுக்கவைத்தான். கூடவந்தவர்களைக் கூட்டம் போடவேண்டாமென்று அமர்த்திவிட்டு, டாக்டரை அழைத்தான். மூக்கில் எதையோ காண்பித்தார். கண்ணை விழித்தாள். பக்கத்தில் நின்ற விஜயா, "ஹேமா உனக்கு என்ன செய்கிறது?" என்றாள்.

"ஒன்றுமில்லை" என்பதாக மண்டையை ஆட்டினாள். உடனே "இப்பொழுது அவளுக்கு வேண்டியது உங்களின் ஆறுதல் மொழி. தயவுசெய்து என் சகோதரிக்கு உயிர்ப்பிச்சை அளியுங்கள்" என்று சொல்லிவிட்டு, "வா, மூர்த்தி நாம் போகலாம்" என்றாள். அழுதவாறு அவர்கள்சென்றதும், தன் மடிமீது கிடக்கும் ஹேமாவின் முகத்தருகில் குனிந்து, 'ஹேமா! நானிருக்கும்பொழுது உனக்கு வேறு யார் ஆதரவு வேண்டும்?" என்றான் அன்பு கனிந்த குரலில்.

மயக்கம் தெளிந்த நிலையில் அவனையே பார்த்துக்கொண்டிருந்தவள், "நான் என்றோ உங்கள் அடைக்கலப் பொருள். தாய் தகப்பன் இரண்டுமாக விளங்கியவரின் பிரிவு அவ்விதம் சொல்லும்படியாகிவிட்டது" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறியபடி எழுந்து உட்கார்ந்தாள்.

"இன்னும் சற்றுநேரம் படுத்திரு. பிறகு எழுந்தால் மற்ற விஷயங்களைக் கவனிக்க ஸௌகர்யமாக இருக்கும்" என்று அவளைப் படுக்கவைக்கும் நோக்கத்துடன் கையைப் பற்றினான்.

"கையை விடுங்கள். இப்பொழுது எனக்கு ஒன்றுமில்லை. பேசும் வம்புக்கு வட்டியாக, தகப்பன் பிரேதம் கிடக்கும்பொழுது, மடியில் படுத்துக் கொஞ்சுகிறாள் என்று வசைச் சொல்லிற்காளாகவா?" என்று அழுதவாறு கூறியபடி எழுந்து நின்றாள்.

"இப்படிச் சொல்லுவார்கள், சொல்லுவார்கள் என்று மனதைக்கஷ்டப்படுத்தியே உனக்கு இம் மயக்கம் வருகிறது. ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளாதே. உன் மனோபலத்தில் நட, என்று எவ்வளவு தடவை சொன்னாலும் உன் புத்தியில் ஏறமாட்டேனென்கிறது. நீ இப்படி மயங்கும்பொழுது என் ஹ்ருதயம் நின்றுவிடுவது போன்ற உணர்ச்சி தோன்றுகிறது. உனக்காக இல்லாவிட்டாலும், எனக்காகவேனும், தைரியமாக நடக்கமாட்டாயா?" என்று கெஞ்சுவதுபோல் நிமிர்ந்து நோக்கி அவள் கையைப் பற்றியவண்ணம் கேட்டான்.

அவன் தோற்றம் அவளது துக்கத்தைச் சற்று மறக்கச் செய்துவிட்டது. "நீங்கள் இப்படிப் பேசுவது என்னை என்னவோ செய்கிறது. உங்கள் சொற்படி நடக்கிறேன். வாருங்கள், அவ்விடம் போகலாம்" என்றாள் அழுகையை அடக்கியவளாக.

அனாயாச மரண மெய்திய ஈசுவரய்யருக்குக் கோவில் மரியாதைகளுடன் ஈமக்கிரியைகள் நடந்தன.

* * * *

ஈசுவரய்யரின் மரணத்திற்குப் பின் ராஜாவின் நடத்தையில் மாறுதலேற்படக்கூடும் என்று யாவரும் எதிர்பார்த்தார்கள். ஒருவருஷம், மாறி மற்றொரு வருஷம் வந்ததே தவிர, அவன் செய்கையில் யாதொரு மாறுதலுமில்லை. ஹேமாவும்கூட, "தந்தைக்குப்பின் நமக்கு ஏதாவதுவழி பிறக்கும்" என்றுதான் எதிர்பார்த்தாள். ஒரேஒரு மாறுதலைத்தான் அவள் கண்டாள். வேலை நேரம், தூங்கும் சமயம் தவிர, மற்றப் பொழுதை அவளுடன் கழிக்கவே விரும்புகிறான் என்ற ஒரு விஷயந்தான். குழந்தை விஷயத்தில் அவள் காட்டும் சிரத்தைகூட அவனுக்குப் பொறாமையாக இருப்பது போல் தோன்றும்படி,

"என்னைவிட உனக்குப் பிரதிபாதான் மேல். உன் உலகம் பிரதிபா, அப்படித்தானே" என்பான்.

"சந்தேகமில்லாமல் என் உலகம் அவள்" என்பாள்.

நிலவு நாளானாலுமே, இருட்டுநாளில் நக்ஷத்ர வெளிச்சமானாலுமே, மொட்டை மாடியில் உட்கார்ந்து பேசுவது இரவு சிலநாள் ஒரு

மணிகூட ஆகிவிடும். ஒருநாள்கூடத் தவறுவ தில்லை. மழை பெய்தால் மட்டும் நடு ஹாலில் உட்கார்ந்து பேசுவார்கள். பேசும் விஷயம் ஒரே ஓர் இரவு தவிர மற்ற நாட்களில், நடனத்தைப்பற்றியும் இன்ன பதம், இன்ன அர்த்தம். தாளக்கட்டு இவைகளைப்பற்றியோ ஊர்க்கதைகளோ அல்லது அவன் விவாதிக்கும் கேஸ் விபரமோ இவைகளைப் பற்றியதாகத்தா னிருக்கும். அந்த ஒரு நாளில் இருவரும் சற்றே விட்டுக் கொடுத்திருந்தால் வாழ்க்கை எப்பொழுதோ நிறைவு பெற்றிருக்கும். அன்று பௌர்ணமி. தண்ணொளியை வாரியிறைத்தான் தாமரையின் அன்பன். தலையைக்கையில் தாங்கிய வண்ணம் படுத்திருந்தான் ராஜா. அவன் பக் கத்தில் துண்டைவிரித்து, குழந்தை தூங்கினாள். குழந்தைக்கு அடுத்தாற்போல் ஹேமா. அன்று அவள் வெள்ளையில் ஜரிகை பார்டர் போட்டபுடவையும், அதே ஜாக்கெட்டும் அணிந்து உட்கார்ந்திருந்தது, கலைமாதின் அவதாரமோ வென்று எண்ணும் படியாக இருந்தது. அன்று வந்ததும் வழக்கம்போல் வார்த்தையாடாமல் அவளை உற்றுப்பார்த்து ரசித்தவண்ணம் படுத்திருந்தான். நீண்ட நேர மௌனம் அவளுக்கு எரிச்சலை உண்டாக்கிற்று.

"இன்று என்ன மௌனவிரதமா?" என்றாள்.



இன்று உன் தோற்றம் மிக அற்புதம்

"இன்று உன் தோற்றம் மிக அற்புதம்; அதை ரசித்தேன்."

''சரி ரசித்தாகிவிட்டதல்லவா? நான் செல்லு கிறேன்' என்று குழந்தையை எடுக்கப்போன வளின் கையைப்பற்றி," கோபித்துக் கொள்ளாதே ஹேமா! உன்னிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். எப்படிக் கேட் பது' என்ற சிந்தனைதான் வாய்க்குப் பூட்டுப் போட்டது.' நான் கேட்கப் போகும் விஷயத் திற்கு நீ உன் அந்தரங்கமான, உண்மையான அபிப்பிராயத்தைக் கூறவேண்டும், எனக்காகவோ உலகத்துக்காகவோ, பிரதிபாவிற்காகவோ கூறக் கூடாது" என்றான்.

'அப்படியே சித்தம் பிரபு.' என்று சிரித்தாள்.

'என்னுடன் தாம்பத்ய உறவு வைத்துக் கொள்ள உனக்கு விருப்பமா? உண்மையை ஒளிக்காயல் சொல்லு'

'உங்கள் விருப்பம்?' என்றாள் பளிச்சென்று பதில்.

'என் விஷயம் வேறு. வாழ்க்கையின் கனியை ருசிபார்த்தவன். கிடைத்தாலும் ஆனந்தத்துடன் ஏற்பேன். இல்லையானாலும் பரவாயில்லை. உன் மனம்தான் முக்யம்.'

இக்கேள்வி அவளின் மனதில் போராட்டத்தை எழுப்பிவிட்டது. என் விருப்பம் இன்னும் இவ ருக்குத் தெரியவில்லையா? இதென்ன கேள்வி? வாழ்க்கையை ருசிபார்த்துவிட்டாராம். அதனால்? எனக்காக, அவர் லக்ஷ்யத்தைத் தியாகம் செய்வ தாக அர்த்தம்? என் பெண்மை அவ்வளவு கேவ லமா?' என்று நினைக்கும்பொழுது ஒரு குரல் வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. பிறகு இப்படியே ரோசப்பட்டுச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டுப் பின்னால் வருந்துவதே நமது உரிமை யாகி வருகிறது. விருப்பம் என்று சொல்லி விட்டால்? அம்மா! பிறகு ஒருவரும் ஒன்றுமே சொல்லமாட்டார்கள். இப்படி இரவுதோறும் உணர்ச்சிகளை அடக்கி இயற்கையை வெற்றி காண் பதாக எண்ணிக்கொண்டு மொட்டைமாடியை அடைக்கலம் புக வேண்டாம்; சொல்லிவிடலாமா' என்று நிமிர்ந்தாள். அவன் புன்சிரிப்புடன் தன்னையே பார்ப்பதைக் கண்டதும், அவளைக் கேலி செய்வதுபோல் தோன்றவே, 'சே. என்ன மதியீனம். கேட்கவேண்டிய வசைச்சொல் ஒன் றுமேபாக்கியில்லை. இப்படியே எவ்வளவு இரவு வேண்டுமானாலும் பேசிக் கழிக்கட்டும். இவருக்கு நாம் சளைத்தவளில்லையென்பது நன்றாக மனதில் படட்டும்.' என்று நினைவு ஓடவே வழக்கப்படி அவள் பெண்மைதான் வெற்றி கண்டது.

இவளது மௌனத்தைக் கண்டவன் "என்ன யோசிக்கிறாய்? மனதிலுள்ளதைச் சொல்ல யோசனை என்ன?" என்று கையை இறுக்கிப் பிடித்தான்.

'அன்றே நான் என் எண்ணத்தைச் சொல்லி விட்டேனே'

'என்று என்ன சொன்னாய்,?'

'இரண்டு வருஷத்திற்கு முன் ஒரு நாள், சாயங் காலம் தலையைப் பற்றி இழுத்து விளையாடினீர் களே, அன்று. உங்களைப் பார்த்துக் கொண்டே இருப்பதால் தான் என் மனம் சாந்தி அடைகி றது. அதற்கு மேல்.........'

'இன்றும், அதே பதில்தானா?'

'அப்படித்தான் வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு உங்கள் விருப்பம் போல் நடக்கக் காத்துக் கொண்டிருக்கிறேன்.'

'இம்முறை அவன் மனம் கட்டவிழ்ந்தலைக் கொண்டது. உன் விருப்பம்தான் என் விருப்பமும்' என்று சொல்லிக் கொண்டே பிடித்திருந்த அவள் கையை விட்டுவிட்டு, திரும்பி ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் அண்ணாந்து படுத்துக் கொண் டான், நீண்ட மூச்சு விட்டவாறு.

தளும்பி நின்ற கண்ணீரை மறைக்க மறுபுறம் திரும்பிக் கொண்டாள் ஹேமா. சற்று நேரம் அமைதியில் சென்றது. சற்றுப் பொறுத்து, 'இன்று நீங்கள் மௌனத்தைக் கடைப் பிடிக் கிறீர்கள். மனம் சரியில்லை போலும். நான் வருகிறேன்' என்று குழந்தையை எடுத்துக் கொண்டு எழுந்து நின்றாள்.

'உம்' என்றான் திரும்பாமல்.

அவன் படும் மன வேதனை அவள் மனதைத் தொட்டது. ஒரு நிமிஷம் தயங்கி நின்றாள். பக் கத்தில் உட்கார்ந்து, அவன் மனம் குளிர...... என்று நினைத்தாள். மறு நிமிஷம் ஏன் அவர் அவ்விதம் செய்யக்கூடாது என்ற சுயமரியாதை தோன்றவே வர்ரேனச் சென்றுவிட்டாள்.

மறு நாள் யாதொரு மாறுதலுமின்றிச் சிரித்துப் பேசிவிட்டுக் கோர்ட்டுக்குச் சென்ற, ராஜாவின் தன்மை குறித்துச் சிந்தித்தவளாக, அந்த அறையை விட்டு வர மனமில்லாதவள் போல் நின்று கொண்டிருந்த ஹேமாவை, அந்தச் சமயம் ஏதோ எடுக்க வந்த மூர்த்தி, 'சகோதரி, ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்' என்று கேட்டான்.

'ஒன்றுமில்லை' என்று சுருக்கமாகப் பதிலளித் தாள்.

'உங்களிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டு மென்று தோன்றுகிறது. கேள்வி அனுசிதமா கப்பட்டால் மன்னித்துவிடுங்கள்.'

'என்ன விஷயம்? தாராளமாகக் கேளுங்கள்.'

'அவர் உங்கள் மீது உயிரை வைத்திருக்கிறார் என்றால் மிகையாகாது. ஆனால் ஏதோ ஒருவித மனப்பிராந்தியில் தான் உங்கள் விவாகம் தடை பட்டு நிற்கிறது. நீங்கள் ஏன் முயற்சிக்கவில்லை? நான் ஏன் இப்படிக் கேட்கிறேனென்றால், உல கம் இயற்கைக்கு மாறுபாடாக நடப்பதை லக்ஷ யமென்று நினைக்காது. அனாவசியமாக உங்கள் பெயர் அடிபடுவதைக் கேட்க என் மனம் மிக வருந்துகிறது. அத்தாபத்தில் உங்களைக் கேட்கத் துணிந்துவிட்டேன்.'

'பாபி! நான் முயற்சித்துப் பலனில்லை. வசைச் சொல் என்பது என் விஷயத்தில் பாலும் சாத மாகிவிட்டது. அவ்வளவுதான்.'

'நான் ஓர் உபாயம் சொல்லுகிறேன். அந்த வழி கொஞ்சம் சிரமம் தான். அது விஷயம் அவர் நன்மைக்காகவும், தாயாரின் மனச்சாந்திக்குமாக வென்று நினைத்துப் பாடுபட வேண்டும். இந்த நிலைமையிலேயே சென்றால் கூடிய சீக்கிரம் அவ ரின் தேக ஆரோக்கியம்கூடக் கெட்டுவிடும் போல் தோன்றுகிறது. அம்மாவோ, சொல்லவே மன மில்லை. அன்று வரலக்ஷ்மீ பூஜையன்று, என்னி டம் கண்ணீர்விட்டே புலம்பினார். "எங்கள் குடும் பத்திலுள்ள இப்பூஜையை ஹேமா செய்ய முடியா மல் செய்திருக்கிறான். வாத்தியார் மனைவியைக் கொண்டு செய்யச் சொல்லுகிறேன். ஊரார் கேலிக்கும் ஆளாகினேன்.

"சொன்னால், கல்யாணம் செய்யாவிட்டால் பூஜை செய்யக்கூடாதா? செய்யச் சொல்லேன், அவளுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது என்று பதில் சொல்லுகிறான். எனக்கும் ஆக்ஷேபனை யில்லை. 'ஊரோடு ஒத்தோடு' என்பதுதானே பெரியோர்கள் வாக்கு. என்றைக்கு நிலைமை மாறுமோ, இல்லையானால் இப்படியேதான் என் தலை சாயப்போகிறதோ,' என்றார். "இவையெல் லாம் சிந்தனை செய்தே துணிந்து இன்று உங்க ளிடம் சொல்லவந்தேன். மனப்ராந்தி விலக ஓர் அதிர்ச்சி தேவை, நீங்கள், அவர் பார்க்கும் பொழுது என்னிடம் சற்றுச் சிரித்துப்பேசுங்கள் அவ்வளவே?"

'ஐயோ! நெருப்புடன் விளையாடினால்?? அவ ரின் வெறுப்பிற்கு ஆளானபின் இவ்வுலகில் எனக்கு இடமில்லை'

'அவர் ஒருநாளும் உங்களை வெறுக்க முடியாது. கண்டிப்பாக நிலைமை மாறும். என் பேச்சை நம் புங்கள். நேர்மைக்கு ஒருநாளும் பழுதில்லை, அவர் ஆரோக்யம் கெடுவதற்கு முன்னால் நீங்கள் இக்காரியம் செய்யவேண்டும். பின்னால் வருந்து வதில் பலனில்லை.'

கொஞ்ச நாட்களாகத் தலைவலியும் சோர்வும் அடிக்கடி வருவதை நினைத்துப் பார்க்கும்பொழுது அவள் மனம் குழம்பிற்று. சரி, ஒன்றுபடவேண் டும், அல்லது பிரியவேண்டும். இப்படியே போவது என்பது சரியாகாது என்ற முடிவில் சரி யென ஒத்துக்கொண்டாள்.

ஒரு மாதத்திற்குள்ளேயே பலன் தெரிவது போல் தோன்றியது. 'உன்னிடம் ஏதோ சொல்

லிக்கொண்டிருந்தானே என்ன விஷயம்? நீயும் குதூகலத்துடன் பதில் சொல்லிக்கொண்டிருந்தாயே' என்று சாதாரணமாகக் கேட்டாலும் அவன் குரலில் தொனித்த கடுமையும், ஊடுருவிப் பார்க்கும் கண்களும் அவன் மன நிலையைத் தெள்ளென எடுத்துக்காட்டின.

அந்த மாதக் கடைசியிலேயே ஸ்ரீராமநவமி உத்ஸவ நிமித்தம் யாவரும் ஊருக்குச் சென்றார்கள். வழக்கம்போல் சிவஸ்வாமி முதலிய யாவரும் ஒன்றுகூடினார்கள். பிரபல வித்வான்களும் வந்திருந்தார்கள். அன்று உத்ஸவத்தின் எட்டாவது தினம் ஹேமாவின் நடனம். பஞ்சரத்ன கிருதிக்குப் புதிதாகப் பாவம் பிடித்து நடனம் செய்யப்போவதைக் காண்பதற்காக, சமூகத்தில் அந்தச் சமயம் மிக மிகப் பெயரும் புகழும் பெற்று விளங்கிவந்த பிரபல சங்கீத வித்வான்கள் நாலு பேர் அன்று காலை வந்தார்கள். அவர்களை வரவேற்று உபசரித்து அவர்கள் விடுதியில் விட்டுவிட்டு, பஜனை மடத்திற்கு வந்தவன், பிராகாரத்திலிருக்கும் மடைப்பள்ளியில் அன்று செய்யவேண்டியவைகளுக்குச் சொல்லுவதற்காகப் பிராகாரத்தின் வடக்குப் பக்கமாகத் திரும்பினான். அந்த இடத்தில் அவ்வூரில் 'சொல்சேர்த்தியுள்ளவர்கள்' என்று கிராமப் பாஷையில் சொல்லும் (கௌரவமும், பணமும், மிகுந்து பாரபக்ஷமின்றி நியாயமான விஷயத்தை, மனிதர்களுக்காக அல்லாது விஷயத்திற்காக எடுத்துச் சொல்லுபவர்கள். அவர்கள் சொன்னால் அந்த விஷயத்திற்கு எவரும் கட்டுப்பட்டு நடப்பார்கள்.) நாலைந்துபேர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். ராஜாவைக் கண்டதும் 'வா ராஜா நல்ல சமயத்தில் வந்தாய்? உன்னைக் கூப்பிட்டனுப்பவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தோம்' (அதில் அவன் மாஜி மாமனாரும் இருந்தார்) 'என்ன விஷயம்? பெரியோர்கள் கிருபை' என்று புன்சிரிப்புடன் அருகில் வந்து நின்றான்.

'இன்று ஹேமாவின் புதிய பாணி நடனம் பார்க்க, நாம் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத மஹா வித்வான்கள் நம்மைத்தேடி வந்திருப்பது நமது ஊர் செய்த பாக்யம். அதற்குக் காரண கர்த்தா நீ. இச்சிறு வயதில் நீ இவ்வளவு புகழ் பெற்று விளங்குவது நம் ஊருக்கே பெருமைதரும் விஷயம். நல்ல விவேகியாகவும் புத்திசாலியாகவுமிருக்கிறாய் ஆனால்.........என்று நிறுத்தினார்.

'ஆனால் என்ன மாமா குறை. யோசியாமல் சொல்லுங்கள்'

'நீ ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை...? காரணம் ?'

'நான் பிரும்மசாரியல்லவே எனக்கு ஒரு குழந்தை இருக்கிறாள் என்பது உங்களுக்குத் தெரியாத விஷயமல்லவே?'

'என்னப்பா எங்களையே ஆழம் பார்க்கிறாயே. அதுவல்ல நாங்கள் கேட்பது. ஹேமாவை நீ ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்பது?'

'கல்யாணம் செய்து கொண்டுவிட்டால் கலைக்கு இடையூறு நேரிடும், அது தான் காரணம். தவிர, மற்றப்படி அவளுக்குக் குடும்பத் தலைவிக்குள்ள சகல உரிமைகளையும் கொடுத்திருக்கிறேன், இதில் தவறு என்ன?'

'அதில் தான் தவறு? கல்யாணத்தினால் கலைக்கு யாதொரு பாதகமும் ஏற்படாது. நீயே கணவனானால் அவள் கலை முன்னேற்றத்திற்குத் தடை யார்? அப்படித் தடையென்று தோன்றினால் கல்யாணத்தைச் செய்துவிடு. பிறகு அவளைக் கன்னிகையாகவே இருக்கும்படி நடந்து கொள். யார் உன்னைக் கேட்பார்கள்?'

'பெரியோர்களை எதிர்த்துப் பேசும்படி நேர்ந்ததற்கு வருந்துகிறேன். உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. மனைவி என்ற உரிமை தோன்றிவிட்டால் மனதின் தன்மை நம்மை மீறி விடும். இந்த நிலைமை தான் கட்டுப்பாடு தரும்' என்பது எனது லக்ஷ்யம்.

'அப்பொழுது ஒரு காரியம் செய், நீ வேறு நல்ல பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டுவிடு."

'எதற்காக?'

'உலக அபவாதத்தைப் போக்க'.

'உலகத்திற்கு வேலையென்ன? நான்கு வருஷ காலமாக மனம் உறுதியாக இருந்ததால் ஆணும் பெண்ணும் சேர்ந்து ஓரிடத்திலிருப்பதில் தாம்பத்ய உறவு அவசியமில்லை' என்பதை-என் லக்ஷ்யத்தை-அனுபவத்தில் கண்டு கொண்டேன். அவளும் என் லக்ஷ்யத்தையே விரும்புகிறாள். அதனால் நானும் வேறு பெண்ணை மணக்க முடியாது. அவளும் வேறு ஒருவனை மணக்கமாட்டாள். எங்கள் இருவருக்கும் கல்யாணம் நடக்க வேண்டுமென்பதில்லை. உலகத்தைப் பற்றி அக்கரையில்லை.'

'அவளை வேறு யாரும் மணக்க முன் வரமாட்டார்கள். உலகத்தை அவ்வளவு தூரம் அலக்ஷ்யம் செய்ய முடியாது. வருவது பீமன் என்று தெரிந்தும் நாம் ஏன் ஓட வேண்டும் என்ற கேட்ட தருமருக்கு 'ஊரோடு ஒத்தோடு' என்று குந்தி பதிலளித்தது போல், கொஞ்சமாகிலும் உலக வழக்கிற்குக் கட்டுப்பட்டு நடப்பது தான் மனிதத் தன்மை. சுற்றிச் சுற்றிப் பேசாமல் உன் முடிவைச் சொல்லு.'

'அது தான் சொல்லிவிட்டேனே, இப்படியே இருப்பதில் தான் எங்கள் லக்ஷ்யத்தின் வெற்றியைக் காண முடியும்.'

'இதைப் பார் ராஜா, நேர் பாதையை விட்டுவிட்டுக் குறுக்குப் பாதையில் பாய்வது நல்ல முடிவைக் காண்பிக்காது. இப்பொழுது நாங்கள் உன்னை எச்சரிக்க வந்தது உனக்காகவல்ல

கோவில் பரிசாரகரானாலும் கண்யமாக வாழ்ந்த மஹான் ஈசுவர சர்மாவின் பெண்ணிற்காக. அவர் வயிற்றில் பிறந்த அந்தக் குழந்தைக்கு உலக அபவாதம் கூடாது. உன்னையும் உன் செயலையும் நாங்கள் நம்புகிறோம். ஆனால் உலகம், நீ மனை வியாக்கிக் கொள்ள முடியாத அருவருப்பான வழி யில் அவளைச் செலுத்தியே பொன்னும் புகழும் தேடுகிறாய் என்ற பொருள் கொள்கிறது. நீ உன் முடிவை மாற்றிக் கொள்ளாவிட்டால் இனி மேல் அவளை உன்னுடன் அனுப்பமாட்டோம். அவள் சகோதரியினிடம் சேர்த்துவிடுவோம். போதும் ஆட்டமும் பாட்டும்.'

'என்னைவிட்டு அவளைப் பிரிக்க யாருக்கும் உரி மையில்லை.'

'எந்த விதத்தில் உனக்கு உரிமை இருக்கிறது? நாலுபேரை வைத்துப் பஞ்சாயத்துப் பேசினால், எந்த விதத்தில் உரிமையை ஸ்தாபிக்கமுடியும்?'

'அவன் பெண்ணை வளர்க்கும் தாதிஸ்தானம் கொடுத்திருக்கிறானே. அந்த உரிமை போருமே' என்றார் ஏளனமாக.

நிமிர்ந்து நோக்கினான். சொன்னவர் பிரேமா வின் தந்தை. ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துச் சிலை போல் நின்றான். சற்றுப்பொறுத்து 'நீங்களா இவ்விதம் பேசுகிறீர்கள்?' என்றான்.

'தங்க ஊசி என்றால் கண்ணைக் குத்திக்கொள்ள முடியுமா? குழந்தை என் பேத்திதான். அதற் காக நியாயத்தை விடமுடியுமா? பிரேமாவிற்குப் பின் ஹேமாதான் என் பெண் என்று நினைத்திருக் கிறேன். நீ கட்டுப்பட்டு நடக்கவில்லையானால், அவளை, சிவஸ்வாமி கூடவும் அனுப்பப்போவ தில்லை. என் வீட்டில் வைத்துக்கொண்டே தகுந்த ஏற்பாடு செய்துவிடுவேன். பெண்பால் என்ன செய்வாள்? தாயாரை அடக்கிவிடுகிறாய்?. கேட்பாரில்லை என்ற தைரியம்.'

'அட ஈசுவரா! இதென்ன ஏதோ செய்யத் தகாத காரியத்தைச் செய்துவிட்டதுபோல் பேசு கிறீர்கள். ஹேமா மேஜர். அவள் இஷ்டமின்றி நீங்கள் எதுவும் செய்யமுடியாது.'

'நீ வக்கீல் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் செய்வதைச் செய்கிறோம். நீ கோர்ட்டு மூலமாக வா' என்றார் ஒருவர்.

'ஏனப்பா வீண் விவாதம் செய்கிறாய். உன்னை ஒருவரும் கெட்டுப்போகச்சொல்லவில்லை. அக் குழந்தையின் பெயர் கெட்டுப்போகக்கூடாது என்பதுதான் எங்கள் வாதம். நீ ஒருபக்கம் ஹேமா ஹேமா என்று சுற்றுகிறாய். மூர்த்தி என்று ஒருவனை அழைத்துவைத்திருக்கிறாயே. அவன் வேறு சகோதரி சகோதரி என்று சுற்று கிறான். எல்லோருக்கும் மத்தியில் அகப்பட்டுச் செய்வதறியாமல் விழித்துக்கொண்டு நிற்கும் பரிதாபத்தை எவ்வளவு நாள் நீடிக்கவிட முடி யும்' என்று நிறுத்தினார் மாஜி மாமனார்.

இதுவரை இவர்கள் என்ன சொன்னாலும் சரி, கோர்ட்வரை போனாலுமே நமது இஷ்டப்படி தான் நடக்கவேண்டும், இவர்கள் பேச்சிற்குப் பணியக்கூடாது, என்ற உறுதிகொண்டிருந்த மனம், மூர்த்தியின் பெயரைக் கேட்டதும் சற்று நிதானிக்கத்தொடங்கியது. ஏற்கனவே மூர்த்தி யின்மீது சிறு துவேஷ மனப்பான்மை கொண்டி ருந்தவனாதலால் அவனால்தான் இந்நிலைமை ஏற் பட்டுவிட்டது, ஹேமாவின் மனதையும் கலைத்து விடுவதற்குமுன் ஓர் முடிவிற்கு வரவேண்டியது தான் என்ற நினைப்புத் தோன்றவே, பதில் தயார் செய்யலானான் அந்த நேரத்திற்குள்.

'நாலு பெயருக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக இருந்தால்தான் இனிமேல் இந்த உத்ஸவத்தில் நாம் ஒன்றுகூடமுடியும். இல்லையேல் நீ இதை நடத்தவேண்டாம். உன் ஹேமாவும் நடனமாட வேண்டாம். சட்டத்தைக்கொண்டு, குலவழக் கத்தை விடமுடியாது என்று வந்தாயானால், நீயே நடத்திக்கொள். இவ்வூரிலுள்ள ஏன், இப்பக்கத் திலுள்ள ஒரு காக்கைக் குஞ்சுகூட உன்னுடன் ஒத்துழைக்காது. ஏதோ கொஞ்சகாலம் பொறுத் துக் கல்யாணம் செய்து கொள்ளுவாய் என்று எதிர்பார்த்தோம், உன் வழி விபரீத புத்தியில் வகுக்கப்பட்டு, அதில் ஒரு பாவமும் அறியாத பேதையை இழுத்துச் செல்லுகிறாய். அதன் பிறகே நாங்கள் இவ்வளவு கடுமையாக நடந்து கொள்ள வேண்டி வந்தது. இது பற்றி வருந்துகி றோம்' என்றார் ஒருவர்.

'பெரியவர்களான நீங்கள் யாவரும் இவ்வளவு வற்புறுத்திச் சொல்லும் பொழுது என்னால் ஒன் றுமே நிதானிக்க முடியவில்லை. தயவு செய்து இன்று ஒரு நாள் அவகாசம் கொடுங்கள், நாளைக் காலை என் முடிவான தீர்மானத்தைச் சொல்லி விடுகிறேன்' என்றான்.

'உன் இஷ்டப்படி செய். ஹேமாவினிடம் மனம் திறந்து பேசினையானால் எங்கள் சொல் எவ்வளவு தூரம் உண்மை என்பது அவளின் பதி லில் தெரிந்துவிடும். நீ மூர்க்கம் கொண்டு இவ் வூரையே வெறுத்துச் சென்றாலும் சென்றுவிடு வாய், அப்படி நேராதிருக்குமாறு நல்ல யோசனை உன் மனதில் படும்படி செய்ய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை வேண்டுகிறேன்' என்றார் மாஜி மாம னார்.

(தொடரும்)

Edited & Published by N. R. Ramanujam & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.



## நீங்கள் எப்பொழுதாவது பென்சில் சீவுவதற்கு வாளை உபயோகிப்பீர்களா?

சுத்த மடத்தனம் என நீங்களே கூறுவீர்கள். ஆயினும் பாட்டரி ரேடியோ உபயோகிக்கும் அநேகர் குறைந்த சக்தி செலவில் திருப்திகரமாக ரேடியோ கேட்க முடிந்தாலும் கூட மிகவும் சக்தி வாய்ந்ததும் அதிக செலவு அளிக்கக் கூடியதுமான ஸெட்டுகளை உபயோகிக்கிறார்கள்.

குறைந்த செலவில் வேலை செய்யும் ஒரு ரேடியோ ஸெட் சக்தியை சிக்கனமாக செலவிட்டு உங்களுடைய பணத்தை எப்பொழுதும் மிச்சப்படுத்துகிறது. ஆகையால் நீங்கள் குறைந்த சக்தியில் வேலை செய்யும் ரேடியோ ஸெட்டை வாங்கி, பாட்டரியை வீணாக்காமல் திருப்திகரமாக ரேடியோ கேளுங்கள்.

ஆனால்
உங்களுடைய ரேடியோ
ஸெட் எதுவாயிருந்தாலும்

**EVEREADY**
TRADE-MARK

எவரெடி ரேடியோ பாட்டரிகளையே
உபயோகியுங்கள்

ஒரு
நாஷனல் கார்பன்
தயாரிப்பு

NCC 3607




The Cauveri Colour Press, Kumbakonam.